Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 312

ஞாயிற்றுக்கிழமை
05 ஒக்ரோபர் 2025

புரட்டாதி 19 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

## மின்கட்டண உயர்வு; 2 வாரத்தில் முடிவு!

கொழும்பு, ஒக். 5
மின்சாரக் கட்டணத்தை 6.8 சதவீதத்தால் உயர்த்துவது தொடர்பில், இலங்கை 14

சட்டவிரோதக் கடற்றொழிலை அங்கீகரித்து

# வடக்கு மீனவர்களை கருவறுக்கிறது அரசு

வடமாகாணக் கடற்றொழிலாளர்கள் வேதனை
அமைச்சர் சந்திரசேகர் மீது சரமாரிக் குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 5**

**சட்டவிரோதக் கடற்றொழில்களுக்கு எதிராக முன்னர் எம்முடன் இணைந்து போராடிய அமைச்சர் சந்திரசேகர், பதவிக்கு வந்த பின்னர் அத்தனை சட்டவிரோதக் கடற்றொழில்களையும் அங்கீகரித்து எம்மைக் கருவறுக்கின்றார் - இவ்வாறு வடமாகாணகடற்றொழிலாளர்கள்குற்றஞ்சாட்டியுள்ளனர்.** 14

## திஸ்ஸ விகாரைக்கு எதிராக மீண்டும் தொடர் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஒக். 5
தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்கு எதிராக மீண்டும் இன்றும் நாளையும் போராட்டம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு கோரியும், திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணி மற்றும் அதனைச் சூழவுள்ள காணிகளைக் காணி உரிமையாளர்களிடம் 14

## யாழ். போதனாவில் குருதித் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஒக். 5
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 'ஓ பொசிடிவ்' குருதி வகைகளுக்குத் தற்போது தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் குருதி வங்கிப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். 14



## குறிகாட்டுவான் இறங்குதுறை: சீரமைப்புப் பணிகள் ஆரம்பம்!

நெடுந்தீவு எரிபொருள் நிலையத்துக்கும் அமைச்சர் முன்னிலையில் ஒப்பந்தம்

விரிவு பக்கம்:- 05


யாழ். மாவட்டத்தில்

## சீரற்ற காலநிலை; 14 பேர் பாதிப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 5
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று அதிகாலை நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக, மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- 14



## வல்லிபுர ஆழ்வாருக்கு இன்று தேர்த்திருவிழா



யாழ்ப்பாணம், ஒக். 5
வரலாற்றுச் சிறப்புமிக்க வடமராட்சி துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த்திருவிழா இன்று காலை 9 மணியளவில் இடம்பெறவுள்ளது.
நாளை திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் வங்கக் கடலில் 14

### முச்சந்தி முரளி

'ஆட்சிக்கு வரமுதல் அணைப்பினம் ஆட்சிக்கு வந்தால் அடிப்பினம். இதுதானே அரசியல்வாதியளின்ர குணம் கண்டியளோ'

# சஞ்சீவி




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 04.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4214 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 08 17 19 30 |
| விசேட எழுத்து | A |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 04.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1281 |
| வெற்றி இலக்கினம் | தும்பம் |
| வெற்றி இலக்கங்கள் | 11 44 58 59 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 04.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0240 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கங்கள் | 6 5 8 3 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 04.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2320 |
| ஆங்கில எழுத்து | E |
| சுப்பர் இலக்கம் | 17 |
| வெற்றி இலக்கங்கள் | 06 22 50 52 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 04.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5972 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 8 9 3 5 7 2 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 04.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2002 |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கங்கள் | 20 55 74 80 |
| விசேட எழுத்து | R |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 04.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0547 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 3 5 7 2 |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 04.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0088 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 12 26 31 40 |

# வங்கிகளை தனியார்மயப்படுத்தாதே யாழில் தீப்பந்தப் போராட்டம்



யாழ்ப்பாணம், ஒக்.5

**அரச வங்கிகளில் நிலவும் பிரச்சினைகளை உடன் தீர்க்கவேண்டும் என்று வலியுறுத்தி தீப்பந்தப் போராட்டமொன்று யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டது.**

யாழ்ப்பாணம் மருத்துவமனை வீதியில் உள்ள இலங்கை வங்கி வடபிராந்திய காரியாலயத்துக்கு முன்பாக குறித்த போராட்டம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. அரச வங்கிகளின் சட்டத்திருத்தங்களினூடாக, வங்கி தனியார்மயப்படுத்தலை நோக்கி செல்லவுள்ளது. இதனைத் தடுத்துநிறுத்தவேண்டும் என்றும் போராட்டக்காரர்கள் இதன்போது தெரிவித்தனர். (ச-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 04.10.2025 | சனிக்கிழமை | 0680 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| N | 5 8 6 8 5 4 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 04.10.2025 | சனிக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2946 | L | 01 25 52 59 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 04.10.2025 | சனிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| V | 03 15 59 77 | 5007 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | தினம் |
| 04.10.2025 | சனிக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0784 | 16 25 26 |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 04.10.2025 | சனிக்கிழமை | |
| கன்னி | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| [illegible] | 35 46 50 51 | 4658 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 04.10.2025 | சனிக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| F | 29 | 07 24 47 73 | 2122 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 04.10.2025 | சனிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| I | 07 35 40 52 | 2772 |

## மரக்குற்றிகளை கடத்தியவர் கைது

யாழ்ப்பாணம், ஒக்.5

இயக்கச்சிப் பிரதேசத்தில் இருந்து அனுமதிப்பத்திரமின்றி சிறிய ரக பாரவூர்தியில் மரக்குற்றிகளை ஏற்றிவந்த ஒருவரை சாவகச்சேரிப் பொலிஸார் நேற்றுக் கைதுசெய்துள்ளனர்.

கைதடிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வீதிச்சோதனை நடவடிக்கையில் இந்தக் கைது இடம்பெற்றது.

பாரவூர்தியை பொலிஸ் நிலையம் கொண்டுசென்று சோதனை மேற்கொண்டதில் உரிய அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக வெட்டப்பட்ட வேப்பமரக் குற்றிகள் விறகுக்குள் மறைத்துக் கொண்டு சென்றமை தெரியவந்துள்ளது. பாரவூர்தியின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் நாளை திங்கட்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-28)



## மாகாணசபைத் தேர்தலில் ஜனாதிபதி எதேச்சதிகாரம்

*அனுமதிக்கமுடியாது; ஐ.ம.சக்தி சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஒக்.5

மாகாணசபைத் தேர்தலை நடத்தாது ஜனாதிபதி எதேச்சதிகாரமாக இருப்பதை அனுமதிக்க முடியாது. மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டு ஜனநாயகம் நிலைநாட்டப்படவேண்டும்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாணசபைத் தேர்தலை விரைவில் பெறுவதற்குரிய எதிரணிகளின் கூட்டு அரசியல் சமர் உக்கிரமாக முன்னெடுக்கப்படும்.

தேசிய இனப்பிரச்சினைக்கான ஓர் அரசியல் தீர்வாகவே மாகாணசபைத் தேர்தல் முறைமை கொண்டுவரப்பட்டது. உயிர்த் தியாகங்களுக்கு மத்தியிலேயே இம்முறைமை கொண்டுவரப்பட்டது. எனவே, மாகாணசபை முறைமை அவசியம். இதற்காக ஜனநாயகவழியில்எல்லாவிதநடவடிக்கைகளும்முன்னெடுக்கப்படும்-என்றார். (ச-44)



## வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஒக்.5

சாவகச்சேரி நுணாவில் மத்தி கிராம அலுவலர் பிரிவில் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை வளர்ப்பு நாய்களுக்குரிய விலங்கு விசர்நோய்க்கெதிரான ஏ.ஆர்.வி. தடுப்பூசி ஏற்றல் இடம்பெறும் என சாவகச்சேரி நகரசபை சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

அந்தவகையில் காலை 9மணிக்கு நுணாவில் மத்தி வேலாயுதம் வீதிதுரை கடையடி, கத்தாப்படி வீதி தோட்டத் தரவையடி, காலை 11மணிக்கு சங்கம் வீதி வயல் வெளி தொடக்கப் பிரதேசம், ஏ9 வீதி சுவீட் பார்க் ஹோட்டல் முன்பாக, பி.ப. 1மணிக்கு தாளையடி அம்மன் வீதியில் பரமேஸ்வரன் வீட்டுச் சந்தி ஆகிய இடங்களில் இலவசமாகத் தடுப்பூசி ஏற்றப்படும். (ச-41-இ)

## தே.ம.சக்தி அலுவலகம் வடமராட்சியில் திறப்பு!

யாழ்ப்பாணம், ஒக்.5

தேசிய மக்கள் சக்தியின் வடமராட்சிக்கான அலுவலகம் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவால் நேற்று திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இதில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர்களான இளங்குமரன், ரஜீவன், மருத்துவர் பவானந்தராஜா, தேசிய மக்கள் சக்தியின் பருத்தித்துறை, கரவெட்டிப் பிரதேசசபைகளின் உறுப்பினர்கள் பருத்தித்துறை நகரசபை, வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-27)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மக்களின் பின் ஒளியும் தமிழ்த் தலைமைகள்!



## குரல் கொடுக்கத் திராணியில்லை
## அரசியல் ஆய்வாளர் அ.யோதிலிங்கம் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஒக்.5**

**மன்னார் விவகாரத்தில் தமிழ் அரசியற் கட்சிகள் மக்களுக்கு முன்னால் நிற்கவேண்டிய இடத்தில் மக்களுக்குப் பின்னாலே நிற்கின்றன. இது மிகவும் கவலைக்குரியதாகும் என்று அரசியல் ஆய்வாளரும் சட்டத்தரணியும், சமூக விஞ்ஞான ஆய்வு மைய இயக்குநருமான சி.அ.யோதிலிங்கம் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னாரில் காற்றாலைக்கெதிரான போராட்டத்தில் மக்கள் மற்றும் கிறிஸ்தவ மதகுருமார்கள் தாக்கப்பட்டமை தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் விதிவிலக்கல்ல என்பதை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

மன்னார் காற்றாலை விவகாரம் இலங்கை அரசியலிலும், தமிழ் அரசியலிலும் பேசுபொருளாகியுள்ளது கடந்த 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நள்ளிரவு காற்றாலைக் கோபுரங்களை அமைப்பதற்கான பாகங்களை மன்னாரத்தீவுக்குள் கொண்டு செல்வதற்கு முயற்சித்தபோது மக்கள் அருட்தந்தைமாருடன் இணைந்து அதனைத் தடுத்திருந்தனர். இதன்போது பொலிஸார் தாக்கியதில் அருட்தந்தைமார் உட்படப் பலர் காயப்பட்டனர். இந்தக் காற்றாலைகளை மக்கள் குடியிருப்பு பகுதிகளில் அமைக்கப்படுவதால் சூழலியல் பாதிப்புகள் தொடக்கம், பொருளாதார பாதிப்புகள் வரை பல ஏற்படுவதாக சூழலியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

மன்னார் விவகாரத்தில் தமிழ் அரசியற் கட்சிகள் மக்களுக்கு முன்னால் நிற்க வேண்டிய இடத்தில் மக்களுக்கு பின்னாலே நிற்கின்றன. இது மிகவும் கவலைக்குரியதாகும். மக்களுக்கும், அரசாங்கத்திற்குமிடையே இடைக்கருவிகளாக இருக்கவேண்டியவர்கள் அதிலிருந்து நழுவி ஓடுகின்றார்கள். தலைவர் முன்னே! மக்கள் பின்னே! என்ற நிலை மாறி மக்கள் முன்னே! தலைவர்கள் பின்னே! என்ற நிலை தொடரும் போலவே தெரிகின்றது. மக்கள் தாக்கப்பட்ட போது தலைவர்கள் எவரும் அங்கிருக்கவில்லை. மன்னாரில் தொடர் போராட்டங்களை முன்னெடுத்திருந்த நிலையில் நாள்முழுவதும் மக்களோடு தலைவர்கள் நின்றிருக்க வேண்டும். அடி வாங்குவதற்கு தலைவர்கள் தயாரில்லை என்பதனையே இது காட்டுகின்றது. இந்தத் தலைவர்களை நினைத்து மக்கள் தலையில் அடித்துக்கொள்வதைத்தவிர வேறு தெரிவு அவர்களுக்கில்லை- என்றார். (ச-இ)

## பூஞ்சண உணவுகள்; தண்டம் ரூ.60,000

யாழ்ப்பாணம், ஒக்.5

பருத்தித்துறை நகரசபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் வண்டு மொய்த்த உணவுப்பொருள்களையும் காலாவதி கடந்து எலி எச்சங்களுடன் கூடிய பூஞ்சணம் மொய்த்த உணவுப்பொருள்களையும் விற்பனை செய்த பல்பொருள் வாணிபத்துக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் 60 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்துள்ளது.

குறித்த பல்பொருள் வாணிபத்தில் மேற்குறித்த வகையிலான உணவுப்பொருள்கள் விற்பனை செய்யப்படுவதாக பொதுமக்களின் முறைப்பாட்டை அடுத்து பருத்தித்துறை நகரசபை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ப.தினேஷினால் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது குறித்த விடயம் உறுதிசெய்யப்பட்டு பல்பொருள் வாணிபத்துக்கு எதிராக பருத்தித்துறை நகரசபையின் பொதுச்சுகாதார பரிசோதகரினால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல்செய்யப்பட்டது. இதன்போது குறித்த பல்பொருள் வாணிப முகாமையாளர் தம்மீதான குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் 60ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது. (ச-100,20,26)



## புங்குடுதீவு கோரக்கொலைக்கு
# நீதிகோரிப் போராடியவர்கள்மீது பொலிஸாரால் வழக்குத்தாக்கல்

யாழ்ப்பாணம், ஒக்.5

புங்குடுதீவில் தனியார் பேருந்து உரிமையாளர் படுகொலைக்கு நீதிகோரிப் போராடிய ஐவருக்கு எதிராக அரச அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த தனியார் பேருந்து உரிமையாளரான ஐயாத்துரை அற்புதராசா அவரது வீட்டில் வைத்துக் கடந்த ஓகஸ்ட் மாதம் வன்முறைக் குழுவொன்றால் கொடூரமான முறையில் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டிருந்தார். கொலையைத் தடுக்கச் சென்ற அவரது உறவினர்கள் நால்வர் குறித்த சம்பவத்தில் காயமடைந்திருந்தனர்.

அவரது படுகொலைக்கு நீதிகோரி அவரது பூதவுடலைக் குறிகாட்டுவான் பிரதான வீதியில் நடுவீதியில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டவரின் குடும்ப உறவுகளும், 150 இற்கும் மேற்பட்ட பொதுமக்களும் இணைந்து போராடியிருந்தனர்.

போராட்டத்துக்குத் தீவகம் சிவில் சமூகம், புங்குடுதீவு உலகமையம் மற்றும் புங்குடுதீவு தனியார் பேருந்து சேவைச் சங்கம் போன்ற அமைப்புகள் ஆதரவு வழங்கியிருந்ததுடன் புங்குடுதீவு தனியார் பேருந்து சேவைச் சங்கத்தினர் பணிப்புறக்கணிப்பையும் மேற்கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் படுகொலை செய்யப்பட்டவரின் பூதவுடலை வைத்து வீதியை மறித்துப் போராடியமைக்கு எதிராகவும் சட்டவிரோதக் குழுவாக ஒன்று கூடி அரச அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு விளைவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் தீவகம் சிவில் சமூகம் அமைப்பின் செயலாளர் மாணிக்கவாசர் இளம்பிறையன், உபதலைவர் கருணாகரன் குணாளன், வேலணைப் பிரதேசபை உறுப்பினர் கருணாகரன் நாவலன் மற்றும் இரு பொதுமக்களின் பெயர் என்பன குறிப்பிட்டு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய ஐவரையும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கடந்த வியாழக்கிழமை நீதிமன்ற அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது. (ச-66)

## புரட்டாதிச்சனி விரத வழிபாடு

யாழ்ப்பாணம், ஒக்.5

புரட்டாதிச்சனி விரதத்தை முன்னிட்டு நேற்று சனிக்கிழமை சிவாலயங்களில் பக்தர்கள் சிட்டிகளில் எள்ளெண்ணெய் எரித்து வழிபாட்டில் ஈடுபட்டனர்.

நவக்கிரகங்களுக்குத் தண்ணீர் ஊற்றியும் எள்ளுப்பொட்டளங்களில் நெய் விளக்கேற்றியும் தமது பிரார்த்தனைகளை நிறைவேற்றினர்.

நவராத்திரி வழிபாட்டுக் கும்பம் இறக்கப்பட்டநிலையில் யாழ். மாவட்டத்தின் பல்வேறு சிவாலயங்களில் சனிப்பிரதோச அபிஷேக வழிபாடுகள் நேற்று சிறப்புற்றன. (ச-41-17)

# புதிய அரசியலமைப்பு விரைவில் வரும்!

## ஆளுங்கட்சி தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக்.5

புதிய அரசியலமைப்புச் சட்டம் எமது கொள்கைப் பிரகடனத்தில் இருக்கின்ற ஒரு விடயம். அந்தவகையில் புதிய அரசியலமைப்புச் சட்டம் ஒன்று விரைவில் கொண்டுவரப்படும் எனக் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் சங்கானையில் இடம்பெற்ற நிகழ்வில் 'புதிய அரசியலமைப்புச் சட்டத்தின் அரசாங்கத்தின் தற்போதைய நிலைப்பாடு என்ன? என ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் ஆட்சிக்குவந்து ஒருவருடம்தான் நிறைவடைந்துள்ளது. ஒரு வருடத்திற்கு முன்னர் இந்த நாடு எந்த நிலையில் இருந்தது என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும். அந்தவகையில் புதிய அரசியலமைப்புச் சட்டம் இந்த நாட்டு மக்களுடைய சகல பிரச்சினைகளையும் தீர்க்கும் வகையில், நீண்டு நிலைக்கக்கூடிய ஒரு சட்டமாக விரைவில் கொண்டுவரப்படும் - என்றார். (ச-27)

## ஐங்கரநேசனின் 'வேர்முகங்கள்' நூல் அறிமுகம்

யாழ்ப்பாணம், ஒக்.5

கலை, இலக்கியப் பேராளுமைகளுடன் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் வடமாகாண சபையின் மேனாள் அமைச்சருமான பொ. ஐங்கரநேசன் மேற்கொண்ட நேர்காணல்களின் தொகுப்பு "வேர்முகங்கள்" என்ற பெயரில் எங்கட புத்தகங்கள் பதிப்பகத்தினூடாக அண்மையில் வெளியிடப்பட்டது. இந்நூலுக்கான அறிமுகவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 3மணிக்குத் தண்ணீரூற்று (குமுழமுனைச் சந்தி) முள்ளியவளையில் அமைந்துள்ள பரிமத்தியா ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முல்லை மாவட்ட மேலதிக செயலர் அதிபர் சி. குணபாலன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் கருத்துரைகளை ஊடகவியலாளர் தி. திவாகர் மற்றும் சமூக ஆய்வாளர் தெ. மதுசூதனன் ஆகியோரும் அறிமுகவுரையை யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் முதுநிலை விரிவுரையாளர் க. அருந்தாகரனும் நிகழ்த்தவுள்ளனர்.

நூலின் சிறப்புப் பிரதிகளை மூத்த பாடலாசிரியர் பெ. செல்லக்குட்டி வழங்கிவைப்பார். (ச-41,27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்நாய்களுக்கு கருத்தடை சிகிச்சை

யாழ்ப்பாணம், ஒக்.5

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட 11 வட்டாரங்களில் வளர்ப்புப் பெண்நாய்களுக்கு இலவசமாகக் கருத்தடை சத்திரசிகிச்சை செய்யும் பணிகள் எதிர்வரும் 9ஆம் திகதி தொடக்கம் 13ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன. 9ஆம் திகதி சாவகச்சேரி பொது விளையாட்டு மைதானத்தில் சாவகச்சேரி நகர், கோயிற்குடியிருப்பு, சங்கத்தானை ஆகிய வட்டாரங்களுக்குரிய வளர்ப்புநாய்களுக்கும் 10ஆம் திகதி நுணாவில் பொதுநூலகத்தில் நுணாவில் கிழக்கு, நுணாவில் மத்தி, நுணாவில் மேற்கு ஆகிய வட்டாரங்களுக்குரிய வளர்ப்புநாய்களுக்கும் 11ஆம் திகதி மீசாலை பொதுநூலகத்தில் மீசாலை கிழக்கு, மீசாலை மேற்கு ஆகிய வட்டாரங்களுக்குரிய வளர்ப்புநாய்களுக்கும் 13ஆம் திகதி மண்டுவில்க செல்வவிநாயகர் சனசமூக நிலையத்தில் மண்டுவில், சாவகச்சேரி வடக்கு, கல்வயல் ஆகிய வட்டாரங்களுக்குரிய வளர்ப்பு நாய்களுக்கும் கருத்தடை சத்திரசிகிச்சைப் பணிகள் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(ச-41)

## காணி விற்பனைக்கு

மீசாலை இராமாவில்
கந்தசாமி கோயில் எதிர்பக்கம்
A9 வீதியில் ரயில் பாதைக்கு
அருகில் உள்ள காணி
விற்பனைக்காக உள்ளது.
தொடர்புகளுக்கு :
077 210 37 40
(CS) A

## வேலையாட்கள் தேவை

தென் மாகாணத்தில் அமைந்துள்ள பலசரக்கு கடையொன்றில் தங்கியிருந்து வேலை செய்யக் கூடிய ஆண் வேலையாட்கள் தேவை.
சம்பளம் :- 50,000/-
உணவு மற்றும் தங்குமிடம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: 077 480 33 79


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கோப்பாய் மத்தியில் இராச வீதியில் இருந்து 100m தூரத்தில் பிரதான வீதியோரமாக சிறந்த குடியிருப்புச் சூழல் 2, 2 1/2 மற்றும் 3 பரப்புகளாகப் பிரிக்கப்பட்ட தேக்கு மரங்களுடன் கூடிய குடிமனைகள் அமைக்கக்கூடிய காணித்துண்டுகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-
077 811 8461, 070 438 3910

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

## மரண அறிவித்தல்

தோற்றம்
18 . 07 . 1945



மறைவு
04 . 10 . 2025

### முத்தையா தங்கவேலாயுதம்

சங்கானை அம்பிகாவத்தை வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா தங்கவேலாயுதம் அவர்கள் நேற்று (04.10.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சம்பந்தர் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ரஞ்சிதமலர் அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற ஞானரத்தினம் அவர்களின் அன்புச் சகோதரனும், ரூபசீலன் (ஆசிரியர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி), பிருந்தாகரன் (பிரதேச செயலர் கண்டாவளை) ஆகியோரின் அன்புத் தந்தையும், சங்கீதா (ஆசிரியர் முத்துத்தம்பி மகாவித்தியாலயம் திருநெல்வேலி), சியானி (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் கோப்பாய்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜயமிதா, கோபிகன், ஆகர்ஷா, ஆதர்சனன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (05.10.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கௌ்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அம்பிகாவத்தை வீதி,
சங்கானை

தகவல்:
குடும்பத்தினர்
077 786 2056, 077 859 3463

# மாணவர் ஒழுக்கவிதிகளை அரசாங்கம் கடாசுகின்றது!

## கல்வி வல்லுநர்கள் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக்.5

பாடசாலை மாணவர்களுக்குத் தண்டனை வழங்குவது தொடர்பான புதிய சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் ஆசிரியர்களும் அதிபர்களும் பாடசாலை ஒழுக்கக்குழுக்களில் இருந்து விலகுவார்கள் என்று கல்வி வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் உலப்பனே சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி ஆசிரியர்களையும் அதிபர்களையும் அச்சுறுத்தி கடமையில் ஈடுபடுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது. இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால், ஆசிரியர்களும் அதிபர்களும் பாடசாலை ஒழுக்கக் குழுக்களில் இருந்து விலகுவார்கள். அவ்வாறு விலகினால், ஒழுக்கக்குழுக்கள் செயலற்றதாகி தற்போது பாடசாலைகளில் நடைமுறையில் உள்ள அனைத்து ஒழுக்க விசாரணைகளும் முடங்கிவிடும். இதனால் மாணவர்கள் சமூகப்பிறழ்வுகளுக்குள் தள்ளப்படுவார்கள் - என்றார்.

(ச-இ)

# மக்கள் செயல் அமைப்பின் 'கானல் நீதி' நிகழ்வு நாளை

2006 ஆம் ஆண்டு திருகோணமலை நகரத்தின் காந்தி சிலையருகில் வைத்துப் படுகொலைசெய்யப்பட்ட ஐந்து மாணவர்களுக்கு நீதிகோரி போராடி வந்த படுகொலையான மாணவரான ரஜிகரின் தந்தையார் மருத்துவர் காசிப்பிள்ளை மனோகரனையும் இன்று வரை நீதிமறுக்கப்பட்ட அனைவரையும் நினைவுகூரும் 'கானல் நீதி' நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் தந்தை செல்வா கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

மக்கள் செயல் தன்னார்வ அமைப்பினர் ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வில், சாட்சியங்களோடு தொடர்பான உரைகளும் இடம்பெறவுள்ளன. உரைகளின் வரிசையில், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சர்வதேச தலையீட்டின் கீழ் தமிழ் இனவழிப்புக்கு எதிரான சாட்சியங்களைத் திரட்டல் - சாத்தியமும் பலவீனங்களும் என்ற தலைப்பிலும், யாழ். பல்கலைக்கழகத்தின் அரசறிவியல்துறை தலைவர் கலாநிதி. தி. விக்கினேஸ்வரன், காணமலாக்கப்பட்டோருடன் தொடர்புடைய சாட்சியங்கள் பலவீனப்படுத்தப்படுகின்றமையும் அதற்குப் பின்னாலான அரசியலும் என்ற தலைப்பிலும், அரசியல் செயற்பாட்டாளரான ரஜீவ்காந்த், மருத்துவர் மனோகரன் நடந்த நீதியின் தடம் - நடந்தவைகளும் நினைவுகளும் என்ற தலைப்பிலும், அரசியல் ஆய்வாளர் ம. நிலாந்தன், பதினாறு ஆண்டு கால நீதிக்கான போராட்டம் என்ற தலைப்பிலும், பத்திரிகையாளர் அ. நிக்சன், நீதிகோரலுக்கான சாட்சியங்களைப் பெறும் வழிமுறைகளும் அதனை மையப்படுத்திய நாடாளுமன்ற உரைகளும் எனும் தலைப்பிலும், சட்டத்தரணி சிறீநாத் பெரேரா, சர்வதேச நீதியினூடாக தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை அடைதல் எனும் தலைப்பின் கீழும் உரையாற்றவுள்ளனர்.

(ச)

## புதிய பிரிவுகள்

இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்
பிரிவு - 60

* Diploma in English / Spoken English
* Diploma in ICT/ Artificial Intelligence/ Data Science
* Diploma in Human Resource Management
* Diploma in Human Rights
* Diploma in Foundation Laws
* Diploma in Psychology & Counseling
* Diploma in Political Science

ஆரம்பம் 11, 12 -10.2025

• காலம்: 03 மாதங்கள் • பெறுமதிமிக்க சான்றிதழ்

IPS to your future
Jaffna / Kilinochchi
TP:077 570 4893 / 074 234 9120

## காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டைச் சந்தியில் இருந்து காரைநகர் பிரதான வீதியில் 1 KM தூரத்தில் 50 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தரகர்கள் தேவையில்லை.
தொடர்பு இலக்கம்:
077 066 7419
(CS 30535) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்கினால் வெற்றி கிடைக்கும். தாய் வழி உறவினர்களால் செலவுகள் ஏற்படும். உறவினர்கள் வருகை சில சங்கடங்களை ஏற்படுத்தினாலும் பாதிப்பு இருக்காது.

**இடபம்:** புதிய முயற்சிகள் எதுவும் இன்றைக்கு வேண்டாம். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். காலையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். பிற்பகலுக்கு மேல் கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரையக்கூடும். கணவன் – மனை விக்கி டையே சிறு கருத்துவேறுபாடு உடனே சரியாகிவிடும்.

**கடகம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சி வெற்றிகரமாக முடியும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். பிற்பகலுக்கு மேல் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** இன்று புதிய முயற்சி எதிலும் ஈடுபட வேண்டாம். மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். உறவினர்களால் வீட்டில் சிறுசிறு சலசலப்புகள் ஏற்பட்டு நீங்கும்.

**கன்னி:** கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். வாழ்க்கைத்து ணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**துலாம்:** இன்று பொறுமையுடன் செயற்பட வேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற சற்று அலைய வேண்டி இருக்கும்.


**விருச்சிகம்:** தொட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத் துணை உறவுகளால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு இருப்பதுடன், செலவுகளும் ஏற்படக்கூடும்.

**தனுசு:** உற்சாகமான நாள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அவர்கள் கேட்டதை மகிழ்ச்சியு டன் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**மகரம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக் கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**கும்பம்:** மற்றவர்கள் கோபத்தில் பேசினாலும், நீங்கள் பொறுமையுடன் இருக்கவேண்டியது அவசியம். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். அலுவலகத்தில் பணிகளில் கூடுதல் கவனம் தேவை.

**மீனம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாக முடியும். சிலருக்கு ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும்.



# வல்லிபுர மாயவருக்கு இன்று தேர்த்திருவிழா

■ மதுரகவி. காரை.எம்.பி. அருளாந்தன்

அவன் அருளால் அவன் தாழ் வணங்கி மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்று அங்கங்களினாலும் பெருஞ்சிறப்புப்பெற்றது துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் திருத்தலமாகும். இந்த வல்லிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் திருமாலுக்கு "ஆழ்வார்" என்ற திருநாமமே பன்னெடுங்காலமாக வழங்கப்பட்டு வருகின்றது.

இவ் ஆலயத்தின் பிரபாவம் தட்சண கைலாச புராணம் தட்சண கைலாச மான்மியம் (வல்லிபுர வைபவம்) நகுலமலைக்குறவஞ்சி, திருக்கேதீஸ்வரப் புராணம் எனும் நூல்களில் பெரிதும் பேசப்பட்டுள்ளது. இன்னும் சிங்கள மொழியிலுள்ள கோகுல சந்தேச என்னும் பிரபந்தத்தில் வல்லிபுரம், பொன்னாலை பற்றிய செய்தி மிக விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

வல்லிபுரக்கோயிலைச் சூழவுள்ள மணற்பகுதிகள் புராதன காலத்தில் மிக உன்னத நிலையிலிருந்த ஓர் இராசதானி என்பது ஆய்வாளர் பலருடைய கருத்தாகும். "வல்லிபுரம் ஒரு துறைமுகமாக இருந்தது என்பதற்கான புதைபொருள் சின்னங்கள் கவனத்துக்குரியதாகும். கி.பி. 8ஆம் நூற்றாண்டில் கலிங்க அரசன் உக்கிரசிங்கன் கதிரமலை அரசைக் கைப்பற்றி மாருதப் புரலிக வல்லியென்னும் சோழகுமாரியை மணந்து பின்னர் கதிரைமலையைவிட்டுநீங்கி சிங்கை நகரை இராச தானியாக்கினான்.

அறம் செய்பவர்களை ஆழி காப்பாற்றுகின்றது. கேடு செய்கிறவர்களை அது துன்புறுத்துகின்றது. சக்கரத்துக்கு மறைந்திருந்து யாரும் எச்செயலையும் செய்யமுடியாது. இத்தனைக் காவல் தெய்வத் திருவடிவமாக சக்கரம் சக்கரத்தாழ்வாராக வழிபடப்படுகின்றது.

*குடதிசை முடியை வைத்துக்*
*குணதிசை பாதம் நீட்டி*
*வடதிசை பின்பு காட்டித்*
*தென்திசை பாதம் இலங்கை நோக்கி*
*கடல் நிறக் கடவுளெந்தை யரவணைத்*
*துயிலுமா கண்டு*
*உடலெனக் குருடுமாலோ என்*
*செய்கேனுகைத்தீரே*

### ஆழ்வாரின் பாடலில் இலங்கை

தொண்டரடிப் பொடியாழ்வார் "தென்திசை இலங்கை நோக்கி" என அரங்கனைப் பாடிய பாடலில் எமது ஈழமணித் திருநாடு இடம் பிடித்திருப்பது யாவரும் அறிந்ததே. இத்துடன் உலகில் எங்குமே இல்லாதவாறு வல்லிபுரத்தில் விஷ்ணு ஆலயத்தில் "சக்கராயுதம்" மூலமூர்த்தியாக எழுந்தருளி அருள்பாலிப்பது தனித்துவமான சிறப்பு.

### தேரேறும் மாயவன்

தேர்த்திருவிழாக் காட்சியில் இணைந்து வழிபடும் அன்பர்களுக்கு நல்ல வரமருள கோவிந்தனாக, கோயிலனாக வல்லிபுரத்தில் தேரேறி வருகின்றார்.

காத்தல் கடவுளே ஈழத்தமிழ் மக்களுக்கு நிரந்தரமான தீர்வைத்தந்து காவல் செய்ய தேரேறவேண்டும். எல்லோரும் அரங்கனின் கழல்தொழுவோம் வாரீர் வாரீர்...

# கலைவிழா

யாழ்ப்பாணம், ஒக்.5

மூளாய் இந்து இளைஞர் மன்றம் நடத்தும் கலைவிழா இந்து இளைஞர் மன்றத் தலைவர் சி.மயூரன் தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30மணியளவில் மூளாய் பிரசாத் அரங்கில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி உதவித் தேர்தல் ஆணையாளர் வேலாயுதம் சிவராஜா, சிறப்பு விருந்தினராக இயக்கச்சி றீச்சா ஒருங்கிணைந்த பண்ணையின் ஸ்தாபகர் கந்தையா பாஸ்கரன், கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாணம் பிரபல தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம், மன்ற முன்னாள் உறுப்பினர் பன்னீர்செல்வம் தவனேசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன்போது வதிரன்புலோ சித்திவிநாயகர் தேவஸ்தான ஞான ஒளி அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வு, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வு, ஆசிரியர் கௌரவிப்பு, குருகுலம் வில்லிசைக் குழுமம் வழங்கும் "நசையில் பெரியதோர் நல்குரவு இல்லை' என்பன இடம் பெறவுள்ளன. (ச-41)

# நாற்சார் வீடுகள் புகைப்பட கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக்.5

யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய கட்டடக் கலையின் முக்கிய அம்சமான நாற்சார் வீடுகள் பற்றிய வரைபட, புகைப்படக் கண்காட்சி இலங்கை கட்டடக் கலைஞர் ஸ்ரீதரன் அசோகனின் ஏற்பாட்டில் கே.கே.எஸ். வீதி சுன்னாகத்தில் 9ஆவது கிலோமீற்றர் கல்லுக்கு அருகிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று வருகின்றது. நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமான குறித்த கண்காட்சி இன்று ஞாயிற்றுக்கிழமை 10 மணி முதல் மாலை 5 மணி வரை இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-66)

# அல்லல் போக்கும் வழிபாடு

யாழ்ப்பாணம், ஒக்.5

மேல்வருத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றத்தின் 6ஆவது அல்லல் போக்கும் அகண்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இல.156,ஜீ.பி.எஸ்.வீதி, கல்வியங்காட்டிலுள்ள ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றத்தில் இடம்பெறவுள்ளது. (ச-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# மேற்கின் நீதி...!

காஸா முழுமையாக ஆக்கிரமிக்கப்படும் என்ற இஸ்ரேலின் அறிவிப்பு இப்போது இஸ்ரேலுக்கு எதிராகவே திரும்பியிருக்கின்றது. ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் இஸ்ரேலியப் பிரதமர் நெதன்யாகு உரையாற்றும்போது, இஸ்ரேலின் இனப்படுகொலைகளைக் கண்டித்து நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் வெளிநடப்புச்செய்திருந்தனர். இது இஸ்ரேலுக்கு விழுந்த அடியாக அமைந்ததோ இல்லையோ, 'உலகப்பொலிஸ்' என்ற ஸ்தானத்தில் இனியும் நிலைபெறலாம் என்ற மிதப்பில் திரிந்த அமெரிக்காவுக்கு விழுந்த சம்மட்டி அறையாகவே பார்க்கப்பட்டது. நிலைமை கைமீறிச்செல்வதை உணர்ந்த அமெரிக்கா, 'இஸ்ரேலியப் படைகள் காஸாவில் இருந்து வெளியேறவேண்டும், பலஸ்தீன சிவில் குழுவால் காஸா ஆளப்படவேண்டும்' உள்ளிட்ட 20 அம்சத் தீர்வுத்திட்டங்களை முன்வைத்து, தன்னை ஒரு நடுநிலையாளன் போல் காய் நகர்த்தியிருக்கின்றது. இங்கே கோடுகாட்டப்பட வேண்டிய விடயம் யாதெனில், சீனாவே வெளிப்படையாகப் பாராட்டும்படி அமைந்திருக்கின்றது அமெரிக்கத் தீர்வுப்பொதி.

இந்த நடவடிக்கைகளுக்கு எல்லாம் தொடக்கப்புள்ளி மேற்கு நாடுகளிடமே ஆரம்பிக்கின்றது. இஸ்ரேலின் இனப்படுகொலைக்கான பதிலடியாக, பலஸ்தீனத்தை சுதந்திரத் தனிநாடாக ஜி7 கூட்டணியில் அங்கம் வகிக்கும் பிரான்ஸ், பிரிட்டன் மற்றும் கனடா ஆகியன அங்கீகரித்தன. இதனால் ஏற்பட்ட துணிச்சலும், அதன்மூலம் வழங்கப்பட்ட அழுத்தங்களும்தான் காஸா விவகாரத்தில் அண்மைக்கால எதிர்பாரா நகர்வுகளுக்குப் பிரதான காரணம். காஸா வில் அமைதி திரும்பவேண்டுமாயின், இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனம் என்ற 'இருநாட்டுக்கொள்கையே ஒரே தீர்வு' என்பதே இந்தத் தரப்புகளின் கருத்தாக அமைந்துள்ளது. பலஸ்தீனம் அங்கீகரிக்கப்பட்டால் அதன் இராணுவக் கொள்கைகள் தொடர்பில் தெளிவற்ற நிலை காணப்பட்டாலும், பலஸ்தீனம் என்பது சுதந்திரத் தனிநாடு என்பதில் ஒன்றித்திருக்கின்றன.

இன்று பலஸ்தீனத்துக்காகத் துடிக்கும் மேற்கு நாடுகள், ஈழத்தமிழர்களின் விடயத்தில் தாம் ஆற்றிய பங்களிப்பு என்ன? என்ற பரிசீலனைகளையும் செய்யவேண்டியிருக்கின்றது. விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்படாதிருந்த காலத்தில், ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுகளை - இராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொண்ட தரப்புகளில் மேற்குலகுக்குப் பிரதான பங்குண்டு. இதனால்தான், 'ஒஸ்லோ (நோர்வே) புரிந்துணர்வு உடன்படிக்கை' போன்ற ஒப்பந்தங்களைச் செய்துகொள்ள புலிகள் இணங்கினர். அந்தளவுக்கு தமிழர்களின் நலன்களை மேற்குலகம் புரிந்துவைத்திருக்கின்றது என்ற நம்பிக்கை எம்மிடத்தில் இருக்கவும் செய்தது. ஆனால், ஈழத்தமிழர் விடயத்தில் மேற்குலகம் செய்ததெல்லாம் துரோகத்திலும் கொடிய விடயங்கள்தாம்.


இன்று காஸாவில் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் காட்சிகள்தான் அன்று முள்ளிவாய்க்காலில் இடம்பெற்றன. இஸ்ரேலிய இராணுவத்துக்கு எதிராக இன்று முன்வைக்கப்படும் போர்க் குற்றச்சாட்டுகள்தான் இலங்கை இராணுவத்துக்கு எதிராகவும் முன்வைக்கப்பட்டன. காஸாவில் இன அழிப்பின் அடிப்படையாக இருப்பது சியோனிசயூதம். முள்ளிவாய்க்காலில் இன அழிப்பின் அடிப்படை 'பேரினவாதப் பௌத்தம்' அவ்வளவே வேறுபாடு. மற்றும்படி குருதியும் ஒன்றுதான், உயிர்களும் ஒன்றுதான். காஸாவில் போர் உடனடியாக முடிவுக்கு வரவேண்டும் என்பதிலோ அல்லது, பலஸ்தீனர்களுக்கு சுதந்திரத் தனிநாடு மலரவேண்டும் என்பதிலோ மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. ஆனால், ஒரு போர்க்களத்தைக்கூட சர்வதேசம் எந்தளவுதூரம் தனக்காக வளைக்கின்றது என்பதே இங்கு விடயம்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

## நாளொரு நல்வார்த்தை

நீ கவலைகளை சுமந்து கண்ணீர் சிந்துவதைவிட,
இலட்சியங்களை சுமந்து ரத்தம் சிந்து.
உலகம் உன்னைப் போற்றும்.

—லெனின் –



## வீழ்ச்சியடையும் ஆபத்தில் இலங்கை மசாலா உற்பத்தி



கொழும்பு, ஒக்.5

மசாலாப் பொருள்களை இறக்குமதிசெய்து மறு ஏற்றுமதிசெய்ய அனுமதிக்கும் அரசாங்கத்தின் முடிவால் உள்ளூர் மசாலாச் சந்தை வீழ்ச்சியடையும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட மசாலாப் பொருள்களின் மதிப்பை அதிகரித்து அவற்றை மறு ஏற்றுமதி செய்ய வாய்ப்பளித்துள்ளதாக அரசாங்கம் கூறியுள்ளது. இந்த முடிவின் காரணமாக இலங்கை மசாலாப் பொருள்களின் உலகளாவிய நற்பெயர் பாதிக்கப்படும். அத்துடன், குறைந்த விலையில் இறக்குமதி செய்யப்படும் மசாலாப் பொருள்கள் சந்தையை ஆக்கிரமித்தால், உள்ளூர் உயர்தர மசாலாப் பொருள்களுக்கான தேவை குறையும். அரசாங்கம் இதுகுறித்து உடனடி நடவடிக்கை எடுக்கவில்லை எனில், உள்ளூர் மசாலாப் பொருள்களின் உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள் எனவும் அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## கனமழைக்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம், ஒக்.5

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அந்தக் கடற்பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## வாய்க்காலில் சிசு கண்டெடுப்பு

யாழ்ப்பாணம், ஒக்.5

பிடகந்த தோட்டத்திலுள்ள வாய்க்காலில் சிசுவொன்று நேற்றுக் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கந்தேனுவர பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையிலேயே சிசு மீட்கப்பட்டுள்ளது. குறித்த சிசு மாத்தளை பொதுமருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் சிசுவின் பெற்றோர் தொடர்பில் இதுவரை எந்தத் தகவலும் தெரியவரவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)



## குண்டுதுளைக்காத வாகனம் கையளித்தார் மஹிந்த

கொழும்பு, ஒக்.5

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட குண்டு துளைக்காத வாகனம் திருப்பிக் கையளிக்கப்பட்டுள்ளதாக மஹிந்த ராஜபக்சவின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்துள்ளார்.

அத்துடன், மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்பிற்காக வழங்கப்பட்ட பாதுகாப்பு அதிகாரியின் வாகனமும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## செம்மணிப் புதைகுழிக்கு நீதிகோரி யாழ்.பஸ் நிலையத்தில் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.5

செம்மணி சம்பவங்களுக்கு நீதிகோரி அமைதிவழிப்போராட்டம் நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் காலை 10 மணியிலிருந்து 11 மணிவரை சிவில் சமூக அமைப்புகளின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளது.

அன்பும் அரவணைப்பும் ஆதரவும் அனைத்து இனமத மக்களிடையே பரப்பப்பட்டு சாந்தியும் சமாதானமும் நாட்டில் நிலவ அனைவரும் ஒன்றிணையவேண்டும் என ஏற்பாட்டுக்குழு அழைப்பு விடுத்துள்ளது. (ச-159)

நாளை
திங்கட்கிழமை - புரட்டாதி 20
06.10.2025
சுபநேரம் : 12.02 - 01.32
ராகுகாலம் : 07.32 - 09.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்கள் மீதான தாக்குதல் அரசாங்கம் நடவடிக்கையில்லை

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், ஒக்.5**

**ஆசிரியர்கள்மீதான தாக்குதல் சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பொலிஸாராரோ அரசாங்கமோ ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. மாணவர்களுக்குக் கட்டுப்படுத்தமுடியாத சுதந்திரத்தை வழங்கும் சட்டமூலங்களை அரசாங்கம் உருவாக்குவதற்கு முன்னர் சமூகச் சீரழிவுகளில் ஈடுபடும் நபர்களினால் அதிபர், ஆசிரியர்கள் பாதிக்கப்படும் விடயங்களுக்குத் தீர்வு வழங்க முன்வரவேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.**

இதுதொடர்பில் அதன் உபதலைவர் தீபன் திலீசன் தெரிவிக்கையில்-

அம்பாறை மாவட்டத்தின் கல்முனைப் பிரதேசத்துக்குட்பட்ட திருக்கோயில் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர் ஆசிரியர்கள் அண்மைக்காலமாக வெளிநபர்களினால் தாக்குதலுக்கு உள்ளாகும் சம்பவங்கள் அதிகரித்துவருகின்றது.

திருக்கோவில் கல்வி வலயத்தினால் நடத்தப்பட்ட மேலதிக செயலமர்வுக்குத் தொடர்ச்சியாக சமுகளிக்காத மாணவியொருவரின் வரவை உறுதிப்படுத்துவதற்காக, பாடசாலை அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய கட்டாய வரவு குழுவுக்கு பொறுப்பான ஆசிரியர், மாணவியின் வீட்டுக்குத் தேடிச்சென்றபோது, குறித்த மாணவியின் மைத்துனரால் குறித்த ஆசிரியர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த சம்பவத்தை அறிந்து சம்பவ இடத்துக்கு சென்ற அதிபர் மீதும் குறித்த நபரினால் வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதேவேளை கடந்த பெப்ரவரி மாதம் கிளிநொச்சி பூநகரி மத்திய கல்லூரியின் அதிபரும், ஓய்வுபெற்ற முன்னாள் அதிபரொருவரும் யாழ்ப்பாணம் நோக்கி இரவு வேளை பயணித்துக் கொண்டிருந்தபோது தனங்களப்புக்கு அண்மித்த பகுதியில் போதையில் வந்த காடையர் குழுவொன்றினால் கொடூரமான முறையில் தாக்கப்பட்ட நிலையில், ஓய்வுபெற்ற அதிபர் உயிரிழந்திருந்தார். நாட்டில் குற்றச் செயல்களைத் தடுத்து நிறுத்துவதற்காக டுபாயிலும், இந்தோனேசியாவிலும் வைத்து பாதாள உலகக் குழுக்களை கைதுசெய்துள்ளதாக பரப்புரை செய்துவரும் அரசாங்கம், இலங்கையில் உள்ள பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தமுடியாமல் இருப்பது கவலைக்குரியதாகும். அரசாங்கம், தண்டனைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கான சட்டமூலத்தை வெளியிட்டுள்ளது. இவ்வாறான சட்டமூலங்களைத் தமக்குச் சாதகமாக பயன்படுத்தி சமூகச் சீரழிவுகளில் ஈடுபடும் நபர்களினால் அதிபர், ஆசிரியர், மாணவர்கள் மற்றும் சமூகம் பாதிக்கப்படும் விடயங்களுக்கும் தீர்வு வழங்க முன்வரவேண்டும்-என்றார். (ச-27-66)



## ரி—56 ரகத் துப்பாக்கி இத்தாவிலில் மீட்பு

கிளிநொச்சி ஒக்.5

கிளிநொச்சி பளை இத்தாவில் பகுதியில் கடந்த 2ஆம் திகதி ரி-56ரக துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டாம் திகதி மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் நிறுவனமான ஹலோ ரெஸ்ட் நிறுவனம் தமது பணியை இத்தாவில் பகுதியில் மேற்கொண்டபோது குறித்த துப்பாக்கி அவதானிக்கப்பட்டது.

இதுதொடர்பில் பளைப் பொலிஸ் நிலையத்துக்கு தெரியப்படுத்தப்பட்ட நிலையில் பளைப் பொலிஸாார்ற கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தின் அனுமதிபெற்று அதனை எடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-113)

## வெங்காயம் விலை சரிவு

யாழ்ப்பாணம், ஒக்.5

யாழ். குடாநாட்டில் சின்ன வெங்காயம் மற்றும் பெரிய வெங்காயம் ஆகியவற்றின் விலை சரிவடைந்துள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

அறுவடை செய்யப்பட்ட சின்ன வெங்காயம் கூடுதலாகச் சந்தைக்குவந்து சேர்கின்றது. அதேவேளை பெரிய வெங்காயம் கூடுதலாக இறக்குமதி செய்யப்பட்டு சந்தைக்கு எடுத்துவரப்படுகின்றது. இதனாலேயே அவற்றின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு கிலோ பெரிய வெங்காயம் 150 ரூபாவாக சரிவடைந்துள்ளது. இதனால் சின்ன வெங்காயத்தின் விலையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று சின்ன வெங்காயச் செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ச-41-17)

## கவிதைத்தொகுதி வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக்.5



கவிவேந்தர் பொன். சுகந்தனின் ஆலம் விதை ஹைக்கூ கவிதைத்தொகுதி வெளியீடும் அவரது 20 கவிதைப் புத்தகங்களின் ஆரம்ப நிகழ்வும் கடந்த வியாழக்கிழமை இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் கி.கந்தவேள் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும் முதுபெரும் கவிஞர் சோ.பத்மநாதனும் இணைந்து கவிதைத்தொகுதியினை வெளியிட்டுவைத்தனர். (ச-41)

## ஆடுகள் திருட்டு

யாழ்ப்பாணம், ஒக்.5

யாழ்ப்பாணம் தெல்லிப்பழைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அளவெட்டி மேற்கு காட்டுப்புலம் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை ஆடுகள் களவாடப்பட்டுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வளவொன்றில் மேய்ச்சலுக்காக கட்டி விடப்பட்ட மூன்று மறி இன ஆடுகளே ஒரேநேரத்தில் திருட்டுப்போய் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-63)

## பெரும்போகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்.5

யாழ்.மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கைக்கான நெல் விதைக்கும் பணிகள் மும்முரமாக இடம்பெற்றுவருகின்றன.

கடந்த விஜயதசமி தினத்தன்று அனேகமான விவசாயிகள் தமது வயல்களில் நெல் விதைக்கும் பணிகளை ஆரம்பித்து அதற்கான பசளையையும் இட்டனர். (ச-41-17)



வவுனியா மாவட்டத்தில்

## 25,425.37 ஹெக்டேயரில் பெரும்போகம் ஆரம்பம்

வவுனியா, ஒக்.5

வவுனியா மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.விமலரூபன் தெரிவித்தார். இம்முறை மாவட்டத்தில் 25,425.37 ஹெக்டேர் நெற்செய்கை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்தோடு வவுனியா மாவட்டத்தில் உள்ள 12 கமநலசேவை மையங்களும் விவசாயிகளுக்குத் தேவையான வசதிகளை வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதேவேளை வவுனியா மாவட்டத்தில் இம்மாதம் நெல் விதைப்பு நடவடிக்கைகளை முன்கூட்டியே மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ச-110)



சாவகச்சேரி நகர் புவேந்தன் முன்பள்ளியின் சிறுவர் தினம் கடந்த புதன்கிழமை நிர்வாகக் குழுத் தலைவர் வை. இராசரத்தினம் தலைமையில் முன்பள்ளி வளாகத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் முன்பள்ளி ஆசிரியர்க[illegible] உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச-[illegible])

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நீர்க்கசிவைத் தடுப்பதற்கு




கட்டிடத்திற்கு தேவையான சகல இரசாயனப் பொருட்கள் (நீர்க்கசிவை தடுப்பது உட்பட) 10 வருட உத்தரவாதத்துடன் நீர்க்கசிவை சீர்செய்து தருவோம்.
கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு விலைக்கழிவு உண்டு.
தரம் குறைந்த போலிகளைக் கண்டு ஏமாறாதிர்கள்




North and East Engineering

077 524 4177, 077 232 3000

## காயத்திரி திருமண சேவை

சகல விதமான திருமண பொருத்தங்களும் பார்க்கப்படும்.
அதிசயம் ஆனால் உண்மை உங்கள் எதிர்கால வாழ்க்கை துல்லியமாக (காண்டம்) கணித்துத் தரப்படும். ஜனன ஜாதகம் எழுதித் தரப்படும்.

உரும்பிராய் 077 844 9861

## பராமரிப்பாளர் தேவை

ஊரிக்காடு வல்வெட்டித்துறையில் இயங்கி வருகின்ற வல்வை முதியோர் இல்லத்திற்கு ஆண் பராமரிப்பாளர் தேவை. உணவு, தங்குமிட வசதி இலவசம். தகுந்த சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

நிர்வாகி

(CS 59582) E

077 810 6857, 075 974 2495, 021 226 5551
www.valvaieldershome.com

## காணி விற்பனைக்கு

கொக்குவில் பிரம்படியில் 2 பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு. சபாபதி ஒழுங்கையில் இரண்டு பக்கங்கள் வீதியை கொண்டது.

(CS/59545) J-1

தொடர்புகளுக்கு:-
077 818 4875, 077 615 6821

## மரக்காளைக்கு வேலையாட்கள் தேவை

- தச்சு வேலையாட்கள் (அனுபமுள்ளவர்கள்)
- தச்சு வேலை பழக விரும்புபவர்கள்
- கணக்காளர் (மேற்பார்வையாளர்)

தங்குமிட வசதி உண்டு

பிறேன் றோட், கலட்டி யாழ்ப்பாணம்

தொடர்புகளுக்கு: 077 367 7099

(CS 59566) E



## ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்

இந்தியாவில் ஆன்மீகத்துறையில் 10 வருடங்களாக புகழ்பெற்ற

## அம்மன் அருள் வாக்கு

- கல்வியில் முன்னேற்றம் இல்லையா ?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா ?
- பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?
- மனதில் நிம்மதி இல்லையா?
- வாழ்வில் நிம்மதி இல்லையா?



அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
இல. 20/16, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(முன் அனுமதி பெற்றுக்கொள்ளவும்.)

தொடர்புகளுக்கு :- 077 281 1234

## The Royal College of Jaffna

தனியார் கல்வி நிறுவனம் - சங்கானை
ஆண்டு 6 இல் இருந்து பட்டப்படிப்பு வரை
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில ஆங்கில இலக்கணம் மற்றும் வினாவிடை வகுப்புகள்
By ந.விக்னேஸ்வரன் ஆச்சார்யார்

குபேரன் கட்டடம் சங்கானை
தொடர்பு: 077 675 1649

## சிறந்த நிலம் விற்பனைக்கு

மீசாலை கிழக்கு – வீட்டு நிலம்
அல்லாரை தெற்கு
வீட்டுடன் தென்னங்காணி
விலை பேசித்தீர்மானிக்கலாம்

077 6544 540

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ் நகரிற்கு அண்மையில் 6Km இற்குள் அரசநிறுவனத்தில் வேலைசெய்யும் ஊழியரின் 3 பேர் கொண்ட குடும்பத்திற்கு பாதுகாப்பான சூழலில் வீடு வாடகைக்குத் தேவை.

(CS/59539) J-1

தொடர்புகளுக்கு:-
071 601 5020

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி பரமேஸ்வரா வீதி 4ம் ஒழுங்கையில் 2 படுக்கை அறைகள், சாப்பாட்டறை, சமையல் அறை, 1 வரவேற்பறையுடன் வீடு வாடகைக்கு உண்டு. சிறியகுடும்பம் விரும்பத்தக்கது.

(CS/59555) J-1

தொடர்புகளுக்கு:-
076 226 7740

## அறை வாடகைக்கு

வேலைபார்த்துக்கொண்டு படிக்கும் பெண் பிள்ளைகள் இருவர் தங்கியிருக்கக்கூடிய சகல வசதிகளுடன் கூடிய அறை வாடகைக்கு உண்டு. (யாழ் நாச்சிமார் கோவிலுக்கு அருகாமையில்) பிரதான வீதிக்கு அருகாமையில்

(CS/59557) J-1

தொடர்புகளுக்கு:-
071 221 5374


## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை : பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்
விண்ணப்பதாரரின் பெயர் : கேமலதாஸ் பாமினி
ஆதனப்பதிவேட்டின் படி பெயர் : சொந்தக்காரர்

ஆதன இல - 30 வீதி -சந்தை வீதி வட்டாரம் -08

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 08 "சந்தை வீதியில்" ஆதன இலக்கம் 30 ல் ஆதனம் அமைந்துள்ளது. பொன்னம்பலம் நாகலிங்கத்திற்கு சொந்தமான இவ் ஆதனத்தை சிவப்பிரகாசம் சேமலதாஸ் கைம்பெண் சகுந்தலாதேவிக்கு நன்கொடையாக கையளித்து இறந்துவிட்டார் என்பதை வெளிப்படுத்தல் உறுதி மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். குறித்த ஆதனமானது 2013.05.22 ம் திகதிய பிரசித்தநொத்தாரிஸ் திரு.இ.வசந்தசேனன் அவர்கள் முகதாவில் இலக்கம் 9498 இல் அத்தாட்சிப்படுத்திய வெளிப்படுத்தல் உறுதி மூலம் இவ்வாதனத்தை ஹேமலதாஸ் கைம்பெண் சகுந்தலாதேவி சொந்தமாக்கியுள்ளார்.
மேலும் குறித்த ஆதனத்தில் தனது ஆட்சியிலுள்ள பாகமான ஆதனம் தொடர்பில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் S.மயூரன் அவர்களால் அளந்து வரைந்த 945 ம் இலக்க 2024.01.16 ஆம் திகதிய நில அளவைப்படத்தில் துண்டு 1 ஆக காட்டப்பட்ட காணியின் அளவு நிலப்பரப்பு எட்டு குழி பதினைந்து தசம் நாற்பத்தி மூன்று ( நிலப்பரப்பு 8 குழி 15.43) ஆகும்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவு வலிதென்மேற்குப் பிரதேச சபை, மானிப்பாய் பண்டத்தரிப்பு கோவிற்பற்று மாகியப்பிட்டி இறைதுஃ144 கிராம அலுவலர் பகுதி "குஞ்சித்தம்பி வளவு" நிலப்பரப்பு ஒன்பது (9) ஆகும். இதன் எல்லைகள்
கிழக்கு :- கிருஷ்ணபிள்ளை ரவிச்சந்திரன்
வடக்கு :- ஒழுங்கை
மேற்கு :- குமாரசாமி சிவசுப்பிரமணியம்
தெற்கு :- தனிகாசலம் புஷ்பராணி
மேற்குறித்த ஆதனம் கேமலதாஸ் பாமினி என்பவருக்கு 9500 இல 2013.05.22 திகதிய நன்கொடை உறுதி மூலம் வழங்கப்பட்டுள்ளது. கேமலதாஸ் பாமினி என்பவர் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு கிராம உபஅலுவலகத்தின் ஆதனப்பதிவேடுகளில் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார். மேற்படி ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் கேமலதாஸ் பாமினி என்பவரின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன உரிமை மாற்றம் செய்வதால் ஏற்படக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தவிசாளர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
மானிப்பாய்

(CS/59583A) J-1

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை : பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்
விண்ணப்பதாரரின் பெயர் : கேமலதாஸ் பாமினி
ஆதனப்பதிவேட்டின் படி பெயர் : சொந்தக்காரர்
ஆதன இல -28 வீதி - அப்பிலாக்கை வீதி வட்டாரம் -08

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 08 "அப்பிலாக்கை வீதியில்" ஆதன இலக்கம் 28 ல் ஆதனம் அமைந்துள்ளது. பொன்னம்பலம் நாகலிங்கத்திற்கு சொந்தமான இவ் ஆதனத்தை சிவப்பிரகாசம் ஹேமலதாஸ் கைம்பெண் சகுந்தலாதேவிக்கு நன்கொடையாக கையளித்து இறந்துவிட்டார் என்பதை வெளிப்படுத்தல் உறுதி மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். குறித்த ஆதனமானது 2013.05.22 ம் திகதிய பிரசித்தநொத்தாரிஸ் திரு.இ.வசந்தசேனன் அவர்கள் முகதாவில் இலக்கம் 9498 இல் அத்தாட்சிப்படுத்திய வெளிப்படுத்தல் ஹேமல்தாஸ் கைம்பெண் சகுந்தலிதேவி உறுதி மூலம் இவ்வாதனத்தை (ஹேமலதாஸ் கைம்பெண் சகுந்தலாதேவி) சொந்தமாக்கியுள்ளார்.
மேலும் குறித்த ஆதனத்தில் தனது ஆட்சியிலுள்ள பாகமான ஆதனம் தொடர்பில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் S.விஜயபிரகாஸ் அவர்களால் அளந்து வரைந்த 733 ம் இலக்க 12.04.2025 ஆம் திகதிய நில அளவைப்படத்தில் துண்டு 1 ஆக காட்டப்பட்ட காணியின் அளவு நிலப்பரப்பு எட்டு குழி பத்து தசம் இருபத்தாறு (நிலப்பரப்பு 8 குழி 10.26) ஆகும்
ஆதன விபரம்
வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவு வலிதென்மேற்குப் பிரதேச சபை, மானிப்பாய் பண்டத்தரிப்பு கோவிற்பற்று மாகியப்பிட்டி இறை J/144 கிராம அலுவலர் பகுதி "அம்பிலாக்கை நிலப்பரப்பு பதினாறு (16) கிணறுப்பங்கும் வழி வாய்க்கால் உரித்தும் ஆகும். இதன் எல்லைகள்
கிழக்கு :- செல்லத்துரை செல்லம்மா
வடக்கு :- செல்லையா கந்தசாமி
மேற்கு :- சிவலிங்கம் மதனகாமராஜன்
தெற்கு :- உலகநாதன் ரஞ்சன்
மேற்குறித்த ஆதனம் கேமலதாஸ் பாமினி என்பவருக்கு 9500 இல 2013.05.22 ம் திகதிய நன்கொடை உறுதி மூலம் வழங்கப்பட்டுள்ளது. கேமலதாஸ் பாமினி என்பவர் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு கிராம உபஅலுவலகத்தின் ஆதனப்பதிவேடுகளில் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார். மேற்படி ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் கேமலதாஸ் பாமினி என்பவரின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன உரிமை மாற்றம் செய்வதால் ஏற்படக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துகொள்கிறேன்

தவிசாளர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
மானிப்பாய்

(CS/59583B) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கிலி அறுப்பு; இருவர் கைது!

யாழ்ப்பாணம், ஒக்.5

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கனகம்புளியடிப் பகுதியில் வீதியால் சென்ற ஆசிரியர் ஒருவரின் சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பிச்சென்ற இருவரை சாவகச்சேரிப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். குறித்த ஆசிரியர் கடந்த மாதம் 22ஆம் திகதி பாடசாலை முடித்து வீடு சென்றபோது வீதியால் உந்துருளியில் வந்த இருவர் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர். இதுகுறித்து ஆசிரியரால் பதிவுசெய்யப்பட்ட முறைப் பாட்டுக் கமைய விசாரணைகளை முன்னெடுத்த சாவகச்சேரி குற்றத்தடுப்புப் பொலிஸார் அச்சுவேலிப் பகுதியைச் சேர்ந்த இருவரை நேற்றுக் கைதுசெய்துள்ளதுடன் அவர்களிடமிருந்து சங்கிலியையும் மீட்டுள்ளனர். (ச-28)

## மணமகள் தேவை

யாழ் RC மதம் 1982 ல் பிறந்த கொழும்பில் வசிக்கும், வேலை செய்யும் மணமகனுக்கு படித்த நல்ல குடும்ப பின்னணியுள்ள மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு:-
076 041 0334

(CS/59586) J-1

## வேலையாட்கள் தேவை

கொடிகாமம், சாவகச்சேரி பகுதிகளில் இயங்கி வரும் அச்சகம் ஒன்றிற்கு தொழில் தெரிந்தவர்கள் மற்றும் பழக விரும்புபவர்கள் ஆண், பெண் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
077 805 4404

(CS/46433) J-1

## வேலைவாய்ப்பு

கொழும்பில் உள்ள சில்றைக்கடைக்கு அனுபவமுள்ள ஆண் வேலையாள் தேவை. சாப்பாடு, தங்குமிட வசதி இலவசம். வயது 30 - 55 இடையில். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 700 8187

## விற்பனைக்கு

வெள்ளவத்தையில் நவீன புதிய 3 படுக்கையறை அபார்ட்மெண்ட் உடனடியாக விற்பனைக்கு. (தரகர் தேவையில்லை)

077 770 0582

## பணியாட்கள் தேவை

திருகோணமலை கன்னிகாவிலுள்ள ஒருங்கிணைந்த பண்ணையில் (பசுக்கள் / தோட்டம் பராமரிப்பதற்கு) தங்கியிருந்து வேலை செய்வதற்கு பணியாட்கள் தேவை. உணவு, தங்குமிடத்துடன் தகுந்த சம்பளம் வழுங்கப்படும். சம்பளம் 50 000/= வயது - 30 வயதிற்கு மேற்பட்டோர் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 479 1183

## வேலையாட்கள் தேவை

**யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் (JJCDR)**

**வெற்றிட அறிவிப்பு:** நிர்வாக அலுவலர்

நிர்வாக அலுவலர் பதவிக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. தகுதி மற்றும் விண்ணப்பிக்கும் முறைகள் தொடர்பான விபரங்களுக்கு எங்கள் இணையதளமான https://www.jjcdr.com/ அல்லது எங்கள் பேஸ்புக் பக்கமான "JJCDR - Jaffna Jaipur Centre for Disability Rehabilitation" பார்க்கவும்.

விண்ணப்பிக்க இறுதி நாள்: 17 அக்டோபர் 2025

(CS/59585) J-1

## வேலைவாய்ப்புகள்

- சிகையலங்கரிப்பாளர் : 0779858327
- Software Technician : 0775566129
- Student Counselor Executive : 0776953717
- Medicine Store Assistant : 0752217661
- Painter : 0773580547
- Technical Officer : 0773580547
- முகாமையாளர் : 0777738783
- Brand Promoters : 0755555546
- Tea Maker : 0740943967
- மேசன் : 0773580547
- Visa Application Assistant : 0772155933
- Hotel Manager : 0771006394
- புடவையக வேலையாட்கள் : 0766323554
- Chef : 0773090868
- குசினி உதவியாளர் : 0777917753
- தச்சு வேலையாட்கள்(Carpenter) : 0773580547

வேலைவாய்ப்பு வட்சப் குருப்ல் இணைய மற்றும் மேலதிக

யாழ் வேலைவாய்ப்புகளுக்கு :

dewmasweb.com

**வேலையாட்கள் தேவையா?**

**07777 333 68**

DEWMAS, 51, Amman Road, Nallur

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## பொதுச்சந்தைகள், மீன் சந்தை, இறைச்சிக்கடைகள் மற்றும் வாகனத்தரிப்பிடம்
## குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2026

கீழ்க்குறிப்பிடப்படும் பொதுச்சந்தைகள், மீன் சந்தை, இறைச்சிக்கடைகள் மற்றும் வாகனத்தரிப்பிடம் என்பன 2026ஆம் ஆண்டிற்கு (01.01.2026 - 31.12.2026) வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் சபையினால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 07.10.2025 - 21.10.2025 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி : 21.10.2025 பி.ப 02.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 21.10.2025 செவ்வாய்க்கிழமை பி.ப 02.00 மணி
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் : வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாகக் குறிப்பிட்டு மூலப்பிரதியையும் இணைப்பிரதியையும் "தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்" என்னும் முகவரிக்கு எதிர்வரும் 21.10.2025 ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலும் கேள்வியை தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதுடன், உரிய கட்டணங்களைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | விபரம் | வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப்படிவ கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | 2025 ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (VAT,NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | **அச்சுவேலி உப அலுவலகம்** | | | | |
| 1 | அச்சுவேலி ஆட்டிறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 5,000.00 | 15,620.00 |
| 2 | அச்சுவேலி பொதுச்சந்தை | - | 1,000.00 | 200,000.00 | 10,313,683.00 |
| 3 | அச்சுவேலி பொதுச்சந்தையின் உட்புற வாகன தரிப்பிடம் | - | 1,000.00 | 25,000.00 | 1,413,500.00 |
| 4 | அச்சுவேலி மாட்டிறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 60,000.00 | 3,225,200.00 |
| 5 | அச்சுவேலி கோழி இறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 25,000.00 | 1,243,550.00 |
| 6 | வளலாய் தம்பாலை பொதுச்சந்தை | - | 1,000.00 | 10,000.00 | 254,650.00 |
| 7 | வளலாய் கோழி இறைச்சிக்கடை | 2,800.00 | 1,000.00 | 10,000.00 | 226,372.00 |
| 8 | வளலாய் மாட்டிறைச்சிக்கடை | 2,800.00 | 1,000.00 | 5,000.00 | 187,000.00 |
| | **புத்தூர் உப அலுவலகம்** | | | | |
| 9 | புத்தூர் மாட்டிறைச்சிக்கடை | 3,250.00 | 1,000.00 | 100,000.00 | 5,170,110.00 |
| 10 | புத்தூர் பொதுச்சந்தை | - | 1,000.00 | 45,000.00 | 2,311,650.00 |
| 11 | புத்தூர் கோழியிறைச்சிக்கடை | 3,250.00 | 1,000.00 | 15,000.00 | 719,664.00 |
| 12 | புத்தூர் ஆட்டிறைச்சிக்கடை | 3,250.00 | 1,000.00 | 5,000.00 | 62,700.00 |
| | **கோப்பாய் உப அலுவலகம்** | | | | |
| 13 | கோப்பாய் மீன்சந்தை | - | 1,000.00 | 15,000.00 | 687,225.00 |
| 14 | கோப்பாய் மாட்டிறைச்சிக்கடை | 2,250.00 | 1,000.00 | 110,000.00 | 6,099,500.00 |
| 15 | கோப்பாய் கோழியிறைச்சிக்கடை | 2,250.00 | 1,000.00 | 15,000.00 | 572,000.00 |
| | **உரும்பிராய் உப அலுவலகம்** | | | | |
| 16 | உரும்பிராய் மாட்டிறைச்சிக்கடை | 4,500.00 | 1,000.00 | 85,000.00 | 4,600,530.00 |
| 17 | உரும்பிராய் மத்திய சந்தை | - | 1,000.00 | 40,000.00 | 1,992,100.00 |
| 18 | உரும்பிராய் கோழி இறைச்சிக்கடை | 4,500.00 | 1,000.00 | 20,000.00 | 981,090.00 |
| 19 | உரும்பிராய் ஆட்டிறைச்சிக்கடை | 4,500.00 | 1,000.00 | 5,000.00 | 231,000.00 |

01. சந்தையிலிருந்து 1/2 கி.மீற்றர் சுற்றாடலில் மீன், இறைச்சி, மரக்கறி விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.
02. கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையுடன் அதன் நிழற்படப்பிரதியையும் பிரதேச கிராம சேவையாளரினால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் அல்லது வங்கிக்கணக்கு புத்தகப்பிரதியையும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
03. கேள்வித்தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு காலத்துக்குக்காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரி செலுத்தப்படவேண்டும். அத்துடன் விலை மதிப்பீட்டுத்திணைக்களத்தினால் மாதாந்த வாடகை மீளமதிப்பீடு செய்யப்படும் போது மதிப்பீடு செய்யப்படும் தொகை செலுத்தப்படல் வேண்டும்.
04. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
05. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
06. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோ அல்லது அவரினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
07. சந்தையை குத்தகைக்கு எடுப்பவர்களால் உற்பத்தியாளர்களினால் கொண்டு வரப்படும் உற்பத்திபொருட்களுக்கு 4% வரி அறவிடப்படல் வேண்டும். பொதுச்சந்தையில் கழிவு நடைமுறை, தரகுக்கட்டண அறவீடு என்பன முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.
08. கேள்வி கோரும் ஒவ்வொரு கேள்விகளுக்கும் தனித்தனியாக மீளளிக்கப்படாத படிவக் கட்டணமும், மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமும் செலுத்தப்படவேண்டும்.
09. வாகனத்தரிப்பிடம் குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாக எதனையும் அறவிடக்கூடாது.
10. சபையின் அச்சுவேலி கொல்களத்தில் அல்லது சபையினால் அனுமதி வழங்கப்படும் கொல்களத்தில் ஆடு, மாடுகளை அறுப்பதற்கு அனுமதி வழங்கப்படும்.
11. கடைகளில் இறைச்சிகளின் விலைகள் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
புத்தூர்
2025.10.05

(CR/46431) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கத்தானையில் வயர்கள் திருட்டு தம்புள்ளயில் இருவர் சிக்கினர்!

யாழ்ப்பாணம், ஒக்.5

சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியிலுள்ள வீட்டில் மின் இணைக்கும் வயர்களைத் திருடிய சம்பவம் தொடர்பில் இருவர் சாவகச்சேரிப் பொலிஸாரால் தம்புள்ளயில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சங்கத்தானைப் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுவரும் வீடு ஒன்றில் தம்புள்ளப் பகுதியைச் சேர்ந்த இருவர் தங்கியிருந்து வீட்டு மின் இணைப்பு வேலையில் ஈடுபட்டு வந்தனர்.

இந்தநிலையில் அங்கிருந்த ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வயர்களைத் திருடிக்கொண்டு அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர் என வீட்டு உரிமையாளரால் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாட்டுக்கமைய சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் போதைப்பொருள் மற்றும் குற்றத்தடுப்புப் பொலிஸ் உப பரிசோதகர் மயூரன் தலைமையிலான குழுவினர் தம்புள்ளப் பகுதியில் வைத்து திருடப்பட்ட பொருள்களுடன் குறித்த இரு சந்தேகநபர்களையும் கைது செய்து சாவகச்சேரிப் பொலிஸ் நிலையம் அழைத்துவந்துள்ளனர்.

(ச- 28)

**பணிப்பெண் தேவை**

யாழ். சுண்டுக்குழி பகுதியில் சிறிய குடும்பத்திற்கு வீட்டு பணிப்பெண் தேவை. தங்கி நின்று பணிப்புரிபவர்கள் விரும்பத்தக்கது.

**077 724 2427**
**070 5279 841**

(CS 30532) A

**மாத வாடகைக்கு அறைகள் உண்டு**

சுண்டுக்குளி பகுதியில் மாத வாடகைக்கு அறைகள் உண்டு. அத்துடன் மலிவு விலையில் வீட்டு தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு.

**077 724 2427**

(CS 30533) A

## வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்
## ஒப்பந்த அடிப்படையில் சுகாதாரத் தொழிலாளர்களை பெற்றுக்கொள்வதற்கான கேள்வி அறிவித்தல் - 2025

01. வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் சேவை வழங்கலுக்கான வியாபாரப்பதிவுடைய கேள்விதாரர்களிடமிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஒப்பந்த அடிப்படையிலான சுகாதாரத் தொழிலாளர்களை பெற்றுக்கொள்வதற்கான அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
02. கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி : 2025.10.07 தொடக்கம் 2025.10.21 பிற்பகல் 02.30 மணி வரை
    கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 2025.10.22 மு.ப 10.00 மணி வரை
    கேள்வி திறக்கும் திகதி : 2025.10.22 மு.ப 10.00 மணி
03. கேள்வி கோரல்கள் யாவும் தேசிய போட்டிக்கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.
04. கேள்விதாரர் இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட திருப்திகரமான சேவையினை வழங்கியவராகவும் வலிதான வியாபார பதிவினை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் கேள்வி கோரப்படும் சந்தர்ப்பத்தில் கறுப்புப்பட்டியலில் இடம்பெறாமல் இருத்தல் வேண்டும்.
05. கேள்விதாரரின் பதிவுக்காரியாலயம் அல்லது கிளை அலுவலகம் வடமாகாணத்தில் அமையப் பெற்றிருத்தல் வேண்டும்.
06. தகுதிவாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை 07.10.2025 தொடக்கம் 21.10.2025 வரையான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 02.30 மணி வரை மீளளிக்க முடியாத படிவக் கட்டணமாக ரூபா 2.000.00 இனை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
07. அத்துடன் கேள்விதாரர் மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமாக ரூபா 25.000.00 இனைப் பணமாக அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்று பற்றுச்சீட்டின் பிரதியினை கேள்விப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
08. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை இரு பிரதிகளில் தயாரித்து தனித்தனியாக மூலப்பிரதி, இணைப்பிரதி எனக்குறிப்பிட்டு தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிட்டு "தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, தலைமை அலுவலகம், புத்தூர்" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு 22.10.2025 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். (பதிவுத்தபால் முடிவுத்திகதிக்கு முன்னர் கிடைக்கப் பெறவேண்டும்) அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் யாவும் நிராகரிக்கப்படும்.
09. கேள்வி திறக்கப்படும் போது கேள்வியாளரோ அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்க முடியும்.
10. வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் பெறுகைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கமைவாக கேள்வியினை ஏற்றுக்கொள்ளவோ அல்லது முற்றாக நிராகரிக்கவோ முடியும்.
11. மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் வலிகாமம் கிழக்கு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | சேவை விபரம் | சேவை தேவைப்படும் இடம் | பால் | தேவைப்படும் ஆளணி எண்ணிக்கை | சேவை தேவைப்படும் காலம் |
|---|---|---|---|---|---|
| 01 | சுகாதாரத் தொழிலாளி (ஒப்பந்த அடிப்படை) | வலிகாமம் கிழக்கு பிரதேசசபை | ஆண் | 10 | 01/11/2025 தொடக்கம் 31/12/2026 வரை |

தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை.

05.10.2025

## விலைமனுக் கேள்விக்கான அழைப்பு IX
## மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்
### குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் யாழ் பிராந்திய அலுவலகத்தின் பாவனைக்கான வீட்டினை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல்

1. யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் சார்பாக மாவட்டச் செயலகத்தின் திணைக்களப் பெறுகைக்குழுவின் தலைவர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் யாழ் பிராந்திய அலுவலகத்தின் பாவனைக்கான வீட்டினை வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட மூடிய விலைக்கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. இது தேசிய போட்டி விலைக்கேள்வி முறையாக இருந்தாலும் யாழ் மாவட்ட செயலகத்திலிருந்து 03KM வரையான எல்லைக்குள் வீட்டின் உரிமையைக் கொண்டிருக்கும் கேள்விதாரர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
3. ஆர்வமுள்ள கேள்வியாளர்கள் யாழ் மாவட்ட செயலக பெறுகை அலகில் கேள்விப்பத்திரங்களை இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களையும் பெற்றுக் கொள்ள முடியும். மேலும் ஒரு கேள்விதாரருக்கு கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகள் மட்டுமே விநியோகிக்கப்படும்.
   தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள் :
   021 221 4633, 021 222 2233, 2234 (Ext. – 140) Facsimile – 021 222 3674
   www.jaffna.dist.gov.lk
4. அக்கறையுள்ள கேள்வியாளர்கள் எழுத்து மூலமான விண்ணப்பத்துடன் மீளளிக்கப்படாத கட்டணமாகிய (Non refundable fee) அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணத்தில் உள்ள பெறுகை அலகு அலுவலகத்தின் மூலம் செலுத்தி பற்றுச்சீட்டை சமர்ப்பிக்குமிடத்து 07.10.2025 தொடக்கம் 21.10.2029வரை மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 02.00 மணிவரை அலுவலக நேரங்களில் கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.
5. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்வித்தொகைகளுக்கான கேள்வி ஆவணங்கள் தலைவர், திணைக்களப் பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 21.10.2025 பி.ப 2.30மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைக்கப்படல் வேண்டும். மேலும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் கேள்வி இலக்கத்தினையும் (Bid ID), கேள்வி விபரத்தினையும் (Description) குறிப்பிடல் வேண்டும். கேள்விகள் சமூகமளிக்கும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமாக கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
6. விலைக்கேள்வி செல்லுபடிக்காலம் (Bid Validity) கேள்வி இறுதித் திகதியிலியிருந்து அல்லது நீடிக்கப்படும் திகதியிலிருந்து 49 நாட்கள் ஆகும்.
7. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதி முடிவாக அமையும்.
8. அட்டவணை கீழ்வருமாறு :

| கேள்வி இல | விபரம் | ஒப்பந்த காலம் | மீளளிக்கப்படாத தொகை (ரூபாவில்.) |
|---|---|---|---|
| JDS/PROC/HOUSE RENT/11/15/2025 | 02 அல்லது 03 அறைகள், இரண்டு குளியலறை மற்றும் வாகன தரிப்பிடத்துடன் கூடிய வீடு வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் | 1வருடம் | 500.00 |

9. வாடகைக்குப் பெறப்படும் 02 அல்லது 03 அறைகள், இரண்டு குளியலறை மற்றும் வாகன தரிப்பிடத்துடன் கூடிய வீடானது குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் யாழ் பிராந்திய அலுவலகத்திலிருந்து 03 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்திருத்தல் வேண்டும் என்பதுடன் குறித்த வீடானது உரிய தகுதி விதிகளைப் பூர்த்தி செய்துள்ளதா என்பது மாவட்ட செயலாளரினால் நியமிக்கப்படும் குழுவின் நேரடி பரிசோதனை மூலம் மதிப்பீடு செய்யப்படும்.
10. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒருபகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு திணைக்கள பெறுகைகள் குழுவிற்கு அதிகாரமுள்ளது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியை தேவை

தரம் 3, தமிழ், சித்திரம் அத்துடன்
தரம் 10 - English medium science -
Home visit, Jaffna

தொடர்பு: 074 380 2161

## வேலையாள் தேவை

சாரதி அனுமதிப்பத்திரத்துடன்
A/C வேலை தெரிந்த
அனுபவமுள்ளவர்கள் தேவை

(CS/59553) J-1

தொடர்புகளுக்கு:-
076 383 6657

## காரியாலய இடம் வாடகைக்கு/ குத்தகைக்கு

40 அடி அகலம் கொண்ட பிரதான பாதையில் 3500 சதுர அடி, 40 வாகன தரிப்பிட வசதியுடன் அரச, அரச சார்பற்ற வியாபார நிறுவனங்களுக்கு கட்டிடம் வாடகைக்கு உண்டு. (யாழ் புகையிரத நிலையம், பஸ் நிலையம், யாழ் வைத்திய சாலை மற்றும் வங்கிகளுக்கு அருகாமையில்.)

(CS/59540) J-1

தொடர்பு:- 074 089 0936

## வலி கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச்சங்கம் வ-து
## அங்கத்தவர்களுக்கான நலத்திட்டம் தொடர்பான அறிவித்தல்

எமது சங்கத்தில் 24.12.2023இல் நடைபெற்ற வருடாந்த பொதுக்கூட்டத்தில் உருவாக்கப்பட்ட நலத்திட்ட நடைமுறைவிதியானது 25.03.2024 ல் இருந்து நடைமுறைக்கு உட்படுகின்றது.

சங்கத்தின் இயங்குநிலை அங்கத்தவர்களுக்கு பின்வரும் நலத்திட்டங்கள் ஏற்புடையதாக அமையும்.

1) அங்கத்தவர்களின் பிள்ளைகளின் கற்றல் ஊக்குவிப்பு
- ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கான கொடுப்பனவு.
- கா.பொ.த சா/த- (O/L) பெறுபேறு 7Aக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கான கொடுப்பனவு
- கா.பொ.த உ/த - (A/L) சித்தி பெற்று அரச பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான கொடுப்பனவு.

2) அங்கத்தவர் ஒருவரின் நிரந்தர இயலாமைக்கான கொடுப்பனவு.

3) அங்கத்தவர்களின் மரணக் கொடுப்பனவு

25.03.2024 காலப்பகுதிக்கு பின்னர் இத்திட்டத்திற்கு தகுதியான அங்கத்தவர்கள் அலுவலக நேரத்தில் அலுவலகத்தினூடாக விண்ணப் பப்படிவத்தினைப் பெற்று அதனைப் பூரணப்படுத்தி 26.10.2025ற்கு முன்னர் காரியாலயத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தலைவர்,
வலி-கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக்,
கூட்டுறவுச் சங்கம்.
தொ.இல: 077 923 2462
076 711 1168

(CR/40427) J-1

## ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 12 காரைதீவு வீதி. 332/2 என்னும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் மீரான் சாகிப் ஆயிசா மொகிதீன் என ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

செல்லையா அந்தோனிப்பிள்ளை மற்றும் மரியம்மா 08.12.1975ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு எம்.எம். சுல்தான் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6130ம் இலக்க சீதன உறுதி மூலம் சுவாம்பிள்ளை யேசுதாசன் பெண் றீற்றா அல்லது சந்தம்மா என்பவருக்கு தமது சீவிய உரித்திற்கமைவாக வழங்கியுள்ளார்.

சுவாம்பிள்ளை யேசுதாசனும் பெண் றீற்றாவும் 28.07.2010ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6523ம் இலக்க சீதன உறுதி மூலம் செல்வராஜா மைக்கல் பெண் மேரி பற்றிஷியா என்பவருக்கு வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை. "கொத்தியார் முனாங்கு" உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் ஜே.மனுவல் அவர்களால் 10.05.1947ம் திகதி அளந்து விபரித்த 333ம் இலக்க படத்தின்படி விஸ்தீரணம் நிலப்பரப்பு 1 குளி 7. இதில் குறித்த படத்தில் துண்டு 1 எனச்சுட்டப்பட்ட பாகம் (வடக்கு பக்கமாக அரைவாசி) குளி (12 1/2) பன்னிரண்டரையும் கல்வீடும் குறித்த படத்தில் துண்டு 2 எனச்சுட்டப்பட்ட பாகத்திலுள்ள கிணற்றிலிதற்குரிய பங்கும் மற்றுமதற்குச் சேர்ந்தவைகளும்.

இதற்கெல்லைகள்.-

கிழக்கு : கிறிஸ்கோ கைம்பெண் அந்தோனிக்கத்தின் ஆதனம்.

வடக்கு : மார்க்கு மேரியனின் ஆதனம்.

மேற்கு : நாகமுத்து இராமலிங்கத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம்.


தெற்கு : கையொழுங்கை முகப்பும் குறித்த படத்தில் துண்டு 2 எனச்சுட்டப்பட்ட பாகமும் இடங்கலும்.

தற்போது இவ்வாதனத்தை செல்வராஜா மைக்கல் பெண் மேரி பற்றிஷியா தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத் திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும். உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது செல்வராஜா உறுதிப்படுத்தப்பட்ட மைக்கல் பெண் மேரி பற்றிஷியா என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

முதல்வர்,
யாழ் மாநகரசபை.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
29 . 11 . 1947



மறைவு
16 . 10 . 2024

### அமரர் கிருஷ்ணசாமி வாசுதேவன்

(ஓய்வுபெற்ற ஒளிப்பட இயக்குனர் சுகாதாரத் திணைக்களம்,
வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய கணக்காளர்)

திதி : சதுர்தசி


கண்ணை இமை காப்பது போல்
எம்மைக் காத்து கடுகளவும்
குறை இல்லா வாழ்வு தந்து
சொந்தமும் பந்தமும் மெச்சிப் பேச
சீருடனும் சிறப்புடனும் வாழ வைத்து
என் கடன் பணி செய்து கிடப்பதே - என்ற இலக்கனத்தில் வாழ்ந்து
இறையடி சென்ற எம் தெய்வமே

என்றும் உம் நினைவுகளுடன் வாழும்
மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
மற்றும் உறவினர்கள், நண்பர்கள்

(CS 30514) E

## மரண அறிவித்தல்

தோற்றம்
22 . 10 . 1947



மறைவு
04 . 10 . 2025

### அமரர் கெங்காதரம் கிருபானந்தன்

இருபாலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கெங்காதரம் கிருபானந்தன் 04.10.2025 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கெங்காதரம் - வேதரத்தினம் தம்பதியினரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான தியாகராஜா - மகேஸ்வரி தம்பதியினரின் மருமகனும், சுபத்திராதேவியின் அன்புக் கணவரும், துஸ்யந்தி (Physiotherapist - சாவகச்சேரி வைத்தியசாலை), ரவிச்சந்திரன் (Green Tech NSWDB), கோபாலரட்ணா (QS. Rana Construction) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தயான் (RDA - TO - Point pedro), Dr.சிவரஞ்சினி (Teaching Hospital Jaffna), சாம்பவி (Commercial bank Jaffna) ஆகியோரின் மாமனாரும், ஷாஷ்வதி, ஷஷ்டிக்குமரன், அபிஷேக், அபினாஷ், அபிஷ்னா, சிவஏரகன் ஆகியோரின் அன்புப் பேரனும், பரமேஸ்வரன் (UK), கனகராஜா (UK), தயாநிதி, Lion காண்டீபன் JP (Swasthi Enterprises), உமாசுதன் (UK), ராமநிதி (UK), வேதகெங்கா, நந்தினி (France) ஆகியோரின் அன்பு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திங்கட்கிழமை (06.10.2025) அன்று காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை நெச்சிக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 59577) E

டச்சு வீதி,
[illegible], கோப்பாய்
யாழ்ப்பாணம்

தகவல் : குடும்பத்தினர்
துஸ்யந்தி - 077 181 1223
ரவிச்சந்திரன் (குமரன்) - 076 450 4569
கோபலரட்ணா (கண்ணன்) - 077 514 3819

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OFFICE SPACE

The Construction Guarantee Fund (CGF), a Government Organization, seeks an office space of approximately 400 sq.ft with Electricity and Water, for Long Lease/Rent within Jaffna city limits to re-locate its Northern Regional office. Security, Parking and Government Valuation Report will be an advantage.

**Only with the principals** should forward your offers through a sealed cover with your terms and conditions to **Manager-Administration, Construction Guarantee Fund (CGF), "Savsiripaya", 123, Wijerama Mawatha, Colombo 07** before 24th October 2025


# காஸாவில் போர் நிறுத்தம்!

காஸாவில் அமைதியை ஏற்படுத்துவதற்காக, அமெரிக்க அதிபர் ட்ரம்பால் முன்மொழியப்பட்ட 20 அம்சத் திட்டத்துக்கு இஸ்ரேலும் ஹமாஸ் போராளிகளும் சம்மதித்துள்ளனர். இதையடுத்து, காஸாவில் விரைவில் போர் நிறுத்தம் ஏற்படும் என்று நம்பப்படுகின்றது.

(ம)


## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் தொலைபேசி விற்பனை நிலையத்திற்கு
➤ விற்பனையாளர் ➤ திருத்துனர் (Repair) ➤ மேற்பார்வையாளர்
தேவை. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 077 361 1282

(CS/59578) J-1

## மணமகள் தேவை

யாழ்ப்பாணம் சைவ (K) 1995 இல் பிறந்த Doctor மணமகனுக்கு, Doctor மணப்பெண் தேவை

மருத்துவபீடம் எனினும் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: (Whatsapp) 0041 7645 79532

(CS 46379) E




Sri Lanka German Training Institute - SLGTI
Ministry of Education, Higher Education and Vocational Education
Vocational Education Division

SLGTI

## Renewable Energy Technology (Full-Time)

Under the German Dual Vocational Training System
NVQ Level 4, 5 & 6

Applications are invited from suitably qualified candidates to enroll in Renewable Energy Technology and related training in Mechatronics, Energy Management, and Green Skills. The course is conducted by the Sri Lanka German Training Institute (SLGTI), Kilinochchi in collaboration with CGTTI Moratuwa and the Sri Lanka Sustainable Energy Authority (SLSEA) Solar Park Training Center, Hambantota and others, forming the National Renewable Energy Training Hub.

### Key Training Areas

- Renewable Energy Technology (NVQ Level 4,5 & 6)
  - Wind Power Technician
  - Solar PV System Technician
  - Hydropower Technician
  - Biomass Technician

The program is structured to begin with the Basic Workshop Training, and then systematically progress through NVQ Level 4, NVQ Level 5, and finally NVQ Level 6, ensuring a solid foundation and advanced professional competence.

### Related Technology Areas

The program is implemented under the German Dual Training System, combining classroom instruction with extensive hands-on, project-based training. It emphasizes Applied Integrated Mechatronics Systems, fostering expertise in green technologies, innovation, research, and strong industrial collaboration to meet both local and global industry needs.

- Delivery time : Weekdays from 08:30 to 16:15 hrs.
- Duration 4 Years - 2 Years of Institutional Training (SLGTI, CGTTI & Training Centers in SLSEA)
  - 2 Years of relevant Industrial Training (rotational training)
- Age limit : Between 16 to 22 years
- Eligibility : Successfully completed G.C.E O/L (including Mathematics, Language with 6 subjects in maximum two attempts)
- Selection Method : Interview and Aptitude Test

Click the link to get the course details, fees, and online application. Submit, the completed online application.

The closing date is October 27, 2025.

"The course is conducted by German Tech – Kilinochchi in collaboration with CGTTI – Moratuwa, the Sri Lanka Sustainable Energy Authority (SLSEA), and private sector


## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 16 கொழும்புத்துறை வீதியில் அமைந்துள்ள 69/14 எனும் வரி மதிப்பீட்டு இலக்கத்தை கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனவரிப்பதிவேட்டில் காணப்படுகிறது. இவ்வாதனத்தை யாழ்ப்பாணம் சுண்டிக்குளி இராமுப்பிள்ளை கனகரத்தினம் என்பவர் பிரசித்த நொத்தாரிசு சிவலிங்கம் முகதாவில் 17.02.1971ம் திகதி 755ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் நெற்பரப்பு 4 விஸ்தீரணத்தை கொண்ட ஆதனத்தை கனகரத்தினம் மனோகரனுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் கொழும்புத்துறை வீதியைச் சேர்ந்தவர்களான மனோகரன் கைம்பெண் விஜயகுமாரியும், மனோகரன் சுமிலாவும், மனோகரன் சுஜீகரனும், முகமட் உமர் சபீலும் பெண் சுதர்ஷனாவும் ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு K.M இராதாக்கிருஷ்ணன் முகதாவில் 15.04.2013ம் திகதி 972ம் இலக்க அறுதி உறுதி மூலம் சின்னையா மகள் நிசாந்தினி என்பவரிற்கு வழங்கியுள்ளார்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி யாழ்ப்பாணப் பிரதேச செயலகம், யாழ் மாநகரசபை, சுண்டுக்குளி வடக்கு (J/76) கிராம அலுவலர் பிரிவு, சுண்டிக்குளி கோவிற்பற்று, சுண்டிக்குளி இறை, "ஆராய்ச்சியார் தாழ்வு வயலும் மறுபிரிவுகளும்" நெற்பரப்பு பதினாறு (நெற்.பர.16) இதில் வடக்குப் புறமாக பிரிக்கப்பட்ட நெற்பரப்பு நான்கு (நெற்.பர.4) இதில் மேற்குப் பக்கமாக நெற்பரப்பு இரண்டும் குளி இரண்டு தசம் இரண்டு ஆறு ( நெற்.பர. 2 குளி 2.26) இது 2011ம் ஆண்டு மே மாதம் 25ந் திகதி நிலஅளவையாளர் பி.தனராஜா அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 2828ஏம் இலக்க வரைபடத்தில் நெற்பரப்பு இரண்டு குளி இரண்டு தசம் இரண்டு ஆறு ( நெற். பர. 2 குளி 2.26) வீடும் வான் பயிர் செய்பயிர்களும்.

இதற்கெல்லைகளாக :-

கிழக்கு :- மிகுதி ஆதனம்.
மேற்கு :- இராமுப்பிள்ளை நடராசாவுக்குரிய ஆதனம்.
வடக்கு :- முத்துக்குமாரு பெண் ஆச்சிமுத்துவுக்குரிய ஆதனம்.
தெற்கு :- தெற்கேயிருக்கும் றோட்டிலிருந்து வரும் பன்னிரண்டடி (12) அகலமான பாதைக்குப் போக்குவரவு செய்வதற்காகத் தெற்கேயுள்ள பெருநிலத்தில் ஒதுக்கப்பட்ட பதினைந்தடி (15") அகலங் கொண்ட வழிப்பாதை நிலமும் இதடங்கலும்.

தற்போது இவ்வாதனத்தை சின்னையா மகள் நிசாந்தினி என்பவர் தமது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத் தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சின்னையா மகள் நிசாந்தினி என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முதல்வர்
யாழ் மாநகர சபை

(CR 46411) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பாவனைகளால் வழிதவறும் இளைஞர்கள்!

## கடந்த ஆட்சியே வழிவகுத்தது

## பவானந்தராஜா எம்.பி. சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஒக்.5

கடந்த ஆட்சிகளில் ஏற்பட்ட போதைப்பழக்கம், தொலைபேசிப் பாவனை காரணமாக இளைஞர்கள் திசைமாறிச் சீரழிந்துகொண்டிருக்கின்றனர். எனவே அவர்களை ஒரு நல்ல நிலைமைக்குக் கொண்டுவரவேண்டிய பொறுப்பு எங்களுக்கு உள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீ பவானந்தராஜா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் சங்கானை வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நல்லொழுக்க தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமூக மாற்றங்கள் எவ்வாறு ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று அனைவருக்கும் தெரியும். ஒழுக்கமின்மையே இதற்கெல்லாம் காரணம். ஒழுக்கமானது குடும்பத்தில் ஆரம்பித்து, பின்னர் கிராமத்துக்குப் பரப்பப்பட்டு, அது நாடு நோக்கி நகரவேண்டும். கடந்த ஆட்சியாளர்கள் ஒரு போதைப்பொருள் தொழிற்சாலையையே உருவாகும் அளவுக்குக் கண்டும் காணாமலும் இருந்துள்ளார்கள். எனவே அவர்களை அடக்குவது எமது அரசாங்கத்தின் கடமை. அதனை நாங்கள் செய்வோம் - என்றார். (ச-27)



# ஈழத்துப்படைப்பாளி ராணி சீதரனுக்கு இலக்கிய விருது

யாழ்ப்பாணம், ஒக. 5

ஈழத்துப்படைப்பாளி திருமதி ராணி சீதரனின் சிறுவருக்கான சிலப்பதி காரம் என்ற நூலுக்கு திருப்பூர் இலக்கிய விருது வழங்கப்பட்டுள்ளது.

திருப்பூர் இலக்கிய விருது வருடந்தோறும் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முகமாக வழங்கப்படுகிறது.

இவ்விருது வழங்கும் விழா கடந்த 21ஆம் திகதி நடைபெற்றது. இம்முறை திருப்பூர் விருதை முப்பது படைப்பாளிகள் பெற்றுக்கொண்டார்கள். இதிலேயே ஈழத்துப் படைப்பாளி திருமதி ராணி சீதரனின் சிறுவருக்கான சிலப்பதிகாரம் என்ற நூலுக்கும் இந்த விருது கிடைத்துள்ளது. இந்த விருதை ராணி சீதரன் சார்பாக ஓவியர் புகழேந்தி பெற்றுக்கொண்டார். (ச-41)

# உலக குடியிருப்பு தின நிகழ்வுகள் யாழில்!

யாழ்ப்பாணம், ஒக்.5

யாழ்.மாவட்டத்தில் உலக குடியிருப்பு தினம் மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது பயனாளிகளுக்கான வீடமைப்புத் திட்டத்தினைப் பெற்றுக்கொண்டமைக்கான சான்றிதழ்களும், தென்னங்கன்றுகளும் வழங்கப்பட்டன. (ச-41-27-9)




## மின்கட்டண...

மின்சாரசபையால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுக்கு பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு இன்னும் இரு வாரத்துக்குள் தனது முடிவை அறிவிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின் கட்டணத்தைத் திருத்துவது தொடர்பான செயன்முறைகள் தற்போது இடம்பெற்றுவருகின்றன. 6.8 வீதத்தால் மின் கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்ற முன்மொழிவை இலங்கை மின்சார சபை முன்வைத்துள்ளது. எனினும், இன்றளவும் இந்த முன்மொழிவுக்குப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு ஒப்புதல் வழங்கவில்லை.

இந்த நிலையிலேயே, எதிர்வரும் இருவாரத்துக்குள் அனேகமாக ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதிக்குள் இந்த விடயம் தொடர்பில் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் நிலைப்பாடு அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

## வடக்கு...

வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது:-

சட்டவிரோதக் கடற்றொழில்களைக் கட்டுப்படுத்துவதற்கு எத்தனை சட்டங்கள் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டாலும் வடக்குக் கடற்றொழிலாளர்களை மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே அரசாங்கங்கள் அணுகுகின்றன. இது வேதனையான விடயம்.

சீன கடலட்டைப் பண்ணைகளால் வடமாகாண மீனவர்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர். இந்தப் பண்ணைகளுக்கு எதிராகக் கடந்த ஆட்சியில் நாங்கள் போராட்டத்தில் ஈடுபட்ட போது, தற்போதைய கடற்றொழில் அமைச்சர் எங்களின் போராட்டத்தில் தோளுடன் தோள் நின்றார். அவரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரனும் இந்தப் போராட்டங்களில் ஆற்றிய பங்களிப்புப் பெரியது. ஆனால், பதவிக்கு வந்த பின்னர் இந்த விடயங்கள் தொடர்பில் தொடர்ச்சியாக அவர்கள் மௌனம் காக்கின்றனர். அன்று பிழையாகத் தெரிந்த சீனக் கடலட்டைப் பண்ணைகள் இன்று சரியாகப் போய்விட்டதா? என்று அவர்களிடம் கேட்கின்றோம்.

அமைச்சர் சந்திரசேகர் பதவிக்கு வந்த பின்னர் அத்தனை சட்டவிரோத கடற்றொழில்களையும் கண்டும் காணாமல் இருக்கின்றார். இது வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரத்தை கருவறுக்கும் செயல் என்பதை சுட்டிக் காட்டுகின்றோம்.

### அமெரிக்கத் தடைகளால் பொருளாதாரப் பேரழிவு!

வடக்கு மாகாணத்தில் கடல்சார் பிரதான ஏற்றுமதிப் பொருளாதாரமாக நீலக்கால் நண்டுகளே காணப்படுகின்றன. அவற்றின் பிரதான சந்தையாக அமெரிக்கா உள்ளது. இந்த நிலையில், ஜனவரி மாதத்தில் இருந்து நீலக்கால் நண்டுகளை இறக்குமதி செய்வதை அமெரிக்கா நிறுத்தவுள்ளதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன. இதனால், வடமாகாணத்தில் 5 தொழிற்சாலைகள் பாதிக்கப்படும். அத்துடன், மூவாயிரத்துக்கும் மேற்பட்ட பெண் தலைமைக் குடும்பங்களும், ஆறாயிரம் மீனவக் குடும்பங்களும் பெரும் பொருளாதார அழிவை எதிர்நோக்கவுள்ளன.

நீலக்கால் நண்டுகளின் ஏற்றுமதியில் 95 வீதமானவை வடக்கைச் சார்ந்தே உள்ளன. 5 வீதமானவையே புத்தளம் உள்ளிட்ட நாட்டின் ஏனைய பகுதிகளைச் சார்ந்தவை. எனவே, அரசாங்கம் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் செயற்படாமல், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வொன்றை விரைவாகத் தேடவேண்டும் - என்றார். (அ-ம-27)

## குறிகாட்டுவான்...

குறிகாட்டுவான் இறங்குதுறையை சீரமைக்கும் பணிகள், துறைமுகங்கள் மற்றும் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கவால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் வீதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் செயற்படுத்தப்படும் 'மறுமலர்ச்சிக்கான பாதை' திட்டத்தின் கீழ், குறிகாட்டுவான் இறங்குதுறையை சீரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறிகாட்டுவான் இறங்குதுறைக்கான வீதி அபிவிருத்திப் பணி 299 மில்லியன் ரூபா நிதியில் முதல் கட்டமாக முன்னெடுக்கப்படவுள்ளது. அடுத்த கட்டமாக 800 மில்லியன் ரூபா செலவில் குறிகாட்டுவான் இறங்குதுறை மறுசீரமைக்கப்படவுள்ளது.

அத்துடன், நெடுந்தீவில் எரிபொருள் நிரப்பு நிலையமொன்றை அமைப்பதற்கான ஒப்பந்தமும் இதன்போது கைச்சாத்திடப்பட்டுள்ளது.

கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர்களான க. இளங்குமரன், மருத்துவகலாநிதி எஸ்.ஸ்ரீபவானந்தராஜா, ஜெ.ரஜீவன், யாழ். மாவட்டச் செயலர் ம.பிரதீபன், வேலணை மற்றும் நெடுந்தீவுப் பிரதேச செயலாளர்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாணப் பணிப்பாளர், மாவட்டப் பொறியியலாளர்கள், வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர், நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ-ம)

## சீரற்ற...

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று அதிகாலை நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக, மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/28 கிராம அலுவலர் பிரிவில் இரண்டு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேபோல் சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/169 கிராம அலுவலர் பிரிவில் வீடு ஒன்று பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் நால்வர் பாதிக்கப்பட்டுள்ளனர் - என்றார். (அ-ம-66-26)

## வல்லிபுர...

சமுத்திரத் தீர்த்தத் திருவிழா நடைபெறவுள்ளது. நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை கேணித் தீர்த்தத் திருவிழாவும், அன்றையதினம் மாலை 6 மணியளவில் கொடியிறக்க உற்சவமும் நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (அ-ம-66)

## யாழ்...

எனவே, 'ஓ பொசிடிவ்' வகை குருதி உடையவர்கள், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு நேரடியாக வருகைதந்து குருதிக் கொடையில் ஈடுபடுமாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் குருதி வங்கிப் பிரிவினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-ம-66)

## திஸ்ஸ...

மீளவும் கையளிக்குமாறு வலியுறுத்தியும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி பாதிக்கப்பட்ட பொது மக்களுடன் இணைந்து மாதாமாதம் போராட்டம் நடத்தி வருகின்றது.

இந்த மாதத்துக்கான தொடர் போராட்டம் இன்று மாலை ஆரம்பித்து நாளைவரை இடம்பெறவுள்ளது. இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணி முதல் மாலை 6 மணி வரையும், பௌர்ணமி நாளான நாளை திங்கட்கிழமை காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரையும் போராட்டம் இடம்பெறவுள்ளது.

இந்தப் போராட்டத்தில் பொதுமக்கள், அனைத்துக் கட்சியினர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள் என அனைத்துத் தரப்பினரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (அ-ம-66-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு சுற்றுலாதின நிகழ்வு கிளிநொச்சியில் திங்களன்று!

வடக்கு மாகாண உலக சுற்றுலாதின நிகழ்வு 'சுற்றுலாவும் அதன் நிலைபேறான நிலை மாற்றமும்' எனும் தொனிப்பொருளில் நாளை திங்கட்கி ழமை மாலை 4மணிக்கு கிளிநொச்சி பசுமைப்பூங்காவில் நடைபெறவுள்ளது. உலக சுற்றுலாதின நிகழ்வு தொடர்பான ஏற்பாடுகளை இறுதிசெய்வதற்கான முன்னாயத்தக் கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தலைமையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. (ச-41-113)

# எலி எச்சங்களுடன் உணவு; உணவகங்களுக்குத் தண்டம்!

வல்வெட்டித்துறை நகராட்சிமன்றத்தின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில், சுகாதாரச்சீர்கேட்டுடன் இயங்கிய உணவகம் உள்ளிட்ட நான்கு வர்த்தக நிலையங்களுக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்துள்ளது. சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாமை, காலாவதி கடந்த உணவுப்பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்தமை, தூசுபடிந்த நிலையில் உணவுப்பொருள்களை விற்பனை செய்தமை மற்றும் எலி எச்சங்களுடன் உணவுப்பொருள்களைக் களஞ்சியப்படுத்தி வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் குறித்த உணவகம் உள்ளிட்ட வர்த்தக நிலையங்களுக்கு எதிராக க வல்வெட்டித்துறை நகராட்சிமன்றத்தின் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ப.தினேஸினால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்யப்பட்டது. குறித்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டநிலையில் உணவகத்துக்கு 50 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் பல்பொருள் வாணிபங்கள் மூன்றுக்கு முறையே 40,000 ரூபா,10,000 ரூபா மற்றும் 60,000 ரூபா தண்டப்பணமும் விதிக்கப்பட்டுள்ளது. (ச-100-26-20)

---

## கட்டட வேலையாட்கள் தேவை

மேசன், தச்சுவேலை, செய்பவர்கள் உடனடியாகத் தேவை

தொடர்பு: 077 312 1328

---

## காணி உடனடி விற்பனைக்கு

யாழ் இராமநாதன் வீதியில் பல்கலைக்கழகத்திற்கு அருகில் 1 1/4 பரப்பு சுற்று மதில் குழாய்கிணற்றுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு. வீடு, விடுதி கட்டுவதற்கு உகந்தது.

தொடர்பு: 077 723 5740

---

## காணி விற்பனைக்கு

கரவெட்டியில் 8 1/4 பரப்புக்காணி விற்பனைக்கு. தரகர் தேவையில்லை

தொடர்பு: +164 72849422
Whatsapp (கனடா)

---

## வேலையாட்கள் தேவை

121/1 மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தையல் கடை ஒன்றிற்கு தைக்கத் தெரிந்த ஆண் அல்லது பெண் வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு:
077 211 5987

(CS/59565) J-1

---

## காணி விற்பனைக்கு

உரும்பிராயில் 2 பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு. விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
076 363 7390

(CS/59588) J-1

---

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள மோட்டார் சைக்கிள் மற்றும் உதிரிகள் விற்பனை நிலையத்திற்கு பணியாளர்கள் தேவை.

077 772 7784, 076 772 7784

(CS/56317) J-1

---

## Spoken English & Grammar Classes

Grade 7 to பட்டதாரிகள்
International School Students
K.Ganesh B.A (UOP)
யாழ் கந்தர்மடம்

077 766 8725

---

## காணி விற்பனைக்கு

யாழ்.பல்கலைக்கழகம் மற்றும் பிரபல பாடசாலைகளுக்கு அண்மையில் அமைந்துள்ள 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்

தொடர்புக்கு:
0771209998

---

## காணி தேவை

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடற்கரைக்கு அருகிலுள்ள தனியார் கடற்கரை அணுகலுடன் காணி தேவை. மண்டைதீவு, வேலணை தீவு (கயிட்ஸ்), எழுவைதீவு, நெடுந்தீவு, காங்கேசந்துறை (KKS) போன்ற கடற்கரைக்கு அருகிலுள்ள தனியார் கடற்கரை அணுகல் உடைய காணிகள் (40-50 பரப்பு ) தேவை.

அத்தகைய காணிகள் இருப்பின் தயவுசெய்து எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:-
075 130 5949, 077 975 2025

(CR/57561) J-1

---

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழி அமரா வீதியில் 18 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.

- இருவழிப் பாதையுடன்
- A9 வீதியிலிருந்து 150m தூரம்
- அமரா வீதி முகப்புடன்
- 1 பரப்பின் விலை 10 லட்சம்
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நாவற்குழி சந்தி 400m தூரம்.
- நாவற்குழி சிவன்கோவில் 300m தூரம்.
- நன்னீர் ஊற்று, நல்ல சூழல்

தொடர்புகளுக்கு:-
076 860 2770, 076 987 8617

---

## வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கும் பிரபல அரிசி ஆலைக்கு முகாமையாளர் மற்றும் விற்பனை உதவியாளர் தேவை.
தங்கள் சுய விபரக் கோவையுடன் வருகை தரவும்.
ஸ்ரீகுமரன் இரும்பகம்
83, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:- 021 222 8304

(CS/59535) J-1

---

## வேலையாள் தேவை

மிளகாய்தூள் உற்பத்திக்கும், பண்ணைக்கும் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய வேலையாள் தேவை. (குடும்பமாகவும் ஏற்றுக்கொள்ளப்படும்) வயது 35 - 50.
உணவு தங்குமிடம் வழங்கப்படும்.
வெளிமாவட்டத்தினரும் விண்ணப்பிக்க முடியும்.
இடம் - சுன்னாகம், யாழ்ப்பாணம்
(காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை தொடர்பு கொள்ளவும்)

தொடர்புகளுக்கு:- 070 557 7798

---

## பராமரிப்பாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் சிறிய குடும்பம் ஒன்றை பராமரிப்பதற்கு பெண் பராமரிப்பாளர்கள் தேவை. சம்பளம் 100.000 வரை வழங்கப்படும். 35 வயதிற்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:- 077 774 3185

---

## மணமகள் தேவை

யாழ். இந்து 1992 இல் பிறந்த கொழும்பில் தொழில் புரியும் சொந்த வீடு சொந்த வியாபாரஸ் தலங்கள் உள்ள 3 மாதத்தில் விவாகரத்தான (குழந்தைகள் அற்ற) மணமகனுக்கு வேலை, சீதனம் இல்லாத, திருமணம் முடிக்காத மணமகள் தேவை.

077 906 1527

---

## கார் விற்பனைக்கு

புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட Toyota Raize Car 2024 Oct - model உடனடி விற்பனைக்கு யாழ்ப்பாணத்தில் உண்டு. விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 071 207 1341

(CS 59571) E

---

## வேலையாள் தேவை

யாழ் நகரில் நீண்ட காலமாக இயங்கும் உணவகம் ஒன்றிற்கு பில் போடும் வேலைக்கு ஆள் தேவைப்படுகின்றது (ஆண், பெண் இருபாலரும் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு: 077 119 0011

(CS 59573) E

---

## அபாகஸ் பிராஞ்சைஸி வாய்ப்பு!

(முகவர்கள், பிராந்திய முகவர்கள்)

உலகின் நம்பர் 1 அபாகஸ் நிறுவனத்துடன் இணைந்து கல்வித் தொழில்முனைவோராக வளர அரிய வாய்ப்பு.

- குறைந்த முதலீடு - அதிக வருமானம்
- ஆசிரியர்கள், கல்விநிலையங்கள், சுயதொழில் முனைவோர், பகுதிநேர வேலைவாய்ப்பு தேடுவோருக்கு சிறந்த சந்தர்ப்பம்
- முழுமையான பயிற்சி & ஆதரவு

Gama Abacus Academy ®

GAMA ABACUS
www.gamaabacus.com
+94 77 011 1211
+91 906 111 1211

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper


பக்கத்து வீட்டுக்கு வந்ததெல்லாம் வாங்கினாளே
பக்கமெல்லாம் காசுகடன் பட்டாளே – சிக்கனமாய்
நன்றாக வாழாது நின்றதாலே கட்டியவன்
நின்றானே தண்டவாளம் மீது.

பொன்.சுகந்தன்

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2056 புரட்டாதி 19 ஞாயிற்றுக்கிழமை (05.10.2025) சிகரம் :159



# காற்றாலைகளை எதிர்க்கும் ஒரு தீவு




நிலாந்தன்

மன்னாரில் குறிப்பாக மன்னார்த் தீவுப் பகுதியில் காற்றாலைகள் நிறுவப்படுவதற்கு எதிராக அங்குள்ள திருச்சபையினரும் பொதுமக்களும் கடுமையாக எதிர்ப்பைக் காட்டிவருகிறார்கள். கடந்த திங்கட்கிழமை அங்கே கடை முடக்கமும் ஆர்ப்பாட்டமும் இடம்பெற்றன. சில வாரங்களுக்கு முன்பு கத்தோலிக்கத் திருச்சபையின் மறைமாவட்ட ஆயர் ஜனாதிபதியைச் சந்தித்திருந்தார். சந்திப்பின்போது அவர் மன்னாரில் நிகழும் கனிமவள அகழ்வு மற்றும் காற்றாலைத் திட்டங்கள் போன்றவற்றைக் குறித்துப் பேசியதாக அறிய முடிகிறது. அதன்பின் ஆயர் ஐரோப்பாவில் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில், ஜனாதிபதி அநுரகுமாரவும் வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டிருந்த அதே காலகட்டத்தில், மன்னார்த் தீவுப்பகுதியில் காற்றாலைகளை நிறுவுவது என்ற தனது முடிவை அரசாங்கம் அறிவித்திருந்தது.

அவ்வாறு காற்றாலைகளை நிறுவுவதற்குத் தேவையான உபகரணங்கள் தீவுப்பகுதிக்குள் கொண்டுவரப்படுவதைத் தடுக்கும் நோக்கத்தோடு கடந்த 26ஆம் திகதி இரவு அந்தப் பகுதி மக்களும் கத்தோலிக்க மதகுருமாரும் தீவின் வாயிலில் நின்று போராட்டம் நடத்தியபொழுது, அவர்கள்மீது பொலிஸார் பலப்பிரயோகத்தை மேற்கொண்டார்கள். இதில் பெண்களும் மதகுருமார்களும் தாக்கப்பட்டார்கள், அவமதிக்கப்பட்டார்கள். இதன் விளைவாக அங்குள்ள மக்கள் கடந்த திங்கட்கிழமை பொதுமுடக்கத்துக்கும் ஆர்ப்பாட்டத்துக்கும் அழைப்பு விடுத்திருந்தார்கள். மன்னாரில், குறிப்பாக கனிமவள அகழ்வுக்கு எதிரான போராட்டத்தில் யாருமே கேள்விகளை எழுப்புவதில்லை. அதைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்ற அபிப்பிராயம் எல்லாத் தரப்புகளிடமும் உண்டு. ஆனால் காற்றாலை விடயத்தில் அங்கு போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் முன்வைக்கும் கருத்துகள் விஞ்ஞானபூர்வமானவை அல்ல என்ற ஒரு விமர்சனம் ஒரு பகுதி தமிழ் மக்கள் மத்தியிலேயே உண்டு.

மன்னார்த்தீவில் காற்றாலைகள் நிறுவப்பட்டதன் பின்னர் அந்தப்பகுதியைச் சேர்ந்தவர்கள் மழைக்காலங்களில் தங்களுடைய வீடுகளுக்குள் வெள்ளம் தேங்கி நிற்பதாகவும், கடற்றொழில் பாதிக்கப்படுவதாகவும், காற்றாடிகள் சுற்றும் சத்தம் அதிகமாக இருப்பதாகவும் முறைப்பாடு செய்கின்றார்கள். இது போன்ற முறைப்பாடுகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை என்று தெரிகிறது. அதனால்தான் கடந்த வாரம் அந்தப்பகுதியில் காற்றாலைகளை நிறுவுவது என்ற தனது முடிவை அரசாங்கம் மீள உறுதிப்படுத்தியது. நாட்டின் அனல் மின் நிலையங்கள் சுற்றுச்சூழலுக்கு ஆபத்தானவை என்பதனால் மீளப்புதுப்பிக்கும் எரிசக்தித் திட்டங்களை அரசாங்கம் நிறுவிவருகின்றது. இந்த அடிப்படையில் ஏற்கனவே வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வீடுகளின் கூரைகளில் சூரிய மின்கலங்கள் கடன் அடிப்படையில் பொருத்தப்பட்டுவருகின்றன. இந்த மின்கலங்களைப் பொருத்துவதன்மூலம் குறிப்பிட்ட பயனாளி இலாபமடைகிறார். அதனால்வரும் வருமானம் அவருடைய வீட்டுத் தேவைகளுக்கான மின் பாவனைக் கட்டணத்தை முழுமையாக இல்லாமல் செய்கின்றது. இதுதவிர, மாதாமாதம் மேலதிகமாக இலாபமும் கிடைக்கும். அந்த இலாப நோக்கமானது அவர்களை அறியாமலேயே பசுமை மின்சக்தித் திட்டத்துக்குப் பங்களிப்புச் செய்கின்றது.

உலகம் முழுவதும் பசுமை மின்சக்தித் திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டுவருகின்றன. மனித நாகரிகம் என்பதே இயற்கையைச் சுரண்டுவதில் இருந்துதான் தொடங்குகின்றது. எனவே இயற்கையைச் சுரண்டாமல் அபிவிருத்தி இல்லை. இந்த விடயத்தில் இயற்கையின் சமநிலை கெடாமல் எப்படி அபிவிருத்தி செய்வது என்று சிந்தித்து கண்டுபிடிக்கப்பட்டவைதான் சூழல் நேயத் திட்டங்கள். வளர்ச்சி அடைந்த நாடுகளில் காற்றாலைகள் வெற்றிகரமாக நிறுவப்பட்டு வருகின்றன. அண்மையில் ஸ்பெயின் நாட்டின் ஒருநாள் மொத்த மின் பாவனையை முழுக்கமுழுக்க பசுமை மின்சக்தியின்மூலம் பூர்த்தி செய்து சாதனை செய்யப்பட்டதாகச் செய்திகள் வெளிவந்தன.

மேலும், ஐரோப்பாவில் காற்றாலைகள் தொடர்பாக வந்த விமர்சனங்களை உள்வாங்கி புதிதுபுதிதாக மாற்று ஏற்பாடுகள் கண்டுபிடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக காற்றாலை விசிறிகளில் பட்டு வலசைப் பறவைகள் இறப்பது தொடர்பான விமர்சனத்தை உள்வாங்கி செட்டைகள் இல்லாத காற்றாடிகள் எப்பொழுதோ உருவாக்கப்பட்டுவிட்டன. ஜெர்மனி இந்த விடயத்தில் முன்னோடியாகக் காணப்படுகிறது. அதுபோலவே அண்மையில் நிகழ்த்தப்பட்ட ஆய்வின்படி காற்றாலைகளின் செட்டைகளில் ஒன்றைக் கறுப்பாக்கினால் அங்கே கொல்லப்படும் பறவைகளின் எண்ணிக்கை 70வீதத்தால் குறையும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறு காற்றாலை மின் சக்தியின் சூழல்நேயப் பண்பை மேலும் மேம்படுத்தும் நோக்கத்தோடு ஐரோப்பா முன்னேற்றகரமான புதிய காற்றாடிகளைக் கண்டுபிடித்துவருகிறது. இப்படிப்பட்டதோர் உலக மற்றும் உள்நாட்டுச் சூழலில், மன்னார் மக்கள் ஏன் காற்றாலைகளை எதிர்க்கிறார்கள் என்று ஒரு பகுதியினர் கேள்வி கேட்கின்றார்கள்.

இங்கே முக்கியமாக இரண்டு விடயங்களைக் கவனிக்க வேண்டும். மன்னார் மக்கள் மன்னாரின் தீவுப்பகுதியில் காற்றாலைகள் நிறுவப்படுவதைத்தான் எதிர்க்கிறார்கள். யாரும் சூரிய மின்கலங்களை எதிர்ப்பதாகத் தெரியவில்லை.

இந்த விடயத்தில் காற்றாலை தொடர்பான மன்னார்த்தீவு மக்களின் கவலைகளை சம்பந்தப்பட்ட துறைசார் நிபுணர்கள், அதிகாரிகள், மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் போன்றவர்கள் கேட்கவேண்டும். இதில் மாற்று ஏற்பாடு ஏதும் உண்டா என்று சிந்திக்கவேண்டும். இதுதொடர்பாக அரசாங்கம் 19.08.2025 அன்று நியமித்த சிறப்புக்குழு கடந்த மாதம் முதலாம் திகதியன்று (01.09.2025) அங்குள்ள சிவில் சமூகத்தோடு(MCC) உரையாடியதாக அதன் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. எனினும் மக்களுடைய பயங்களைப் போக்க முடியவில்லை. காற்றாலைகள் ஏன் வேண்டாம் என்பதற்கு மன்னார்த் தீவுப்பகுதி மக்கள் கூறும் காரணங்கள் எவையாகவும் இருக்கலாம். ஆனால் காற்றாலைகள் ஏன் வேண்டும் என்பதற்குக் கூறப்படும் பிரதான காரணத்திலிருந்து சிந்தித்தால் அந்த மக்களின் பயத்தைப் போக்கவேண்டியது அவசியம். சூழல்நேய அபிவிருத்தித் திட்டங்கள் எவையும் அந்தச் சூழலில் வாழும் மக்களின் பங்களிப்போடு உருவாக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் அந்தச் சூழலுக்கு அந்த அபிவிருத்தித் திட்டம் முழுமையாக நேசமானதாக அமையும். அந்த மக்களின் விருப்பமின்றி அதை அங்கே பலவந்தமாக நிறுவ முடியாது. அப்படி நிறுவினால் சூழல்நேய அபிவிருத்தி என்ற அடிப்படைச் சிந்தனை கேள்விக்குள்ளாகிவிடும். எனவே ஒரு பகுதி மக்கள் அதை எதிர்க்கிறார்கள் என்று சொன்னால் அவர்களுடைய பயங்களை, கவலைகளைப் போக்கவேண்டிய, மாற்று ஏற்பாடுகளைக் குறித்துச் சிந்திக்கவேண்டிய பொறுப்பு சம்பந்தப்பட்ட எல்லாருக்கும் உண்டு. அதுதொடர்பில் மக்களுக்கு விழிப்பூட்ட வேண்டிய பொறுப்பு அரசியல் தலைமைக்கு உண்டு.

மன்னாரில் காற்றாலைகளை முதலில் நிறுவ முற்பட்டது அதானி குழுமம் ஆகும். ஆனால் அது தொடர்பான இலாப நட்டப் பேரங்களில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக அதானி குழுமம் அந்த உடன்படிக்கையில் இருந்து வெளியேறிவிட்டது. இப்பொழுது உள்நாட்டு நிறுவனம் ஒன்று காற்றாலைகளை நிறுவிவருகிறது. இங்கு அரசியல் முரண் ஒன்றைச் சுட்டிக்காட்டவேண்டும். அதானி குழுமம் மன்னாரில் காற்றாலைகளை நிறுவ முற்பட்டபொழுது அதனை ஜே.வி.பி. உட்பட அரகலயப் போராட்டத்தில் ஈடுபட்ட அரசியல் செயற்பாட்டாளர்கள் எதிர்த்தார்கள். காலிமுகத்திடலில் "கோத்தா கோகம" கிராமத்தில் இந்திய விஸ்தரிப்பு வாதத்துக்கு எதிராக ஒரு பதாகை கட்டப்பட்டிருந்தது. அது அதானி குழுமத்தின் முதலீடுகளை எதிர்த்தது. இதுதொடர்பாக ஒரு தமிழ் அரசியல் செயற்பாட்டாளர் அந்தப் போராட்டத்தில் முன்னணியில் நின்ற ஒரு கத்தோலிக்கம் மதகுருவோடு உரையாடினார். "நீங்கள் இந்திய விஸ்தரிப்பு வாதத்துக்கு எதிராகப் போராடுகிறீர்கள் என்று சொன்னால், ஜே.வி.பி.யின் முன்னைய நிலைப்பாடுகளில் ஒன்றைத் தொடர்ந்து பின்பற்றுகிறீர்கள் என்று பொருள். ஜே.வி.பி.யின் முன்னைய நிலைப்பாட்டின்படி மலையகத் தமிழர்களை அவர்கள் இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் கருவியாகக் கண்டார்கள். அப்படியென்றால் அரகலயப் போராட்டமும் மலையகத் தமிழர்களை எதிரிகளாகப் பார்க்கின்றதா?" என்று அவர் கேட்டார். அந்தக் கத்தோலிக்க மதகுரு அதை மறுத்தார். "இல்லை நாங்கள் எல்லாவிதமான விஸ்தரிப்பு வாதங்களுக்கும் எதிரானவர்கள்" என்று சொன்னார். அப்படியென்றால் சீனா ஏற்கனவே அம்பாந்தோட்டையிலும் கொழும்புத் துறைமுகத்துக்கு அருகிலும் வந்துவிட்டது. அந்தச் சீன விஸ்தரிப்பு வாதம் தொடர்பாகவும் நீங்கள் பேசுவீர்களா? என்று அந்தத் தமிழ்ச் செயற்பாட்டாளர் கேட்டார். சில ஆண்டுகளுக்கு முன்பு அதானியின் முதலீட்டை இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் ஒரு பகுதி என்று எதிர்த்த அரகலயப்போராட்டங்களின் குழந்தைதான் இப்போதுள்ள என்.பி.பி. அரசாங்கம்.

08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
05 ஒக்ரோபர் 2025

# உள்ளகப் பொறிமுறையும் ஜெனீவாத் தீர்மானமும்!





அ.நிக்ஸன்

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை பற்றிய தீர்மானம் நிறைவேற்றப்பட முன்னர் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட குற்றச்செயல்கள் பற்றியும் வாக்குமூலங்களை வழங்கவேண்டும் என ஜெனிவாவில் கேட்பப்படுவதாகத் தெரிகிறது. குறிப்பாக அங்கு சென்றுள்ள தமிழர் தரப்பிடம் இது தொடர்பாக பேசப்பட்டிருக்கிறது. இன அழிப்புக் குற்றத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும் என்பதை தமிழ்த் தரப்பு 2009 க்குப் பின்னரான சூழலில் அழுத்தம் திருத்தமாக முன்வைக்கத் தவறியதன் விளைவுகள் தான் இவை என்பது கண்கூடு. பொறுப்புக் கூறல் என்பது வெறுமனே தனிநபர் குற்றங்களுக்கானது அல்ல. அரச பொறுப்புக் கூறல் மாத்திரமே முக்கியமானது. ஆகவே அரச பொறுப்புக்கூறல் என்பதைத் தமிழ்த்தரப்பு கடந்த 15 வருடங்களில் பொருத்தமான முறையில் கோரவில்லை. போர்க்குற்றம் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் என்பவை பற்றிய விசாரணைகளில் ,குற்றம் இழைத்த சிங்கள அரசியல்வாதிகள், இராணுவ அதிகாரிகள் மற்றும் விடுதலைப்புலிகள் உள்ளிட்ட தமிழ்ப் போராளிக்குழுக்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு தண்டிக்கப்படுவர்.

அத்தோடு அந்த விசாரணை முடிவடைந்துவிடும். ஆனால் அரசியல் தீர்வுக்கு வழியிருக்காது. ஆகவே 'இலங்கை ஒற்றையாட்சி அரச கட்டமைப்பு' என்பதை தமிழர்கள் ஏற்கவில்லை என்ற கடும் தொனியில் வாதங்கள் முன்வைக்கபட வேண்டும்.

ஒற்றையின்கீழ் உள்ள அரசியல் யாப்புச் சட்டங்கள் - அதன் நீதிமன்றங்கள் 1948 ஆம் ஆண்டு சோல்பரி அரசியல் யாப்புக் காலத்தில் இருந்தே தமிழர்களுக்கு அநீதி இழைத்துள்ளன என்பதை காரண - காரியத்துடன் விளக்கியிருக்கவேண்டும்.

இந்த விளக்கத்தின் பின்னணியில், அரச பொறுப்புக்கூறல் அவசியமானது எனத் தமிழ்த்தரப்பு அழுத்தம் திருத்தமாக முன்வைத்தால் மத்திரமே இன அழிப்புக்கான சர்வதேச நீதி விசாரணை என்பதைத் துணிவுடன் கோர முடியும். அத்துடன் இனஅழிப்பு என்பதை விசாரணை செய்வதற்குரிய சாட்சியப் பொறிமுறைகள் சர்வதேசத் தரத்தில் அமைந்திருக்க வேண்டும். ஆனால் அதற்குரிய தயாரிப்புகள் தமிழ்த் தரப்பினால் செய்யப்படவுமில்லை.

2009 க்குப் பின்னர் தமிழ்த்தரப்பின் தொடர்ச்சியான பல வீனமான செயற்பாடுகளின் பின்னணியிலேயே, உள்ளக விசாரணைப் பொறிமுறை என்பதை மாத்திரம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானமாக நிறைவேற்றும் ஆபத்து 2025 இல் ஏற்பட்டுள்ளது. ஆக, இந்த ஆண்டு ஜெனிவாவுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் மாத்திரமே அரச பொறுப்புக்கூறல் என்பது அழுத்தம் திருத்தமாக முன்வைக்கப்பட்டிருக்கிறது. அதுவும் ஒருமித்த குரலாகக் கோரப்படவில்லை.

இந்தப் பின்னணியில் தான் அநுர அரசாங்கம் உள்நாட்டு சட்ட அமைப்பு முறையின் (Domestic legal system) பிரகாரம் அந்த இன மோதலுக்குரிய அரசியல் தீர்வைக்கொண்டு வர முற்படுகிறது. உள்நாட்டு நீதிமன்றங்கள் ஊடாகவே அனைத்துக்குற்றங்கள் பற்றிய விசாரணைகளையும் நடத்த ஜெனிவாவில் விருப்பம் தெரிவித்துமுள்ளது. வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் இதனைத் தெளிவாக விளக்கியுள்ளார்.

அதேநேரம் ஈழத்தமிழர்கள் போன்று பாதிக்கப்பட்ட அரசற்ற இனம் ஒன்று சர்வதேசச் சட்டங்களைப் பயன்படுத்தி அரசுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முற்பட்டாலும், புவிசார் அரசியல் பொருளாதார போட்டிகள் அதற்கு இடம் கொடுக்காது. குறிப்பாக சர்வதேச நீதி என்பது புவிசார் அரசியல் பொருளாதார நலன்களின் பிரகாரமே அமைந்துள்ளது எனலாம். ஆகவே, புவிசார் அரசியல் பொருளாதார இலாபநோக்கிலேயே ஐ.நா. நியமங்களும் சர்வதேசச்சட்டங்களும்செயற்படுத்தப்பட்டுவரும் பின்னணியில், அரசற்ற ஓர் இனம் குறிப்பாக ஈழத்தமிழர்கள் எந்த வகையான அணுகுமுறைகளைப் பின்பற்ற முடியும்? என்ற கேள்விகள் எழுவது இயல்பானது.

தற்போது ஜெனிவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கூட்டத்தொடரில் இந்தோ - பசுபிக் பிராந்தியப் பாதுகாப்பு , அதன் ஊடான அரசியல் பொருளாதார இலாபங்களை கணக்கிட்டு இலங்கை விவகாரத்தை ஆராயும் உறுப்பு நாடுகள் தமக்குரிய முறையில் தீர்மானத்தைத் தயாரிப்பதாகத் தெரிய வருகின்றது. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் ஏற்கனவே இலங்கை அரசாங்கத்திடம் கையளித்துள்ள முன்னோடி அறிக்கையை மையப்படுத்தி தீர்மானம் வரவுள்ளது. இலங்கை இராணுவம் - விடுதலை புலிகள் என்ற இருதரப்புக் குற்றங்களை சமநிலையில் வைத்து, அதேநேரம் போர்க்குற்றம் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் பற்றிய விசாரணைக்கு உள்ளகப்பொறிமுறை அல்லது சர்வதேசத் தொழில்நுட்ப உதவிகளுடன் கூடிய உள்ளக விசாரணைப் பொறிமுறை ஒன்றைத் தீர்மானமானமாகப் பரிந்துரைக்கவுள்ளதாகவும் உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன.

## அரச பொறுப்புக்கூறல் என்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கத் தவறியதால் தமிழ்த்தரப்புக் கோரிக்கை கானல் நீராகுமா?

2025 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்துடன் இலங்கைக்கு வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் முடிவடைந்த பின்னணியில், உள்ளக விசாரணைப் பொறிமுறையை இந்தத் தீர்மானம் பரிந்துரைத்துள்ளது போலும்.

ஏற்கனவே 46/1 தீர்மானத்தை இலங்கை நிராகரித்திருந்தது. எந்த ஒரு பரிந்துரைகளும் இலங்கையினால் நடைமுறைப் படுத்தப்படவுமில்லை.

2020 ஆம் ஆண்டு கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது ஜெனிவாத் தீர்மானத்தை முற்றாகவே நிராகரித்திருந்தார்.

அதன் பின்னர் தீர்மானிக்கப்பட்ட அலுவலகப் பொறிமுறை எனப்படும் ஒஸ்லாப் (Oslap OHCHR Sri Lanka accountability project) திட்டத்தைக்கூட இலங்கை உரிய முறையில் செயற்படுத்தவில்லை. புதிய அரசாங்கம் என ஆணையாளர் நம்புகின்ற அநுர தலைமையிலான நிர்வாகம், பதவியேற்று ஒரு வருடமாகிவிட்ட நிலையிலும், ஜெனிவாவின் எந்த ஒரு பரிந்துரைகளிலும் கவனம் செலுத்தப்படவில்லை.

இந்த நிலையில், இன அழிப்பு என்று தமிழர்கள் கோருகின்ற விடயம் முற்றாகவே கவனத்தில் எடுக்கப்படவில்லை. ஒப்பாசாரத்துக்குக்கூட அது பற்றிய வார்த்தைகளே இல்லை. தொடர்ச்சியான முறையில் சிங்கள அரசியல் தலைவர்கள் ஐ.நா. நியமங்களையும் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களையும் புறக்கணித்துவரும் நிலையில், மீண்டும் மீண்டும் எந்த அடிப்படையில் ஐ.நா. இலங்கைமீது நம்பிக்கை வைக்கிறது?

எதற்காக ஈழத்தமிழர்களின் கோரிக்கைகள் தொடர்ச்சியாக மறுக்கப்பட்டு வருகின்றன?

2009 மே மாதத்துக்குப் பின்னரான சூழலில் ஈழத்தமிழர்களுக்கு ஒழுங்கான அரசியல் தலைமை இல்லை என்பது வேறு. ஒருமித்த குரல் செயற்பாடுகள் இல்லை என்பதும் வேறு. ஆனால் அவற்றைக் காரணம் காண்பித்து 2012 ஆம் ஆண்டில் இருந்து 2024 ஆம் ஆண்டு வரை முன்வைக்கப்பட்ட தீர்மானங்கள் எதையும் இலங்கை செயற்படுத்தவில்லை என்பதை ஏன் மனித உரிமைகள் பேரவை 2025 இல் இடம்பெறும் அமர்வில் ஏன் கவனத்தில் எடுக்கவில்லை?

2010 ஆம் ஆண்டு அப்போதைய ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்த நிபுணர் குழு, தமது அறிக்கையில், சர்வதேசக் குற்றங்கள் தொடர்பாக சுட்டிக்காட்டியிருந்த விவகாரங்கள் பற்றி ஏன் கவனத்தில் எடுக்கப்படவில்லை?

ஆகவே, அமெரிக்க- இந்திய அரசுகளின் புவிசார் அரசியல் நலன்களை மையப்படுத்தி 'இலங்கை அரசு' என்ற கட்டமைப்பைப் பாதுகாக்கும் நோக்கில் மேற்கு ஐரோப்பிய நாடுகள் செயற்படுகின்றன என்பதும், அதற்கு ஐ.நா. கட்டமைப்பு ஒத்துழைக்கிறது என்பதும் இங்கே பகிரங்கமாகிறது.

தமிழ்த் தேசியக்கட்சிகள் இலங்கை ஒற்றையாட்சி அரசின் தேர்தல் முறைமைகளுக்குள் முடங்கி இருக்கின்றமையும் இதற்குப் பிரதான காரண காரியமாகும். பல்துருவ அரசியல் மையமாக மாறிவரும் உலக ஒழுங்கில் ஈழத்தமிழர்களுக்கு சர்வதேச நீதி கிடைக்காது என்றில்லை. சர்வதேச சட்டங்கள், ஐ.நா. நியமங்கள் அனைத்தும் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு சாதகமாக இருப்பதை இலங்கை எவ்வாறு தமக்கு ஏற்ற மாதிரி பயன்படுத்துகிறதோ, அதேபோன்ற ஓர் அணுகு முறையில், அரசற்ற இனமாக வேறு நாடுகளுடன் தமிழ்த்தரப்பு உறவைப் பேண வேண்டும்.

பல்துருவ அரசியல் மையமாக மாறிவரும் உலக ஒழுங்கில் சிறிய நாடு ஒன்றுடன் அல்லது இந்தியா போன்ற வல்லரசுகளுடன் ஏதோ வழியில் உறவைப் பேணக்கூடிய வழி வகைகள் இல்லாமலில்லை. அவ்வாறு அணுகும்போது இலங்கை ஒரு சிறிய அதுவும் பொருளாதார பலவீனம் உள்ள நாடு என்ற அடிப்படையில் நிச்சயமாக ஈழத்தமிழர் விவகாரங்களில் விரும்பியோ விரும்பாமலோ கீழிறங்கி வர வேண்டிய கட்டாயச் சூழல் எழும்.

இலங்கையைத் தாங்கிப்பிடிக்கும் அமெரிக்க இந்திய அரசுகள்கூட படி இறங்கவேண்டிய பின்னணி உருவாகும். ஆனால், இந்த இராஜதந்திரம் என்பது ஈழத்தமிழ்த் தரப்பிடம் இன்று வரையும் இருப்பதாக இல்லை. சிங்களத் தலைவர்கள் காலத்துக்கு காலம் அதாவது, இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து குறிப்பாக போர் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து அமெரிக்க இந்திய அரசுகள் தம்மை நோக்கி படி இறங்கி வரக்கூடிய அணுகுமுறைகள், விட்டுக் கொடுப்புகள் போன்ற இராஜதந்திரங்களை பல சந்தர்ப்பங்களில் பேணியிருந்தன. இந்த அணுகுமுறையை தமிழ்த்தரப்பு இனியாவது நன்கு கற்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நவீன நாடகங்கள் ஊர்ப்புற நாடகங்களை அழித்துவிட்டனவா?



## பாஷையூரில் நடைபெற்ற ஜனரஞ்சக கலைக்கதம்பம்

○ கதிரேசு ரதிதரன்

முத்தமிழ்க் கலைஞர் மேம்பாட்டு மன்றத்தின் பாஷையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டு அரங்கில் 12.09.2025 அன்று கலை நிகழ்வுகள் நடைபெற்றன. மதி மாமாவின் (இரா. மதிகரன்) சிறுவர் மகிழ்வரங்கு, சிறப்புரைகள், கூத்துக்கலைஞர் அல்பிரட்டின் கூத்துப்பாடல்கள், நடனம், சினிமாப் பாடல்கள், காட்சியும் கானமும், நாடகம், இசை நாடகம், கூத்து விருந்தினர் உரை, கலைஞர்கள் அண்ணாவிமார் கௌரவிப்பு, பாடகி கில்மிஷா வரவேற்பு எனப் பல்வேறு நிகழ்வுகளைக்கொண்ட, ஜனரஞ்சகப் பண்புமிக்க ஒரு கலைக் கதம்பமாக அந்த நிகழ்வு அமைந்திருந்தது. நிகழ்ச்சிகளைத் தொகுத்து கருத்துரை வழங்கிய அறிவிப்பாளர் பல்கலைக்கழகமுன்னாள் உத்தியோகத்தரான மதிகரன் கலைகளை ஊக்குவிக்க எடுக்கும் விடாமுயற்சியும் இங்கு குறிப்பிடத்தக்கது. கூத்துக்கலைஞர் அல்பிரட் ஐயா கூத்துப்பாடல்களை மிகவும் சக்தியோடும் வீச்சோடும் பாடினார். குறிப்பாக அவரது பண்டாரவன்னியன் கூத்துப்பாடல் மிகுந்த உணர்ச்சியோடும் ஈர்ப்போடும் காணப்பட்டது .

முன்னர் பலகாலமாக நாடகங்களில் இடையிடையே சினிமாப் பாடலுக்கு வாயாட்டி ஆடி நடிக்கும் முறை இருந்தது. அந்த நாடகக் கூட்டங்களில் இருந்துதான் நாமும் நவீன அரங்குக்கு வந்தோம். முற்போக்குச் சிந்தனைகள் மற்றும் தமிழ்த் தேசிய வலுவுடன் எழுந்த நவீன அரங்கின் ஆதிக்கமும் அதன் விமர்சனமும் அதையொட்டியெழுந்த நாடகக் கல்வியும் ஊர் நாடக முறைகளை பின்வாங்கச் செய்தன. கிட்டத்தட்ட அவை மறைந்தன. நவீன அரங்கு ஊர்ப்புற அரங்கையும் வலுவிழக்கச் செய்துவிட்டு இப்போ தானும் மறைந்துபோகிறதோ என்ற சந்தேகம் வந்துள்ளது. இவ்வாறான மறைவுக்கு அல்லது அழிவுக்கு நாமும் பொறுப்புக்கூறவேண்டிய நிலையில்தான் உள்ளோம். எனினும் நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் ஊர் மக்கள் தமது மகிழ்வுக்காக தாமே நிதி சேர்த்து ஊர்கூடி தமது படைப்புகளால் தாமே மகிழ்ந்த நிகழ்வை இங்கு பார்க்கக்கிடைத்தது.

சினிமாப் பாடலுக்கு வாயாட்டி நடிக்கும் ' காட்சியும் கானமும்' என்ற ஒரு நிகழ்வைப் பார்க்கமுடிந்தது. ஆடல்கள், எடுப்புகள், கையசைப்புகள், நடைகள், அசைவுகள், சாறி மாற்றல்கள் எனப் பல்வேறு அம்சங்கள் அதில் அடங்கியிருந்தன. இந்தக் காட்சியும் கானமும்' நிகழ்ச்சியில் நடித்த அன்ரன் எல்மோவின் கலை நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தும் ஆர்வம் பாராட்டத்தக்கது. பார்வையாளர்கள் நன்கு இரசித்தனர். குறிப்பாக இளையதலைமுறை விசில் அடித்துப் பார்த்தது. சினிமாப் பாடல் பாடுவது, ஆடுவது போன்ற நிகழ்ச்சிக்கு இளைய தலைமுறையினர் மிக இலகுவாகக் கவரப்பட்டனர். இந்த நிகழ்வின் இறுதியில் சினிமாப்பாடல்கள் மட்டுமல்ல ஒரு பாரம்பரியக்கூத்தும் அதற்கு சமனாக அல்லது அதற்கும் மேலாக இளைஞர்களை கவர்ந்தது என்றால் அதை நம்ப முடியுமா? அதுபற்றி கீழே விபரிக்கப்பட்டுள்ளது.

பாஷையூர் இராஜேஸ்வரியின் "கொல்லிமலைக் குருடன்" என்ற இசை நாடகம் மேடை



யேற்றப்பட்டது கர்ண பரம்பரைக் கதையை அடிப்படையாகக்கொண்டு ஊர் நாடக முறைப்படி இந்த நாடகம் நடந்தது. ஊர் நாடக முறை என்றால் எந்தவித மருட்கைப் பண்பும் இல்லாது கதையை நிகழ்த்திக் காட்டுவோராக பாத்திரங்கள் செயற்படுவதாகும். உதாரணமாக கஞ்சி சமைத்துக் கொடுப்பதை வெறும் கையால் பாவனை செய்து காட்டுவதைக் குறிப்பிடலாம். மேடையிலிருந்து ஒரு தடவை மறைந்துவிட்டு திரும்பவந்தால் இடமாற்றமும் கால மாற்றமும் நடந்துவிடும். எந்தவித நவீன நாடக உத்திகளும் இங்கு தேவைப்படவில்லை. இந்த நாடக முறையில் சினிமா உடுப்புகள், நுட்பங்கள், பாடல் தழுவல் போன்றவற்றைத் தேவையான அளவு பயன்படுத்துவர். நடிப்பவர்கள் கூடக்குறைய நடிக்கமுடியும் ஆனால் பாத்திரங்கள் நடிப்பில் தவறவிடுபவற்றை பார்வையாளர் அந்த நாடகக் கதையை அடிப்படையாகக்கொண்டு விளங்கிக் கொள்வதோடு நாடகத்தையும் இரசிப்பர். இதில் சடகோபன் முனிவர் பாத்திரமேற்று நடித்த நெறியாளர் இராஜேஸ்வரியின் மகளது நடிப்பு, பாத்திரப் பொருத்தத்தோடும் மொழிச்செழுமையோடும் இருந்தது. அதேபோல ஏனைய பாத்திரங்களும் பேச்சு மொழியை சிறப்பாகப் பேசினர். மேடையில் பல தவறுகள் நடக்கும், வசனத்தை மறந்துவிடுவர். கேட்கக்கூடியவாறு ஞாபகப்படுத்துவர் இவைகளைத் தாண்டி நாடகம் நடந்தேறும். நவீன நாடகங்களின் எந்தப் பண்புகளும் இங்கில்லை. ஊர் நாடகப் பாணியில் அது பார்வையாளரைக் கவர்ந்தது. இந்த நாடகத்தைப் பார்த்த பொழுது சமகால நவீன நாடகங்களில் காணப்படாத அம்சங்கள் சில தெரிந்தன. அதாவது சமூக சீர்திருத்தங்கள், செய்தி சொல்லல், பிரசாரம்;, புரியாத குறியீடுகள், நவீன நாடக உத்திகள், கதையோட்டமற்ற சம்பவங்கள், எடுத்துரைப்பு அரங்க நுட்பங்கள், வெளிமீறல் என்று எதுவும் காணப்படவில்லை அத்தோடு தமிழ்த்தேசிய உணர்வை மையப்படுத்திய சம்பவங்களால் பார்வையாளரைக் கவரும் எந்தவித நுட்பமும் இங்கில்லை. இதில் பங்கேற்ற எல்லோருமே பெண்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அரியாலை கலைமகள் நாடகசபையின் "அரிச்சந்திர மயான காண்டம்" இசை நாடகமும் அங்கு நடைபெற்றது. இந்த நாடகத்தில் கனகரத்தினம் என்பவர் அரிச்சந்திரனாக பாத்திரம் ஏற்று நடித்திருந்தார். மிகவும் இயல்பாக பாத்திரத்தை வெளிப்படுத்தியதோடு எந்தவித சினிமா கலப்புமின்றி, சிவாஜியின் நடிப்பு பாணியின்றி, வைரமுத்துவின் ஒரு தொடர்ச்சியாக அவரது ஆற்றுகை வெளிப்பட்டது. மேலதிகமான எந்த நடிப்புச்செயற்பாடும் ஆரவாரங்களும் இல்லாமல் பாடலின் உணர்வு மற்றும் உணர்ச்சிக்கு அமைய அவர் தனது பாத்திரத்தை நடித்தமை குறிப்பிடத்தக்கது. அவரது பாடலும் சிறப்பிற்குரியதாக இருந்தது. மேலும் சந்திரமதி, சத்யகீர்த்தி போன்ற பாத்திரமேற்றவர்களும் திறம்பட நடித்திருந்தனர். ஆற்றுகை வெளிப்பாட்டில் குழுச்சமநிலை காணப்படவில்லை. மூத்த கலைஞர்கள் மற்றவர்களையும் தட்டிக்கொடுத்துச்செல்ல வேண்டும் என்பது அங்கு தெரிந்தது. திரும்பத் திரும்ப இந்தக் குழு ஆற்றுகையைத் தொடர்ந்து செய்யும்போது இன்னமும் முழுமைபெறும்.



அடுத்த நிகழ்ச்சியாக குருநகர் இளைஞர் கழகத்தின் தயாரிப்பில் அன்ருஜுலியசின் "கும்பகர்ணன் தென்மோடி கூத்து" ஆற்றுகை செய்யப்பட்டது. கவர்ச்சிமிக்க உடை ஒப்பனைகளுடன்கூடிய விறுவிறுப்பான ஒரு கூத்து ஆற்றுகையாக இருந்தது. வீரம், கோபம், பயம், சோகம் போன்ற பல்வேறு உணர்ச்சிகளை மையமாகக் கொண்டு, அதற்கு வலுச்சேர்க்கும் பின்னணி இசையுடன் நிகழ்த்தப்பட்டது. சுருக்கப்பட்ட இராமாயணத்தின் கும்பகர்ணனது கதை குறைந்த நேரத்தில் ஆற்றுகைசெய்யப்பட்டது. பாத்திரப் பொருத்தங்களும் கம்பீரமான தோற்றங்களும் அரங்கை மிளிரச்செய்து, பார்வையாளரை வசீகரித்து மகிழ்வித்தது. இந்த ஆற்றுகையில் பங்கேற்ற எல்லோருமே துடிப்பான இளைஞர்கள். கூத்துப் போன்ற கலை வடிவங்களில் எமது இன்றைய இளைய தலைமுறை நாட்டம் இல்லாது கைவிட்டுப்போகும் சூழலில் இவ்வளவு இளைஞர்கள் உற்சாகத்தோடு பங்கேற்றது வரவேற்கத்தக்கது, பாராட்டுக்குரியது. பாடலும் இசையும் நாடகத்தோடு பொருந்தி நேர்த்தியாக இருந்தன. நவீன நாடகத்தில் வரும் உரைஞர் போன்று கட்டியக்காரன் பாத்திரம் கதையை நகர்த்த உதவுகிறது. நேரத்தைக் குறைத்துச் செய்யும்போது கட்டியகாரன் பாத்திரமானது உரைஞனாகவும் நிற்பது தவிர்க்கமுடியாதது எனலாம். எனினும் கூத்தில் கட்டியக்காரன் என்பவர் கதையை நகர்த்த,

(04ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்ப்பின் உயிர்ப்பு

சஞ்சீவி குறுங்கதை

ஆனையூர்க் கவிராயர்



பொன்னின் கரைசலில் குளித்து எழுந்தது போன்று மஞ்சள் வண்ணம் தகதகக்கும் மேனியின் நடுவே, வெண்ணிலவின் முகத்தினைப் பிரதிபலித்து வெள்ளை வெளேரெனத் துலங்கும் வதனத்தின்மீது, மூன்று இருள் கீற்றுகள் போன்ற முட்கள் வலம்வர அந்தச் சுவர் மணிக்கூடு இயங்கிக்கொண்டிருந்தது. காலத்தின் அளவு கோலான அந்த மணிக்கூட்டின் உயிர்த் துடிப்பு இடைவிடாத காலநீட்சியை நினைவுபடுத்திக்கொண்டிருந்தது.

"நான் எப்படித்தான் பறந்து பறந்து உழைத்தாலும் மதிப்பே கிடையாது.. ஆமை வேகத்திலை ஓடுறவர்களுக்குத்தான் மதிப்பும் மரியாதையும்.... எல்லாம் என் தலைவிதி..." வினாடிமுள் மெதுவாக எரிந்து புகைந்தது.

"என்ன உளறுகிறாய்...?" நிமிடமுள் வினாடி முள்ளின் ஆதங்கத்தைப் புரிந்துகொள்ளாமல் கோபமாகக் குரல் கொடுத்தது.

"இல்லை.... நேரம் என்னவென்று யாராவது கேட்டால்.. இத்தனை மணி இத்தனை நிமிடம் என்றுதானே எல்லோரும் சொல்வார்கள்.. என்னை மறந்தே விடுகிறார்கள்.... இது எவ்வளவு அநியாயம்...?"

"நீதான் பார்த்த மறுகணம் இடம்மாறி விடுவாயே..."

"அதுதான்... எனது உழைப்பு..."

டிக்... டிக்.. என்ற ஓசையின் நடுவே இந்த உரையாடலைக் கேட்ட மணிமுள்ளுக்குச் சிரிப்புத்தான் வந்தது. "நீங்கள் ஏன் சிரிக்கிறீர்கள்... எனது கவலை ஒன்றும் அநியாயமானது அல்லவே.. நீங்கள் நாள் ஒன்றுக்கு இரண்டு தடவை மட்டும் சுற்றுகிறீர்கள்.... நிமிடமுள்ளோ 24 தடவை சுற்றுகிறது. ஆனால் நானோ 1440 தடவை சுற்றுகிறேன். இது உங்களுக்குத் தெரியாதா? எனது அதிவேக உழைப்பும் அதன் பெறுமதியும் புரியாதா?" வினாடி முள் சற்றுக்கோபமாகப் பேசியது.

"நீதான் புரியாமல் பேசுகிறாய். நாங்களும் உன் போன்ற வேகத்தில் ஓடினால் நேரம் என்ற சொல்லுக்கே அர்த்தம் இல்லாமல் போய்விடும்". மணிக்கம்பி வினாடிக்கம்பிக்கு உண்மையைப் புரியவைக்க முயற்சித்தது. சற்றுநேரம் அமைதி அதிகாரத்தைக் கையிலெடுத்திருந்தது. சில நொடிகள்தான் ஓடியிருக்கும் மீண்டும் இயங்கியல் யுத்தம் ஆரம்பித்தது. "நான் ஒன்றும் புரியாமல் பேசவில்லை. எனது கடின உழைப்பு கண்ணுக்குப் புலப்படுகிறது. உங்கள் சோம்பேறித்தனமான அசைவு அப்படியல்லவே . இதனைச் சுட்டிக்காட்டுவது குற்றமா?" வினாடிமுள் தொடர்ந்து கோபக்கனலை வார்த்தைகளாக வாரிச்சொரிந்தது.

"நீங்கள் மூவருமே எதனையும் புரிந்துகொள்ளாமல் உங்களுக்குள் மோதிக்கொள்கிறீர்கள்" இப்பொழுது அந்தப் போர் மேலும் விரிவடைந்தது. ஆம் அந்த மணிக்கூட்டின் இயந்திரம் பேசியது. "நீங்கள் உங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கடமைகளைத்தான் செய்கிறீர்கள். நீங்கள் இயக்குபவர்கள் அல்ல. இயங்குபவர்கள். இதனை உணருங்கள். நான் உங்களுடன் முரண்படமுற்படவில்லை. உண்மையை உரைக்கிறேன். உங்கள் ஒவ்வொருவரதும் வேகம் உங்கள் நிலையிலேயே தங்கியுள்ளது. இது படைப்பின் நோக்கத்திற்கு அமைவானது. இதனை முதலில் வினாடிமுள் புரிந்துகொள்ளவேண்டும்".

இப்பொழுது அந்த மூன்று முட்களும் இயந்திரத்தின் சொற்போர் அல்லாத விளக்கவுரையை உள்வாங்கியபடியே தங்கள் கடமையைத் தொடர்ந்துகொண்டிருந்தன.

"உங்களையும் ஏன் என்னையும்கூட இயக்குவதற்கு ஒரு மூலசக்தி இயங்கிக் கொண்டிருக்கிறது. அதனை மறக்கக்கூடாது நான் சொல்வது உங்களுக்கு விளங்கும் என நினைக்கிறேன்" வினாடிக்கம்பியின் அறியாமைத்திரை மெல்ல விலக ஆரம்பித்தது. இயந்திரம் தொடர்ந்து பேசியது.

"இப்படித்தான் இவ்வுலகில் வாழும் மனிதர்களும் பிரபஞ்ச உண்மைகளை விளங்கிக்கொள்ளாது போட்டி பொறாமைகளில் தமக்குள் மோதிக்கொள்கிறார்கள். உயர்வு தாழ்வுப் பிரிவினை பேதங்களில் மனித மாண்பை மறந்து அறியாமையின் கைதிகளாகி அல்லற்படுகிறார்கள். தாம் இயங்குபவர்கள் என்பதனையும் எதையும் இயக்கும் மூலசூத்திரதாரியை உணராதவர்களாகவும் அழிவை நோக்கி வெற்றிநடை போடுகிறார்கள். நீங்கள் மூவரும் இனியாவது உண்மையை உய்த்துணர்ந்து செயற்படுங்கள்."

" எங்களை மன்னித்துவிடுங்கள்" என்று வினாடிமுள்ளின் தலைமையில் அவை மன்னிப்புக் கோரின. நீங்கள் உண்மையை உணர்ந்து தவறுகளுக்காக வருந்தி இனிமேலாவது மனம் திருந்தி ஒற்றுமையாக உங்கள் கடமைகளைச் செய்தால் அதுபோதும்" அத்துடன் அந்த அணுசக்தியில் இயங்கும் மணிக்கூட்டின் இயந்திரம் தனது பிரசங்கத்தை நிறைவுசெய்து அமைதியடைந்தது.

# நவீன நாடகங்கள்...

(03ஆம் பக்கம் தொடர்ச்சி)

வளர்க்க உதவும் பாத்திரம் என்பதால் உரைஞருடன் பொருந்தி இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த நாடகத்தின் வேட உடைகள் நவீன வசதிகளைக் கொண்டு ஆக்கப்பட்டிருந்தன. அத்தோடு இதிகாச கதைகளைக்கொண்ட தொலைக்காட்சி மற்றும் சினிமா போன்றவற்றில் வருவதுபோல் இருந்தது அழகாக இருப்பினும் பாரம்பரியக் கூத்தில் ஆரம்ப காலங்களில் கையாளப்பட்ட வேட உடுப்புகள், கிரீடங்கள், புஜப்பட்டைகள் பற்றி ஆராய்ச்சி செய்து அதில் கண்டறியப்பட்டவைகளை காலத்திற்கேற்ப நவீனப்படுத்திக் கையாண்டால் இன்னமும் சிறப்பாகவும் பொருத்தமாகவும் இருக்கும்.

கூத்துகளை அதன் பழமைகளோடு எதுவும் கலக்காது தூய்மையாகச் செய்துகாட்ட நினைப்பவர்களையும் வரவேற்போம். அதே நேரம் கூத்தைப் பார்வையாளர் பார்த்து இரசித்து அதன் எதிர்கால இருப்பை மாற்றங்களோடு செய்பவர்களையும் வரவேற்போம். சினிமாப் பாடல்களை ஆடல்களை மீளப்பயன்படுத்தும் பல நிகழ்ச்சிகள் சமூகத்திலும் சமூக ஊடங்களிலும் காணப்படுகின்றன. குறிப்பாக பண்பாட்டுச் சடங்கு நிகழ்ச்சிகளான திருமணச்சடங்கில் திருமணத்திற்கு முன்னரான மணமக்களின் நடிப்புக்காட்சிகள், திருமணத்தன்றான ஆடல்கள், திருமணத்துக்குப் பின்னரான சினிமாப்பாடலுக்கான படப்பிடிப்புகள் மற்றும் சாமத்தியச் சடங்கில் பயன்படும் சினிமாப் பாடல்கள், நடனங்கள் போல வேறு கொண்டாட்டங்களிலும் சினிமாப் பாடல்கள் பயன்படுத்தப்படுவதை அவதானிக்கலாம். இதேபோன்றே ஊர்ப்புற நாடக நிகழ்ச்சியிலும் சினிமாப் பாடல் ஆடல் காலம்காலமாகத் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டுவருகிறது. அதற்கான மக்களது பார்வையாளரது பங்களிப்பும் ஈடுபாடும் மிக அதிகம். குறிப்பாக அன்றையதின நிகழ்ச்சியில் பார்வையாளர் விசிலடித்து நிகழ்ச்சிகளைப் பார்த்தனர். இளைஞர்களின் ஈடுபாடு சினிமாப் பாணிகள் சார்ந்து அதிகம் இருந்தது. அதேபோல சில நாடகங்களும் சினிமாப் பாணியிலே நடைபெற்றன. சரி பிழை என்பதற்கப்பால் இதுதான் யதார்த்தம். பண்பாட்டை யாரும் வலிந்து உருவாக்குவதில்லை அதுதானே உருண்டோடி உருவாகிறது. எனினும் இவற்றையெல்லாம் தாண்டி "கும்பகர்ணன் கூத்து" வேறு ஒரு நிலைக்கு, தரத்துக்கு மேலெழுந்து நின்றது. இந்த ஆற்றுகை எல்லாவற்றையும் தாண்டி மூலவேரின் விருட்சமாக மேலெழுந்து பார்வையாளரைப் பற்றிப் பிடித்தது. நாமும் நமக்கோர் நலியாக்கலை உடையோம் என்பதை நிரூபித்தது. பார்வையாளர் ஆர்வத்தோடு பார்த்து இரசித்தனர். அத்தோடு இளைஞர்களின் இரசிப்பும் மேலோங்கி இருந்தது.

ஒரு பாயையும் சுருட்டி கமக்கட்டில் வைத்தபடி இந்தக் கூத்தைப் பார்த்துவிட்டு வீட்டுக்குப் போகும் ஒரு பார்வையாளர் எனக்குச் சொன்னார் "மணியாய் இருக்கு... படம் பார்த்த மாதிரி இருக்கு" என்று.

இந்த ஜனரஞ்சக நிகழ்ச்சியில் முன்னேற்றப்படவேண்டிய விடயங்கள் என்று பார்த்தால் சினிமாப் பாடல்களைப் பாடுவது சரியா? அங்கு நடனம் ஆடுவது சரியா? சமூகப் பிரச்சினைகள் மற்றும் தமிழ்த்தேசியப் பிரச்சினைகள் பேசப்படாது விடுபடுதல் சரியா? கூத்தை நவீனப்படுத்துவது சரியா? ஒத்திகைகள் முழுமையாக இல்லாமல் அரைகுறையாக மேடையேற்றுவது சரியா? என பல கேள்விகளைக் கேட்கலாம். நமது வித்துவத் திறமைகளை ஒரு புறம் வைத்திருப்போம். ஊர் அரங்கு தன்னியல்பில் வளரட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்கைமுறைக் கருக்கட்டலும் அறிந்திருக்க வேண்டியவையும்

பகுதி 3






மருத்துவ நிபுணர் சி.ரகுராமன்
பெண் நோயியல் மற்றும் மகப்பேற்று நிபுணர்
யாழ்.போதனா மருத்துவமனை
சிரேஷ்ட விரிவுரையாளர்
யாழ்.பல்கலைக்கழகம்

## செயற்கைமுறைக் கருக்கட்டலுக்கான நெறிமுறைகளும் கட்டுப்பாடுகளும்

செயற்கைமுறைக் கருக்கட்டல் என்பது குழந்தையின்மை சிகிச்சை முறைகளில் ஒரு மேம்பட்ட சிகிச்சை முறையாகும். இதனை நடைமுறைப்படுத்த பல ஒழுங்குமுறை மற்றும் நெறிமுறைகள் பின்பற்றப்படவேண்டியுள்ளன. தம்பதியினரின் உடல் மற்றும் உளநிலை, குறிப்பிட்ட செயன்முறைகளை செயற்படுத்துவதற்கான இடவசதிகள், கருமுட்டைகள், விந்துக்கள் மற்றும் கருக்களைச் சேமிப்பதற்கான வளங்கள், அவற்றை நீண்டகாலம் பாதுகாக்கும்போது அவற்றின் தரம், அந்தரங்கத் தன்மையைப் பேணுதல் என்பன இந்த நெறிமுறைகளில் அடங்கும். எனவே IVF சிகிச்சையின் போது இத்தகைய நெறிமுறைகள் இன்றியமையாதவையாகின்றன. ஏனெனில் அவை மனித கண்ணியத்தையும் சமூக நலனையும் பாதுகாப்பதற்கான வழிகாட்டியாகச் செயற்படுகின்றன. இதனைச் செயற்கைமுறைக்கருக்கட்டல் மூலம் குழந்தை பெற்றுக்கொள்ள முயற்சிக்கும் தம்பதியினர் அனைவரும் அறிந்திருப்பது அவசியமாகும்.

உலகளாவிய ரீதியில் செயற்கை முறைக்கருக்கட்டல் சம்பந்தமான சிகிச்சைகள் மிகுந்த நெறிமுறைகளுடனும் தகுந்த வசதிகளுடனும் செயற்படுத்தப்படுகின்றன. குறிப்பாக வளர்ச்சியடைந்த நாடுகளில் அந்நாடுகளிற்குரிய கருக்கட்டல் சிகிச்சை தொடர்பான கண்காணிப்பு அமைப்புகள் உள்ளன. (ESHRE ஐரோப்பிய நாடுகளிற்குரியது மற்றும் ASRM அமெரிக்க நாடுகளிற்குரியது) இந்த அமைப்புகளின் வழிகாட்டுதல்களின்படி துல்லியமான ஒழுங்குமுறைகளைப் பின்பற்றி தம்பதியினரின் உரிமைகள், கருக்களின் தரம், குழந்தையின் நலன் மற்றும் முட்டை/விந்து என்பன தானம் தருபவர்களின் பாதுகாப்பு ஆகியன உறுதி செய்யப்படுகின்றன. அவை தனிநபரின் மனநிலை மற்றும் மதச்சார்பில்லாத அணுகுமுறைகளை கவனத்தில் எடுத்துக்கொண்டு பராமரிக்கப்படுகின்றன.

இலங்கையில் கடந்த இரண்டு தசாப்தமாக செயற்கைமுறைக்கருக்கட்டல் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தேசிய ரீதியில் செயற்கைமுறைக்கருக்கட்டல் தொடர்பான ஒருங்கிணைந்த நெறிமுறைகள் மிகக்குறைவாகவே காணப்படுகின்றன. இலங்கையில் உள்ள அனைத்து IVF சிகிச்சை வழங்கும் மையங்களும் ஒரேமாதிரியான நெறிமுறைகளைப் பின்பற்றாமல் இருக்கக்கூடிய நிலை உள்ளது. இது செயற்கைமுறைக் கருக்கட்டலைஎதிர்பார்த்துஉள்ள தம்பதியினரின் உரிமையைப் பாதிக்கின்றது. மேலும் முட்டை/விந்து என்பவற்றின் தானம், வாடகைத்தாய் தொடர்பான சட்டங்கள் தெளிவாக இல்லை என்பதும் ஒரு முக்கியமான சவாலாக உள்ளது. அதனால் இலங்கையில் செயற்கைமுறைக் கருக்கட்டல் நடைமுறைகளின்போது ஒரு ஒழுங்கமைவுக்கும் நெறிமுறை வழிகாட்டுதலுக்குமான தேவை மிக அதிகம் உள்ளது.




இதற்கமைவாக இலங்கை சுகாதார அமைச்சினால் கையேடு ஒன்று "CODE OF PRACTICE AND GUIDELINES FOR MEDICALLY ASSISSTED REPRODUCTIVE TECHNIQUES" வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஆவணம் ART சிகிச்சையின் தரத்தை மேம்படுத்துவதுடன் சேவையளிப்பவரையும் மற்றும் நோயாளியையும் பாதுகாபபதற்கான அடிப்படையாகவும் திகழ்கிறது. இந்தக்கட்டுரை IVF சிகிச்சைக்குத் தயாராகும் தம்பதியினர் என்னென்ன தகவல்களை அறிந்திருக்கவேண்டும் என்பதைத் தெளிவாகவும் எவ்வித ஒளிவு மறைவு இன்றியும் எடுத்துரைக்கின்றது.

**குறிப்பிட்ட ஆவணத்திலுள்ள முக்கியமான சில விடயங்கள் வருமாறு**

- அனைத்துச் செயற்கைமுறைக் கருக்கட்டல் சிகிச்சையையும் சேவைகளையும் கண்காணிக்கும் அமைப்பு (FSGB - Fertility Services Govenrign Body) நாட்டில் உள்ள அனைத்துச் செயற்கைமுறைக் கருக்கட்டல் மையங்களையும் ஒழுங்குபடுத்தும் முக்கியமான அமைப்பாகும்.
- இந்த அமைப்பில் நாட்டிலுள்ள அனைத்துச் செயற்கைமுறைக் கருக்கட்டல் சிகிச்சை வழங்கும் மையங்களும் பதிவுசெய்யப்படவேண்டும்.
- செயற்கைமுறைக் கருக்கட்டல் மையங்கள் செயற்படுவதற்கான அடிப்படை உபகரணங்கள், தகுதிமிக்க ஊழியர்கள் மற்றும் பரிசோதனை வசதிகள் போன்ற தேவையான வசதிகள் கட்டாயமாக இருக்க வேண்டும்.
- குறிப்பிட்ட ஒவ்வொரு மையத்தினையும் மேற்பார்வையிடுவதற்கு ஒரு நிர்வாகத் தலைவர் இருக்க வேண்டும்.
- ஒவ்வொரு மையமும் தமக்கெனத் தரக்கோட்பாட்டு ஆவணத்தை (SOP - Standard Operating Procedures) உருவாக்கி அதனைப் பின்பற்றவேண்டும்.

**செயற்கைமுறைக் கருக்கட்டல் சிகிச்சையில் பாதுகாப்பான தாய் -சேய் நலனை அடைவதற்குக் கவனிக்கப்படவேண்டியவை.**

- பெண்ணோயியல் மற்றும் மகப்பேற்று நிபுணர்கள் (VOG/ Consultant Obstetircian & Gynaecologist) மற்றும் பெண்ணோயியல் மற்றும் மகப்பேற்று நிபுணர்களில் கருவளச் சிகிச்சை தொடர்பில் மேலதிக நிபுணத்துவம் கொண்ட நிபுணர்கள் (Consultant in subfertility) ஆகியோர் மட்டுமே இச்சிகிச்சை வழங்க அங்கீகரிக்கப்பட்டவர்களாவர்.
- மருத்துவமனை மற்றும் ஆய்வுகூடமானது சரியான கால இடைவெளியில் தரப்பரிசோதனைக்கு (Quality Control) உட்படுத்தப்பட்டு அதன் தரம் பேணப்பட வேண்டும்.
- மருத்துவ சேவைகளுக்கு மேலதிகமாக உளவள ஆலோசனை மற்றும் தம்பதியினருக்கான ஆதரவும் இணைந்து வழங்கப்படவேண்டும்.
- விந்துத்தானம் மற்றும் முட்டைத்தானம் மூலம் சிகிச்சை செய்பவர்களுக்கு அதுதொடர்பான சரியான ஆலோசனை வழங்கப்படுவதுடன் தம்பதியினரின் சம்மதத்துடன் மேற்கொள்ளப்படவேண்டும்.
- 50 வயதிற்குட்பட்ட பெண்களிற்கே செயற்கைமுறைக் கருக்கட்டல் சிகிச்சை மேற்கொள்ளப்படவேண்டும்.
- ஒரு தடவையில் ஒன்று (1) அல்லது இரண்டு(2) கருக்கள் மாத்திரமே கருமாற்றம் செய்யப்படவேண்டும்.

- குறித்த சிகிச்சை நிலையத்தின் மேற்பார்வையாளர்கள் கீழ்வருபவை தொடர்பில் முக்கியமான கவனம் எடுக்கவேண்டும்.
- சிகிச்சை வழங்கும் பெண்ணோயியல் மற்றும் மகப்பேற்று நிபுணர்கள் (VOG/ Consultant Obstetircian & Gynaecologist) மற்றும் பெண்ணோயியல் மற்றும் மகப்பேற்று நிபுணர்களில் கருவளச் சிகிச்சை தொடர்பில் மேலதிக நிபுணத்துவம் கொண்ட நிபுணர்கள் (Consultant in subfertility) ஆகியோர் மட்டுமே அங்கீகரிக்கப்பட்டவர்களாவர்.
- ஒவ்வொரு சேவையும் சேவை வழங்குநர்களும் தரநிலைகளுக்கு ஏற்ப செயற்படுகிறார்களா என்பதைக் கண்காணித்து நம்பகத்தன்மையை உறுதிப்படுத்த வேண்டும்.
- தவறான நடத்தை (misconduct) அல்லது தவறான சிகிச்சைமுறைகள் (Malpractice)தொடர்பான புகார்கள் எழும்பும்போது அவை தீவிரமாக விசாரணை செய்யப்படவேண்டும்.
- நெறிமுறையியல் ரீதியாக சர்ச்சைக்குரிய (Ethically controversial) விடயங்கள் ஏற்பட்டால், அவை நேரடியாக செயற்கைமுறைக் கருக்கட்டல் சிகிச்சையையும் சேவைகளையும் கண்காணிக்கும் அமைப்பிற்குத் (FSGB) தெரிவிக்கப்படவேண்டும். இவ்வமைப்புத்தான் இவை பற்றிய இறுதித் தீர்வை வழங்கும் அதிகாரத்தைக் கொண்டது.

**ART மையத்தில் பணியாற்றும் ஊழியர்கள் பற்றிய விபரங்கள்**

1. செயற்கைமுறைக்கருக்கட்டலுக்குப் பொறுப்பான மருத்துவ நிபுணர் பெண்ணோயியல் மற்றும் மகப்பேற்று நிபுணர்கள் (VOG/ Consultant Obstetircian & Gynaecologist) மற்றும் பெண்ணோயியல் மற்றும் மகப்பேற்று நிபுணர்களில் கருவளச் சிகிச்சை தொடர்பில் மேலதிக நிபுணத்துவம் கொண்ட நிபுணர்களாக (Consultant in subfertility) இருக்க வேண்டும்.
2. இவர்களே நோயாளியின் நோய்நிலை தொடர்பான விளக்கங்கள், உடற்பரிசோதனை, ஆலோசனை வழங்குதல், முட்டை வளர்ச்சித்தூண்டுதல் மற்றும் கண்காணிப்பு மற்றும் பிற சிகிச்சைத் திட்டங்களை வழங்குவதற்குத் தகுதியுடையவராவார். இவர்கள் மட்டுமே உங்களுக்குக் கருவளச் சிகிச்சை மற்றும் கர்ப்பகாலத்தில் தகுந்த சரியான சேவைகளை வழங்கமுடியும்.
3. Embryologist முளையவியல் பட்டப்பின்படிப்பிற்குரிய பட்டம் பெற்றிருக்க வேண்டும். இவர்கள் ஆய்வுகூடத்தில் செயற்கைமுறைக்கருக்கட்டல் தொடர்பான செயன்முறைகளைச் செய்வார்கள்.
4. Andrologist இவர்கள் ஆய்வுகூடத்தில் விந்து, விந்துப்பாயம் சம்பந்தமான பரிசோதனைகளை மேற்கொள்வார்கள்.
5. Medical Ofifcer இலங்கை மருத்துவ நிதியத்தில் பதிவுசெய்யப்பட்ட மருத்துவ நிபுணராக இருக்கவேண்டும். இவர்கள் மருத்துவ நிபுணருக்கு உதவியாளராக இருப்பார்கள்.
6. ஆலோசகர்கள் (Counsellors) இவர்கள் உளநலம் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு ஆதரவு வழங்குவார்கள்.
7. தாதிய உத்தியோகத்தர் இலங்கை தாதிய நிதியம் அல்லது தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தும் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவேண்டும்.

ஒரு முழுமையான செயற்கைமுறைக்கருக்கட்டல் மையம் தரமான சிகிச்சை மற்றும் சேவைகளை வழங்க சரியான கட்ட வசதிகள் மிக அவசியமாகும். முதலாவதாக, நோயாளிகளுக்கான தனிப்பட்ட ஆலோசனைகள் வழங்க ஆலோசனை அறைகள் (Consultation Rooms) இருக்கவேண்டும்.

இங்கு அவர்களுடைய நோய்கள் பற்றிய விபரப்பதிவுகள், பரிசோதனைகள் என்பனவும் இடம்பெறும். அத்துடன் ஸ்கான் வசதியும் காணப்படும்.

அறுவைச்சிகிச்சை நடைபெறும் அறையானது (Operation Theatre) முட்டை சேகரித்தல் (Ovum Retrieval)> தாயின் கருப்பைக்குள் கருவை மாற்றீடு செய்தல் போன்ற செயன்முறைகள் என்பன மட்டுமே நடைபெறும். இதைத்தவிர வேறு அறுவைச்சிகிச்சை செயல்முறைகள் எதுவும் இங்கு நடைபெறாது. அத்துடன் மேற்படி செயல்முறைகளுக்குப் பின்னரான கண்காணிப்பை வழங்குவதற்கான இடம் (Recovery Area) அவசியமாக இருக்கவேண்டும். முளையவியல் ஆய்வகம் (Embryology Lab) என்பது கருமுட்டை மற்றும் விந்தணுவின் கருக்கட்டல் (Fertilization) மற்றும் கருவை வளர்த்தல் என்பன நிகழும் இடமாகும்.

(06 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்ந்தினம்

இராகவன்


பாகம் 3

48

அண்டைக்குக் கணேசு மாமா வீட்டில நாகராசனைப் பற்றி மன்னவன் சொன்னதைக் கேட்டு அங்கை கூடியிருந்த பெண்டுகளெல்லாம் விழுந்து விழுந்து சிரிச்சினம். அதைப்போல ஒரு கரெக்ரர் செர்டிபிக்கற்றை வேறை யாராலயும் நாகராசனுக்குக் குடுக்கேலாது. எங்கட அம்மம்மாவின்ர தங்கைக்காரி சிவகாமி. அவா பெரிய தோட்டத்திலயிருந்தவா. அவவை எல்லாரும் சிவகாமியக்காத்தை எண்டு சொல்லுவினம். சின்னப்பொடியள் அவவை ஆச்சி எண்டு கூப்பிடுவினம். நான் அவவை சின்னம்மம்மா எண்டு கூப்பிடுவன். இவவைப் பற்றியும் ஊர்ப்புதினத்தில ஏற்கனவே சொல்லியிருக்கிறன். மன்னவன் இவவின்ர வீட்டையும் பின்னேரங்கள்ள தன்ர லேடீஸ் சைக்கிளில விசிற்றடிப்பார். அவர் வாற நேரம் சின்னம்மம்மா தேத்தண்ணி போடுவா. கொறிக்கிறதுக்கு ஏதும் கள்ளத்தீனும் வைச்சிருப்பா. அவவில மற்றாக்களிட்டயில்லாத ஒரு நல்ல பழக்கமிருக்கு. எந்தநேரமும் வீட்டுக்கு ஆக்கள் வந்தால், "தேத்தண்ணி போடுறன் குடியன்!" எண்டெல்லாம் கேக்கமாட்டா. போட்டுக்கொணந்து கையில தந்து "இந்தா குடிச்சுக் குடிச்சுக் கதையன்" எண்டுவா. அப்பிடித்தான் மன்னவனும் அங்கை பின்னேரங்களில விசிற்றடிக்கேக்குள்ள அவருக்கும் ரீயும் கள்ளத்தீனும் கிடைக்கும். அப்பிடியொருக்கால் அவர் சின்னம்மம்மா வீட்டை பின்னேர விசிற்றடிக்கேக்குள்ளை நானும் அங்கை நிண்டன். அப்ப அவர், "அக்கை! வாசிக்கிறதுக்கும் ஏதும் புத்தகம் கிடந்தால் தாவன்!" எண்டு சின்னம்மம்மாவிட்டக் கேட்டார். நான் அதைக் கேட்டாப்போல, "ஏன் உங்களுக்கு வாசிக்கிறதுக்குப் புத்தகம்? நீங்களே புத்தகங்களை எழுதலாமே?" எண்டு பெரிய அறிவாளியைப்போல அவரிட்டக் கேட்டன். அதுக்கு அவர், "உனக்கு யப்பான்காரனின்ர மூளை! நான் புத்தகங்களை எழுதினால் அதைப் பிறகேன் வாசிப்பான்?" எண்டு கேட்டார். என்னால அதுக்குப் பதில் சொல்லேலாமல் போச்சு.

1990களின் பிற்பகுதியில் கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் தலைவராக த. சிதம்பரப்பிள்ளை இருந்த காலகட்டத்தில் கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றம் என்றொரு பிரிவை ஆரம்பித்து அதன்மூலமாகப் புத்தக வெளியீடு, அறிமுகம், புத்தகக் கொள்வனவு விற்பனை, புத்தகக் கண்காட்சி, நூலகம் போன்ற பல்வேறு தரமமான செயற்பாடுகளை அவர் மேற்கொண்டிருந்தார். அந்தப் பெருமன்றத்தின் முதலாவது வெளியீடாக 1986 காலப்பகுதியில் பிரதேச எழுத்தாளர்களின் சிறுகதைகளை உள்ளடக்கி "உயிர்ப்பு" என்ற தொகுதி வெளிவந்தது. பிரதியொன்றின் விலை இரண்டு ரூபா. கூட்டுறவுச்சங்கத்தின் கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறும் ஒவ்வொருவரும் கட்டாயமாக அந்நூலில் ஒரு பிரதியை வாங்கவேண்டும் எனச் சங்கத் தலைவரான சிதம்பரப்பிள்ளை நிபந்தனை விதித்திருந்தார்.

(தொடரும்)



# செயற்கைமுறைக் கருக்கட்டலும்...

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கருக்கட்டல் என்பது பெண்ணின் உடலினுள் கருப்பையில் நடக்கும்பொழுது எவ்வளவு பாதுகாப்பாகக் குறிப்பிட்ட கட்டுப்பட்ட சூழ்நிலைகளின்கீழ் நடைபெறுகிறதோ அதே சூழலை நாம் முளையவியல் ஆய்வகத்திற்கும் வழங்க வேண்டும். இதனால் இங்கு சூழல் கட்டுப்பாடுகள் மிகவும் முக்கியமாகக் கடைப்பிடிக்கப்படவேண்டும்.


அதாவது குறிப்பிட்ட ஆய்வுகூடத்தின் வெப்பநிலை, ஒட்சிசன் அளவுவிகிதம், ஈரப்பதன், நீர்அளவு என்பன குறித்த அளவுகளில் பேணப்படுவது இன்றியமையாதது ஆகும். அதேபோல் விந்து தொடர்பான பரிசோதனைகளை நிகழ்த்துவதற்கு அதற்கான ஆய்வகம் (Andrology Lab) இருக்கவேண்டும். விந்தணு சேகரிப்புப் பகுதி (Sperm Sample Collection Area) மற்றைய பகுதிகளிலிருந்து தனியானதாகவும், அந்தரங்கத்தன்மையுள்ளதாகவும், அமைதியானதாகவும் இருக்க வேண்டும். இது மனஅழுத்தமில்லா சூழலை உருவாக்க உதவும். மேலும் தம்பதிகளின் விபரங்கள், சிகிச்சை நடவடிக்கைகள் மற்றும் ஆய்வுகள் தொடர்பான தகவல்களைப் பாதுகாப்பாகப் பராமரிக்க சரியான பதிவேட்டுப் பராமரிப்புமுறை (Record keepign System) இருக்க வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு உட்கட்டமைப்பு வசதியும் தரமும் அது பேணப்படும் விதமும் ஒரு செயற்கை முறைக்கருக்கட்டல் மையத்தின் தரத்திற்கும் நம்பகத்தன்மைக்கும் அடித்தளமாகும்.

மேலும் செயற்கைமுறைக்கருக்கட்டல் மையத்தின் ஆய்வகம் குறிப்பிட்ட ஒழுங்குமுறைகள், பரிந்துரைக்கப்பட்ட தரக்கட்டுப்பாடுகள் (Standa rdisation) என்பவற்றைக் கட்டாயமாகப் பின்பற்றவேண்டும். செயற்கைமுறைக்கருக்கட்டல் சிகிச்சையின் சிறப்பான முடிவுகளுக்கு, ஆய்வகத்தின் தரமான செயல்முறைகள் முக்கியமான பங்கு வகிக்கின்றன. எனவே விந்து/ கருமுட்டைகள் மற்றும் கருக்கள் போன்றவற்றைக் கையாளும்போது கட்டுப்பாடுகள் மற்றும் துல்லியமான பாதுகாப்பான நடைமுறைகள் பின்பற்றப்படவேண்டும். இதன் முக்கியமான நோக்கம் உயிரணுக்களின் தரத்தையும் உயிர்வாழ்தன்மையையும் உயர்நிலையில் பேணுவதன் மூலம் குழந்தையை எதிர்பார்த்துவரும் தம்பதியினருக்கு முடிந்தளவில் சாதகமான விளைவைப் பெற்றுக் கொடுப்பதே.

மேலும் சிகிச்சைக்காகப் பயன்படுத்தப்படும் மாதிரிகள் ஆய்வுகூடத்தினுள் கொண்டுவருவதற்கு முன்னரே பரிசோதனை செய்யப்படவேண்டும். முக்கியமாக HIV, Hepatitis B போன்ற கிருமித்தொற்றுப் பரிசோதனைகள் பூரணப்படுத்தப்பட வேண்டும். நோய்த்தொற்றுப்பரவல் மற்றும் பிற சிக்கல்களைத் தவிர்க்க இது அவசியமாகும்.


IVF செயன்முறைக்கு பெண்ணிடமிருந்து கருமுட்டை சேகரிக்கும் Operation Theatre ஆனது கருக்கட்டலை நிகழ்த்தும் முளையவியல் ஆய்வுகூடத்துக்கு மிக அருகில் அமைக்கப்படவேண்டும். இது குறிப்பிட்ட கருமுட்டையின் தரத்தை உறுதிப்படுத்த உதவும். உயிரணுக்களை உறைநிலையில் சேமிக்கும் நுட்பமானது (Cryopreservation) மிகவும் பாதுகாப்பானதாகவும், துல்லியமான கட்டுப்பாடுகள் கொண்டதாகவும் மற்றும் அந்தரங்கத்தன்மையைப் பேணுவதாகவும் இருக்க வேண்டும்.

தரக்கட்டுப்பாட்டு ஆவணம் (Quality Control Document) என்பது பயன்பாட்டிலுள்ள அனைத்துக் கருவிகளினதும் பராமரிப்பு மற்றும் அளவீட்டுச் சீரமைப்பை உறுதிப்படுத்தும் கையேடு ஆகும். இது எல்லா செயற்கைமுறைக்கருக்கட்டல் மையத்தின் ஆய்வகங்களிலும் காணப்படவேண்டும். ஆய்வகம் மற்றும் ஆய்வகத்திலுள்ள உபகரணங்கள் யாவும் இரு வேறுபட்ட மதிப்பீடுகளுக்கு உட்படுத்தப்படவேண்டும். சரியான கால இடைவெளியில் உள்ளகத் தரக்கட்டுப்பாடு (Internal Quality Control) மற்றும் வெளியகத் தரக்கட்டுப்பாடு (External Quality Control) என்பன நடைபெற வேண்டும். அத்துடன் இவை பதிவுசெய்யப்படவும் வேண்டும். மேலும் அவசர நிலையில் நோயாளிக்குத் தேவையான அவசர சிகிச்சைகளை வழங்குவதற்கான வசதிகள், இயந்திரக்கோளாறுகள், மின்துண்டிப்பு, சூழ்நிலை மாற்றங்கள் போன்ற அவசரகால நிலைகளில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் (Emergnecy procedures) அதற்கான மாற்றீடுகள் என்பன நடைமுறைப்படுத்தப்படவேண்டும். இவை அனைத்தும் குறிப்பிட்ட மையத்தின் தரத்தை அளவிடுவதற்கு உதவும். மக்களிடையே இது பற்றிய புரிந்துணர்வு இருக்குமிடத்து குறிப்பிட்ட சிகிச்சைக்காக எவ்வித ஐயமும் இன்றி சிகிச்சை மையத்தினைத் தேர்ந்தெடுப்பது மிகவும் இலகுவாக அமையும். எனவே குறித்த சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள விரும்பும் தம்பதியினர் முக்கியமாக எந்த மருத்துவ நிபுணரிடம் சேவை பெறுவது குறித்த செயற்கை முறைக்கருக்கட்டல் மையத்திலுள்ள அடிப்படை வசதிகள் அவை கண்காணிக்கப்படும் விதம், ஒளிவுமறைவின்றி சிகிச்சைகள் வழங்கப்படும் தன்மை, மற்றும் தரவுகள் அந்தரங்கத்தன்மையில் பேணப்படும் முறைகள் என்பன பற்றி முழுமையாகக் கேட்டுத்தெரிந்து கொண்டு அவை பற்றிய சந்தேகங்களை நிவர்த்தி செய்துகொண்டு குறித்த சேவையைப் பெறுவது புத்திசாதூரியமான தாகும். செயற்கைமுறைக்கருக்கட்டற் சிகிச்சை மற்றும் அதன் நெறிமுறைகள் தொடர்பான அறிவினைத் தேவையான மக்களிற்குக் கொண்டு செல்வதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லிகா



'மாதுளானின் பிண்டத்தின்மீது
பிதிர்க்கடன் செய் ..'
கீரிமலைத் தீர்த்தப்பூசகர்
மந்திரங்களை ஒப்புவிக்கிறார்!
மௌனமாக நகரும்
கொடுமையான நினைவுகளில்
தீப்பந்தம் ஏற்றப்படுகிறது.....
மாதுளான் என்பது மாமன்
தாயின் உடன்பிறப்பு
தாய்மாமன்.....

உலத்துக்குப் பயனில்லாமல் பிறந்து
அர்த்தமில்லாது வாழ்ந்து...
பிடிப்பில்லாத உறவுகளின்
பிரிவுகளைச் சந்தித்து...
இந்தக் கொடிய போரோடு வாழ்ந்து
இறந்துபோன ஓர் ஆத்மா!

சாதாரண மனிதர்களை யாரும்
மதிப்பதுமில்லை
மரியாதை செய்வதுமில்லை..
ஆனால் அவர்களின் வாழ்வு
எமக்குப் பெரிய பாடங்களை
வித்தியாசமாகக் கற்பித்திருக்கின்றன
என்பதை நாம்
உணர்ந்துகொள்வதில்லை!

விதியின் கால ஓட்டத்தில்
நான் கற்றுக்கொண்ட பாடங்களில்
என் தாய் மாமனுடைய
வாழ்வும் சாவும்
நிறையக் கற்றுத்தந்தது
நிறைந்த மாற்றங்களயும்
மௌனமாக விட்டுச்சென்றது.
போர் அவரது
ஒரு கண்ணைப் பறித்து
காலை முடமாக்கியது
சொத்திக் கால்களைக்கொண்டு
முடிந்ததூரம் வரை நடந்துசென்று
விரும்பாத மனிதர்களிடம்கூட
அமைதியாக நின்று யாசகம் செய்து
வாழ்நாளை வெறுப்போடு
கழித்து முடித்தவர்.

போர் எம்மை நகர்த்திக்கொண்டு
போன இடமெல்லாம் அவரது
ஒழுங்கில்லா ஆர்ப்பாட்டங்களால்
அவமானப்பட்டு
எமது வாழ்வு கூனிக்குறுகியது..
மதுபோதையின் மயக்க நிலையும்
புகை இழுக்கும் அடிமைத்தனமும்
சாதாரண மனிதனாக
அவரை வாழவிடவில்லை
தனக்கென குடும்பம் எதுவுமின்றி
எமக்காக நேர்ந்துவிட்ட சுமையாக
எப்போதும் பிரச்சினைகளைத்
தந்துகொண்டே
வாழ்ந்து முடித்தவர்!

இருப்புகளுக்கான இடங்களை
நகர்த்தும் போதெல்லாம்
மேலதிகமான சுமை
எம் நெஞ்சை நசிக்கும்
அசாதாரண மனிதன் ஒருவனை
காலம் முழுக்கக் கட்டிக்கொண்டு செல்வது
அவ்வளவு சாதாரணமானதல்ல...
வறுமையில் படிப்புகளைத் தொலைத்து
போரோடு இணந்து போய்விடாமல்
பிடிவாதமாக நின்ற தம்பிகளுக்கும்
இவரது இருப்பு வெறுப்பைத் தந்தது...

கண்டவர்களிடமெல்லாம்
கையேந்தி குடிக்கான பணம் தேடி
கோயில் மணியடித்து...
இடைக்கால பக்தனாக
திருவிழாப் பொழுதுகளில் வீதியில் நின்று
மனிதர்களால் வெறுக்கப்பட்டவர்!

ஒரு கண்ணால் மட்டும்
உலகைப்பார்த்து
'சொத்தி' என
ஏளனம் செய்த மனிதர்களுக்கு
கல்லால் அடித்து தன்னைக்
கர்வப்படுத்திக் கொண்டவர்
எல்லோரும் எள்ளி நகையாட
ஒரு மனநலம் குறைந்தவராக
தன்னை உளம் மாற்றிக்கொண்டார்.

ஆலயங்களில் யாசகமும்
மனிதர்களிடம்
இரஞ்சுவதுமாக முழுமையான
வாழ்வை முறையின்றி
வாழ்ந்துமுடித்தவர்...
இயலாதவர் என்று எண்ணாமல்
இளமை செலுத்தும் வாகனம்
அவரை இடுப்போடு
ஒடித்துவிட்டுப்போனது!

தொடர் குண்டுகளுக்கும்
வெடித்துவிழும் செல்களுக்கும்
இரையாகிப்போகாமல்
எல்லாவற்றுக்கும் தப்பி
மற்றவர்கள் வெறுத்து ஒதுக்கும்
வாழ்வு நிலைக்குத் தள்ளப்பட்டார்
எழுந்து நடக்கமுடியாத மனிதர்கள்
பராமரிக்கப்படாமல்
பாதுகாப்பற்றவர்களாக வாழும்
கொடிய வாழ்வை போர்
அவருக்கு கொடுத்தது
இதனால் நாமும் ஒடிந்து போனோம்.
யாருமில்லா உறவொன்றைக்
காப்பாற்றவேண்டிய கடமையை
பரம்பரைகள் எமக்குப்
படிப்பித்தன....
இதனால் ஒரு பாரம்
எங்கள் தலைமீது திணிக்கப்பட்டது!

ஒருவேளை உணவுக்காக
அந்தரித்து இடம்பெயர்ந்தபோது
தங்க இடமின்றித் தவித்து
மனநலம் குன்றி
மனிதக் குணங்களைத் தொலைத்து
வாழ்வின்மீதும் கடவுள்மீதும்
வெறுப்பைச் சொரிந்து
கட்டிலில் கிடந்து
உயிர்போக முடியாமல்
அவஸ்தைப்பட்ட
அந்த நாள்கள் வாழ்வின்
முழுமையான பாடங்களைக்
கற்பித்து முடித்தன.

உறங்குவதற்கு பாய் இல்லை
உடுப்பதற்கு நல்ல உடை இல்லை
தெருவில் அலங்கோலமாக
திரிந்தவர்க்கு...
ஆத்மசாந்திக்காக
பணத்தை அள்ளித் தெளிக்கின்றோம்!
ஒருவேளை உணவைப் பசிதீர
புசிக்கக்கொடுப்பதற்கு
நாம் தயாராக இல்லை
ஏகதட்டைக்கு குடை, செருப்பு
பாய், தலையணை, உடை என
வரிசையாக அவரது
ஆத்மாவின் பயணங்கள்
பணக்கட்டுகளை அள்ளித்தெளித்து
ஆராதிக்கப்படுகின்றன.

கொள்ளிபோடுவதற்கு பிள்ளையில்லை
தண்ணீர் கொடுக்க மனைவியில்லை
எல்லாம் போர் கொண்டு போனவை
போக்கிடமில்லாமல்
அலைந்தவர் இறந்தால்
கடன் பட்டேனும் காரியம் செய்
இல்லையென்றால்
ஆத்மா சாபமிடும் என்று சொல்லியே
சாந்திக்கான பணத்தை
சல்லடைபோட்டு
சலித்து மூடை மூடைடையாக
பிராமணர்களுக்கு
அள்ளிக்கொடுக்கிறோம்
வாழ்வின்போது விரும்பியதை
உண்ணக்கொடுக்காமல்
இறந்தபின் விரும்பியதெல்லாம்
சமைத்துப்படைத்து
சாமியின் பெயராலும்
ஆவியின் பெயராலும்
கூடி இருந்து
உண்டு முடிக்கிறோம்
இதுதான் எமக்கான
வாழ்க்கைத் தத்துவங்கள்.

'மாதுளானுக்கான சில்லறைக்காசு'
மந்திரங்கள் கேட்கின்றன..
சட்டென நினைவு திரும்ப
மணிக்கணக்கான சிந்தனைகளின்
மௌனம் கலைகிறது....
சில்லறைக்காசுகளைக் குவிக்கிறோம்!

இயமன் வருவது உணர்ந்து
கட்டிலுக்குக் கீழும் ....
இருளின் வாழ்விலும் ஒளித்து
மெல்ல மெல்ல உயிர் மடிய
சொட்டுச்சொட்டாய் உயிர்
பிரியமுடியாமல்.....
உடல் வேதனையோடு இழுத்து
அண்டம் திறக்க
அள்ளிப்பால் சொரிந்து
கடவாய் சரிந்து ...
கண்முழி பிதுங்கி
வீட்டின் முகட்டை முழித்துப் பார்த்து
வரமாட்டேன் என்பதாய்
கால்களையும் கைகளையும்
இழுத்து இழுத்து .....
உடல் உபாதைகொண்டு
அந்த மரணத்தின் வலியைப்
பார்ப்பது வலி
உயிர் ஒன்று எத்தனை வலியோடு
இவ்வுலகை விட்டுப் பிரிகிறது!
எத்தனை ஆயிரம் , இலட்சம்
உயிர்கள் இந்த மண்ணிலிருந்து
விருப்பமின்றி பிரிந்து போயின...
மரணத்தின் போதான
கொடுமையிலும்

வலியிலும்....
வடுக்களிலும் வதைந்து
மெல்ல மெல்ல அவை மறைந்து
போயின...

ஒரு சூல் சனித்து உருவமாகி
உயிர் கொண்டாட எடுக்கும்
காலங்களைப்போலவே
மரணங்களும் இயற்கையாக
மெல்ல மெல்ல நிகழ்கின்றன...
ஆனால் இந்தப்போர்...
தான் நினைத்தபோதெல்லாம்
மனித வாழ்வுகளை மாற்றி
மரணங்களைக் கணக்கில்லாமல்
நிகழ்த்தியிருக்கிறது..
இது இயற்கைக்கு மாறானது...
அது பொறுத்துக்கொள்ளாது
இயற்கையின் சீற்றம் .....
போரைத் தூண்டியவர்களையும்
இயற்கைக்கு மாறானவர்களையும்
தண்டித்தே தீரும்....
அதற்கான காலம் வரும்!

மாதுளானின் பிண்டம்
எரியூட்டப்படுகிறது
மெல்ல மெல்ல அது
கடலோடு சங்கமிக்கிறது....
காக்கைகளும் மீன்களும்
பிண்டத்தை பிய்த்து மொய்க்கும்
நாங்கள் குளித்துவிட்டு வீடு
போகலாம்
எங்கள் துடக்குக் கழிந்தது
அந்த ஆத்மா தன் இடத்தை
அடைந்தது.
இந்த மண்ணில்
உயிர்பிரிந்த அனைவருக்கும்
இந்த இறுதிக்காரியங்கள்
செய்யப்பட்டதா?
அவர்களது ஆத்மா அமைதி
பெற்றதா?

ஆனந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கைவண்ணம்






ஜெ.பவசயன்
தரம் - 12
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.



ஆ.அஸ்வின்
தரம் - 6c
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.



மு.பூர்ணிகா
தரம் 3
யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி




பி.ஜீவிதா
தரம் 3
யா/ மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலை

**மாணவர்களே!**

நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555



# பேராசை பெருநஷ்டம்

கந்தசாமி என்ற ஓர் ஏழை தன் மனைவியுடன் சிறு குடிசை ஒன்றில் வாழ்ந்து வந்தான். வயதாகி விட்டதால் வேலைக்கும் செல்ல முடியாது போகவே, தங்களிடம் இருந்த பொருள்களை விற்றுச் சாப்பிட வேண்டி ஏற்பட்டது. நாள்கள் செல்லச்செல்ல அவர்கள் உண்ண உணவின்றித் தவித்தனர்.

இந்நிலையில் அவன் ஆண்டவனை நோக்கி... "இறைவா எங்களை ஏன் இப்படிப் படைத்தாய்...இது இப்படியே நீடித்தால்....வறுமை தாங்காது...நாங்கள் இறப்பதைத் தவிர வேறு வழியில்லை" என வேண்டினான்.

அவன் மீது இரக்கம்கொண்ட இறைவன் அவன் முன் தோன்றி அவனின் குறைகளைத்தீர்க்க அவனுக்கு வாத்து ஒன்றைப் பரிசளித்தார். அந்த வாத்து தினம் ஒரு பொன் முட்டை இடும் என்றும் அதை விற்று அன்றாடம் குடும்பத்துக்கு தேவையானவற்றை வாங்கி வாழ்நாளைக் சந்தோஷமாக கழிக்கலாம் என்றும் கூறி மறைந்தார்.

வாத்து தினம் ஒவ்வொரு பொன் முட்டையிட அவர்கள் அதனை விற்று வாழ்க்கையை இனிதாகக் கழிந்தனர்.

ஒரு நாள் கந்தசாமியின் மனைவி தன் கணவனிடம் சென்று 'தினம் தினம் இந்த வாத்து ஒவ்வொரு பொன் முட்டையே இடுகின்றது. இப்படியே இருந்தால் நாம் எப்படிப் பெரிய பணக்காரர் ஆவது என்று சொல்லி, இந்த வாத்தின் வயிற்றில் இருக்கும் எல்லா முட்டைகளையும் நாம் எடுத்தால் அதை விற்று பெரிய பணக்காரர் ஆகிவிடலாம் என்று சொன்னாள். இதைக்கேட்ட கந்தசாமிக்கும் அது சரியெனத் தோன்றியது.

உடனே, கந்தசாமி அந்த வாத்தைப் பிடித்து வாத்தின் வயிற்றில் இருக்கும் எல்லா முட்டைகளையும் எடுக்க வாத்தைக் கொன்று அதன் வயிற்றைக் கிழித்தான். "ஆ" என்ன ஆச்சரியம் அந்த வாத்தின் வயிற்றில் ஒருமுட்டையுமே இருக்கவில்லை. அதன் வயிறில் மற்றைய வாத்துகள்போல் வெறும் குடலே இருந்ததைக் கண்டு ஏங்கினர்.

தினம் ஒரு பொன்முட்டையிட்ட வாத்து இறந்துவிட்டதால், வறுமை அவர்களை மீண்டும் சூழ்ந்துகொண்டது. தங்கள் பேராசையே பெரும் தரித்திரத்தை தந்தது என மனம் வருந்தி ஏழ்மையாகவே வாழ்ந்து உண்ண உணவின்றி இறந்தனர். ஆசை அளவுக்கு மிஞ்சினால் அது பேராசை. பேராசை பெரு நஷ்டத்தையும் கஷ்டத்தையும் தரும்.

# காற்றாலைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் அது காற்றாலை வேண்டாம் என்று கேட்டுப் போராடிய மன்னார் மக்களின்மீது பலத்தைப் பிரயோகித்துள்ளது. அதற்கு எதிராகக் கடந்த திங்கட்கிழமை நடந்த போராட்டத்தில் அரகலயப் போராட்டத் தலைவர்களும் இணைந்திருக்கிறார்கள். இதன்மூலம் என்.பி.பி. வேறு தாங்கள் வேறு என்று அவர்கள் காட்டக்கூடும்.

காற்றாலைகளின் விடயத்தில் தமது மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் போதிய அளவுக்கு எதிர்ப்புக் காட்டவில்லை என்ற ஒருகுறை மன்னார் மாவட்டச் செயற்பாட்டாளர்கள் மத்தியில் முன்பு இருந்தது. அந்தப்பகுதி அரசியல் தலைமைத்துவம் இது தொடர்பில் மக்களுக்கு வழிகாட்டத் தவறிவிட்டது. அதனால் அங்கு ஏற்கனவே பலமாக உள்ள மதத் தலைமைத்துவத்தின் வழிகாட்டலே தீர்மானகரமானதாகக் காணப்படுகின்றது. எனினும் கடந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது. பொது வேட்பாளரை முன்னிறுத்திய அணி மன்னாரில் நகரப் பகுதியில் நடத்திய கூட்டத்தின் போது. ஒருவர் அங்கே மன்னார் மக்களின் கவலைகளைப் பிரதிபலித்தார். காற்றாலை,கடலட்டை இரண்டும் ராஜதந்திரப் பொருள்களாகிவிட்டன என்று கூறிய அவர், காற்றாலை,கடலட்டை, கனிமவள அகழ்வு போன்றவை தமிழ் மக்களின் நில உரிமை,கடல் உரிமை போன்ற கூட்டு உரிமைகளோடு சம்பந்தப்பட்டவை என்றும்,எனவே அதில் தமிழ் மக்களின் விருப்பத்துக்கு மாறாக முடிவுகள் எடுக்கப்படக்கூடாது என்றும் தெரிவித்திருந்தார். இப்பொழுது அரசாங்கம், மக்கள் மீதும் மதகுருக்கள்மீதும் பலப் பிரயோகத்தைச் செய்தபின் விவகாரம் உணர்ச்சிகரமானதாகி விட்டது. தமிழ்த்தேசியக் கட்சிகள் உட்பட பெரும்பாலான கட்சிகள் மன்னார் மக்களின் பக்கம் நிற்கின்றன. இப்பொழுது போராட்டம் பரந்தளவில் மக்கள் மயப்பட்டுவிட்டது. அரசாங்கத்தின் பலப்பிரயோகம் அதைப் பலப்படுத்தி விட்டது. தன்னெழுச்சிப் போராட்டங்களின் விளைவாக வந்த ஓர் அரசாங்கம் இந்த விடயத்தில் என்ன முடிவை எடுக்கும்? தனது வெளிநாட்டுப் பயணத்தில் ஜனாதிபதி கதைத்த கவர்ச்சியான,அலங்காரமான சொற்களைக் கொண்ட உரைகள் யாவும், கடந்த வெள்ளிக்கிழமை மன்னார் மக்கள்மீது பொலிஸார் பலத்தைப் பிர யோகித்த போது பொருள் இழந்து போய்விட்டன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org